بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11

இதழ் 19 & 20

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1447 - 19 - 26 துல்கஅதா

ஹிஜ்ரி ஷம்ஸி 1405 - ஹிஜ்ரி 07 - 14 ★ 07 - 14 மே 2026


## அல்லாஹ்வின் கட்டளை

وَعَدَ اللّٰہُ الَّذِیۡنَ اٰمَنُوۡا مِنۡکُمۡ وَ عَمِلُوا الصّٰلِحٰتِ لَیَسۡتَخۡلِفَنَّہُمۡ فِی الۡاَرۡضِ کَمَا اسۡتَخۡلَفَ الَّذِیۡنَ مِنۡ قَبۡلِہِمۡ ۪ وَ لَیُمَکِّنَنَّ لَہُمۡ دِیۡنَہُمُ الَّذِی ارۡتَضٰی لَہُمۡ وَ لَیُبَدِّلَنَّہُمۡ مِّنۡۢ بَعۡدِ خَوۡفِہِمۡ اَمۡنًا ؕ یَعۡبُدُوۡنَنِیۡ لَا یُشۡرِکُوۡنَ بِیۡ شَیۡئًا ؕ وَ مَنۡ کَفَرَ بَعۡدَ ذٰلِکَ فَاُولٰٓئِکَ ہُمُ الۡفٰسِقُوۡنَ

அல்லாஹ் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (24:56)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபித்துவ வழியில் கிலாஃபத்

عَنۡ حُذَیۡفَۃَ رَضِیَ اللّٰہُ عَنۡہُ قَالَ: قَالَ رَسُوۡلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ
وَسَلَّمَ تَکُوۡنُ النُّبُوَّۃُ فِیۡکُمۡ مَاشَآءَ اللّٰہُ اَنۡ تَکُوۡنَ ثُمَّ یَرۡفَعُہَا اللّٰہُ
تَعَالٰی ثُمَّ تَکُوۡنُ خِلَافَۃٌ عَلٰی مِنۡہَاجِ النُّبُوَّۃِ مَاشَآءَ اللّٰہُ اَنۡ تَکُوۡنَ ثُمَّ
یَرۡفَعُہَا اللّٰہُ تَعَالٰی ثُمَّ تَکُوۡنُ مُلۡکًا عَاضًّا فَتَکُوۡنُ مَاشَآءَ اللّٰہُ اَنۡ تَکُوۡنَ
ثُمَّ یَرۡفَعُہَا اللّٰہُ تَعَالٰی ثُمَّ تَکُوۡنُ مُلۡکًا جَبۡرِیَّۃً فَیَکُوۡنُ مَاشَآءَ اللّٰہُ اَنۡ
تَکُوۡنَ ثُمَّ یَرۡفَعُہَا اللّٰہُ تَعَالٰی ثُمَّ تَکُوۡنُ خِلَافَۃٌ عَلٰی مِنۡہَاجِ النُّبُوَّۃِ ثُمَّ

ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் நாடுகின்றவரை உங்களிடத்தில் நபித்துவம் நிலைத்திருக்கும். பின்னர் நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைபெறும். பின்னர் அல்லாஹ் நாடும்போது அந்த அருட்கொடையை எடுத்துக் கொள்வான். பின்னர் கொடுங்கோல் ஆட்சி நிலைபெறும்; அது அல்லாஹ் நாடுகின்றவரை நிலைபெற்றிருக்கும். இந்த காலகட்டம் முடிந்து விடும்போது இதை விட அதிகமான அநீதி இழைக்கக் கூடிய அரசாட்சி நிலைபெறும்; அல்லாஹ் நாடுகின்றவரை அது நிலைபெற்றிருக்கும்; பின்னர் அநீதியான இந்த காலகட்டம் முடிவடைந்து விடும்; அதன் பிறகு நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைபெறும். இவ்வாறு கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாகி விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுஸைஃபா பின் யமான் (ரலி) அவர்களை விளித்து இவ்வாறு கூறினார்கள்

நீர் அல்லாஹ்வின் கலீஃபாவை பூமியில் கண்டால் பின்னர் அவரை உறுதியுடன் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; உமது உடல் துண்டு துண்டாக்கப்பட்டாலும், உமது செல்வம் பறிக்கப்பட்டு விட்டாலும் சரியே!

(முஸ்னத் அஹ்மது பின் ஹன்பல், ஹதீஸ் எண்: 221916)

"""""""

## இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும் அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனவே அன்பிற்குரியவர்களே ! ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளைக் காட்டுகிறான். எனவே இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டுவிடுவது சாத்தியமில்லை. எனவே நான் உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ற விஷயங்களில் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலை அடைய வேண்டாம். ஏனெனில், அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும் அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் (குறிப்பிடப்பட்டு) உள்ளது. மேலும் அவ்வாக்குறுதி என்னைப் பற்றி அல்ல ; மாறாக உங்களைப் பற்றியதாகும். நான் உம்மை பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான்.

எனவே என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வரவேண்டியது அவசியமானதாகும். அதற்குப் பிறகு நிரந்தரமான வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மையானவனும், நன்றியுள்ளவனும் உண்மையாளனுமாவான். அவன் வாக்குறுதியளித்த எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டுவான். இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாளாகும். பல துன்பங்கள் இறங்கும் காலமாகும். ஆனாலும், இறைவன் தெரிவிக்கின்ற செய்திகள் அனைத்தும் நிறைவேறும் வரை இந்த உலகம் நிலைபெற்றிருக்கும்.

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன்.

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் ...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

தலையங்கம்

## உலக சமுதாயங்களை ஒரே சமுதாயமாக ஆக்குவதற்கான வழிமுறை அஹ்மதிய்யா கிலாஃபத்

அவன் அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்) என்ற சூரா அல் ஜுமுஆவின் 4-ம் வசனத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளக்கம் அளித்தவாறு சமுதாய ஒற்றுமை சிதறுண்ட பிறகும் ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்றடைந்து விடும்போது, பாரசீக வம்சத்தை சார்ந்த நபர்கள் மூலம் சமுதாயம் மீண்டும் ஒன்று கூடும் என்று குறிப்பிட்டுள்ளார்கள் பின்னர் ஓர் இடத்தில் அன்னார் (ஸல்) கூறினார்கள்:

சமுதாயத்தில் நபித்துவத்திற்கு பிறகு கிலாஃபத் நிலைபெறும். பின்னர் கொடுங்கோல் ஆட்சி இருக்கும். அதற்குப் பிறகு கருத்து வேறுபாடு, பிரிவினை மற்றும் கொலை, கொள்ளைக்கான காலகட்டம் துவங்கிவிடும். இறுதியில் பின்னர் மீண்டும் நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைபெறும். ( மிஷ்காத்)

திருக்குர்ஆனின் சூரா ஜுமுஆ வசனம் மற்றும் மேற்குறிப்பிட்ட ஹதீஸிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஒரு காலத்தில் ஈமான் உலகிலிருந்து மறைந்து கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விடும். மேலும் முஸ்லிம்களுக்கு அந்த நாட்கள் மிகவும் கடினமானதாக இருக்கும். தஜ்ஜால் வெளிப்படுவான். முஸ்லிம்கள் மீது எல்லா புறமிருந்தும் தாக்குதல்கள் நடைபெறும். முஸ்லிம்கள் பரஸ்பரம் பிரிவினையால் பலவீனம் அடைந்து விடுவார்கள். எல்லா சமுதாயங்களும் இஸ்லாத்தை அழிப்பதற்கான முயற்சியில் ஈடுபடும். அப்படிப்பட்ட நேரத்தில் இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக வாளின் மூலமாக வெற்றி கிடைக்காது; மாறாக , இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவார்; அவர் வாள் ஏந்தாமல் இஸ்லாத்தின் மகத்துவமிக்க ஆன்மீக சான்றுகள் என்ற வாளால் இஸ்லாத்தை மற்ற எல்லா மார்க்கங்களின் மீதும் மேலோங்கச் செய்வார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றி அவர் போர்களை முடிவிற்கு கொண்டு வந்து விடுவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வெளிப்பாட்டைக் குறித்து செய்தி வழங்கியவாறு கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேற்குறிப்பிட்ட முன்னறிவிப்பிற்கு ஏற்ப, அல்லாஹ் தனது அருளால் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை மஸீஹாகவும் மஹ்தியாகவும் ஆக்கி அனுப்பியுள்ளான். இஸ்லாமிய மார்க்கத்தின் வெற்றியானது தெளிவான ஆதாரங்களையும் பிரகாசமான சான்றுகளையும் சார்ந்துள்ளது. (அந்த வெற்றி) இந்த எளியவனின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது; அது இந்த எளியவன் உயிரோடிருக்கும்போதோ அல்லது எளியவனின் மறைவுக்குப் பிறகோ நிகழலாம். (பராஹீனே அஹ்மதிய்யா பக்கம் 498-499)

1905 ஆம் ஆண்டு அன்னார் (அலை) எழுதியிருந்த தமது உயில் என்ற நூலில் தமது மரணத்திற்கு பிறகு நிலைபெறக்கூடிய அஹ்மதிய்யா கிலாஃபத் இந்த வெற்றிக்கு ஒரு மகத்துவமிக்க காரணியாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். மேலும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும் அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் (குறிப்பிடப்பட்டு) உள்ளது. மேலும் அவ்வாக்குறுதி என்னைப் பற்றி அல்ல : மாறாக உங்களைப் பற்றியதாகும். நான் உம்மை பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான்.

எனவே என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வரவேண்டியது அவசியமானதாகும். அதற்குப் பிறகு, நிரந்தரமான வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மையானவனும், நன்றியுள்ளவனும் உண்மையாளனுமாவான். அவன் வாக்குறுதியளித்த எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டுவான். இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாளாகும். பல துன்பங்கள் இறங்கும் காலமாகும். ஆனாலும், இறைவன் தெரிவிக்கின்ற செய்திகள் அனைத்தும் நிறைவேறும் வரை இந்த உலகம் நிலைபெற்றிருக்கும்.

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும், எனக்கு பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். (அல் வஸிய்யத்)

மேலும் கூறினார்கள்:

அவன் இந்த இயக்கத்திற்கு முழுமையான முன்னேற்றத்தை வழங்குவான் என்றும், அவற்றில் சில எனது கரங்களாலும் மற்றும் சில நான் மறைந்த பிறகும் நிறைவேறும் என்றும் இறையறிவிப்புகள் எனக்குத் தெரிவிக்கின்றன.

இது இறைவனின் நடைமுறையாகும். அவன் மனிதனை பூமியில் படைத்த நாளிலிருந்தே எப்போதும் இந்த நடைமுறையை வெளிப்படுத்தி வந்துள்ளான். நிச்சயமாக நானும் எனது தூதரும் வெற்றி பெற்றே தீருவோம். (58:22) என அல்லாஹ் எழுதி வைத்துள்ளான் என்று அவன் கூறியதற்கிணங்க அவன் தனது நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் உதவி செய்கிறான்; அவர்களுக்கு வெற்றியை வழங்குகின்றான். இங்கு வெற்றி என்பதன் கருத்து, எவ்வாறு நபிமார்களும், தூதர்களும் விரும்பினார்களோ அவ்வாறே இறைவனின் உண்மையான அடையாளம் பூமியில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும் அதனை எவரும் எதிர்த்து நிற்க முடியாமலாக வேண்டும் என்பதும் ஆகும்.எனவே இறைவன் வல்லமை மிக்க அடையாளங்களுடன் அவர்களது உண்மையை வெளிப்படுத்துகிறான். மேலும், எந்த நேர்வழியை அவர்கள் உலகில் பரப்ப விரும்புகின்றார்களோ அதற்கான விதையை அவர்களது கைகளாலேயே அவன் விதைத்து விடுகின்றான். ஆனால், அவர்களது கைகளால் அதனை முழுமையாக நிறைவு செய்ய அவன் வைப்பதில்லை. மாறாக, வெளிப்படையில் தோல்வி என்னும் அச்சத்தை தன்னுள் கொண்டுள்ள ஒரு நேரத்தில் அவர்களுக்கு மரணத்தைக் கொடுத்து, எதிரிகளுக்கு எள்ளி நகையாடவும் பழிச்சொற்களையும் அவதூறுகளையும் கூறுவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடுகின்றான். அவர்கள் எள்ளி நகையாடி, பரிகாசம் செய்த பிறகு மீண்டும் தனது வல்லமையின் மற்றொரு கையை காட்டுகின்றான். (அல் வஸிய்யத் நூல்: பக்கம் 10 -14)

இந்த வெற்றிக்கு அன்னார் (அலை) ஒரு கால அளவை நிர்ணயித்துள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

தற்போது மூன்றாவது நூற்றாண்டு இன்றைய நாளில் இருந்து முழுமை பெற்று இருக்காது; அந்நிலையில் ஈஸாவை எதிர்பார்க்கக் கூடிய முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் கடும் நிராசை மற்றும் தப்பெண்ணத்திற்கு இரையாகி அந்த பொய்யான கொள்கையை கைவிட்டு விடுவார்கள். மேலும் உலகில் ஒரேயொரு மார்க்கமே இருக்கும்; ஒரேயொரு தலைவரே இருப்பார். நான் ஒரு விதை விதைப்பதற்காகவே வந்துள்ளேன். எனவே எனது கையினால் அந்த விதை விதைக்கப்பட்டு விட்டது. இனி அது வளரும்; மலரும்; அதனை தடுப்பவர் எவரும் இல்லை.

(தத்கிரத்துஷ் ஷஹாதத்தைன், ரூஹானீ கஸாயீன், தொகுதி 20 பக்கம் 67)

அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்கு பிறகு 1908 ஆம் ஆண்டு, மே மாதம் 27ஆம் தேதி அஹ்மதிய்யா

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் ...

# ஜுமுஆ பேருரை

**ஏகத்துவத்தின் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டிருந்த துடிப்பு**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கையிலிருந்து ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்**

**முஸ்லிம் சமுதாயத்திற்கு உண்மையான ஏகத்துவத்தை புரிவதற்கும் அதன்படி அமல் செய்வதற்கும் நற்பேறு கிடைப்பது தொடர்பாக துஆவிற்கான அறிவுரை**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல் முன்மாதிரி, துடிப்பு மற்றும் துஆக்களின் விளைவாகவே ஸஹாபிகளும் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்கும் வகையில் உயர்ந்த நிலையை எட்டினார்கள்

மக்காவாசிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், முஸ்லிம்களையும் ஏளனமாக 'ஸாபி' என்று அழைத்து வந்தனர்

என் இறைவா! என் ஆற்றலின் பலவீனத்தையும், என் தந்திரமின்மையையும், மக்கள் மத்தியில் நான் சிறுமைப்படுத்தப்படுவதையும் உன்னிடமே முறையிடுகிறேன். என் இறைவா! நீயே கருணையாளர்களுக்கெல்லாம் பெரும் கருணையாளன். பலவீனமானவர்களுக்கும், இயலாதவர்களுக்கும் நீயே பாதுகாவலன்; நீயே என் ரட்சகன்! என்று அன்னார் (ஸல்) அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 மார்ச் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அமான்** மாதம் **13 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து இரு வாரங்களுக்கு முன்புள்ள குத்பாவில் (கூறும்போது), ஏகத்துவத்தை நிலைநாட்டுவதில் அன்னார் (ஸல்) கொண்டிருந்த துடிப்பு குறித்து எடுத்துரைத்திருந்தேன். இந்த நோக்கத்தை நிலைநாட்டவே அன்னார் (ஸல்) இவ்வுலகிற்கு வந்தார்கள். இந்த துடிப்பு அன்னாரின் சொல் மற்றும் செயல்கள் மூலம் வெளிப்படுவது மட்டுமன்றி, அன்னார் தம்முடைய ஸஹாபிகளிடத்திலும், தம்மை ஒப்புக் கொண்டவர்களிடத்திலும் ஏகத்துவத்திற்காக எல்லாவித தியாகத்தையும் செய்யத் துணியும் எவ்வாறான ஓர் ஆன்மாவை ஊட்டியிருந்தார்கள் என்றால், அதற்கு இணையான உதாரணத்தை நாம் காண முடியாது.

எவ்வாறிருப்பினும், இன்றும் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் இதே அம்சம் குறித்தே எடுத்துரைப்பேன். இது தொடர்பாக சில ஸஹாபிகளின் தியாகங்கள் பற்றிய குறிப்பும் (இதில்) இடம் பெற்றுவிடும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல் முன்மாதிரி, துடிப்பு மற்றும் துஆக்களின் விளைவாகவே ஸஹாபிகளும் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்கும் வகையில் உயர்ந்த நிலையை எட்டினார்கள்.

ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சந்தித்த இன்னல்கள் குறித்து ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது:

எங்கள் தெய்வங்களைக் குறித்து நீங்கள் இவ்வாறு கூறினீர்கள்தானே? என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், ஒருமுறை இணை வைப்பாளர்கள் கேட்டனர். அதற்கு, ஆம்! என்று அன்னார் (ஸல்) பதிலளித்தார்கள். உடனே அவர்கள் அன்னாரைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் சென்று, உமது நண்பரின் நிலையைச் சென்று பாரும்! என்று ஒருவர் கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் புறப்பட்டுச் சென்று மஸ்ஜிதுல் ஹராமை சென்றடைந்தார்கள். அங்கு மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சூழ்ந்து கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (அம்மக்களைப் பார்த்து), உங்களுக்குக் கேடு உண்டாகட்டும்! என்று கூறினார்கள். பின்னர் திருக்குர்ஆனில் வருகின்றது, அன்னார் (ரலி) கூறினார்கள்:

أَتَقْتُلُوْنَ رَجُلًا أَنْ يَّقُوْلَ رَبِّيَ اللّٰهُ
وَقَدْ جَآءَكُمْ بِالْبَيِّنٰتِ مِنْ رَّبِّكُمْ

அதாவது, 'என் இறைவன் அல்லாஹ் என்று கூறுகின்ற ஒரே காரணத்திற்காக நீங்கள் ஒரு மனிதரைக் கொலை செய்யப் போகின்றீர்களா? அவர் உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் தெளிவான சான்றுகளையும் கொண்டு வந்துள்ளார்.(அல் மூஃமின்: 29)

இதைக் கேட்டவுடன் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட்டுவிட்டு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கிப் பாய்ந்து அவர்களைத் தாக்கத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களிடம் வந்தபோது, அவர்கள் தம் தலைமுடியைத் தொட்டால் அது கையில் வந்துவிடும் நிலையில் இருந்தது. அந்த அளவிற்கு அவர்கள் முடியை வேரோடு பிடுங்கியிருந்தனர். அத்தகு நிலையிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், மகத்துவமும், கண்ணியமும் மிக்கவனே! நீயே அருள் மிக்கவன் ஆவாய் என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

மற்றோர் அறிவிப்பில், அந்த மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய தலையையும், தலை முடியையும் பிடித்து எந்த அளவுக்கு கடுமையாக இழுத்தார்கள் என்றால், அதனால் அன்னாரின் பல முடிகள் உதிர்ந்தன என்றும் வருகிறது.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரைக் காப்பதற்காக எழுந்து நின்றார்கள். அவர்கள் அழுது கொண்டே,

أَتَقْتُلُوْنَ رَجُلًا أَنْ يَّقُوْلَ رَبِّيَ اللّٰهُ

என்று கூறினார்கள்.

பொருள்: என் இறைவன் அல்லாஹ் என்று

கூறுவதற்காகவா ஒரு மனிதரை நீங்கள் கொல்லப் பார்க்கிறீர்கள்? என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அபூபக்ரே! அவர்களை விட்டுவிடும். என் உயிர் எவன் வசமுள்ளதோ அவன் மீது ஆணையாக! நான் தியாகம் செய்யப்படுவதற்காகவே அவர்களின் பால் அனுப்பப்பட்டுள்ளேன் என்று கூறினார்கள்.

அதாவது, மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அநீதியிழைத்துத் தாக்கிக் கொண்டிருந்த வேளையில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இடையில் வந்தபோது, அவர்களை நீர் விட்டு விடும்! என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதேபோன்று, ஹாரிஸ் பின் ஹாரிஸ் காமிதி எனும் அறிவிப்பாளர், குறைஷிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அநீதியிழைப்பதைக் கண்டு, தம் தந்தையிடம் இம்மக்கள் யார்? என்று கேட்டார்.

இது போன்ற சம்பவங்கள் ஓரிரு முறை மட்டுமே நிகழ்ந்தது என்று கிடையாது. மாறாக, எண்ணற்ற முறை நிகழ்ந்துள்ளன. இவை அனைத்தும் ஒரே போலுள்ள சம்பவங்கள் ஆகும். பலரும் இதைக் கண்டுள்ளார்கள்; இதை எடுத்துரைத்துள்ளார்கள்: பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. சில அறிவிப்புகளில் விரிவாகவும், சிலவற்றில் சுருக்கமாகவும் உள்ளன.

எவ்வாறிருப்பினும், (அறிவிப்பாளர்) தம் தந்தையிடம், அநீதியிழைக்கும் அந்த மக்களைப் பற்றி கேட்டபோது, 'இம்மக்கள் ஒரு 'ஸாபி'யைச் சூழ்ந்து நின்று கொண்டிருக்கிறார்கள்' என்று அவர் கூறினார்.

மக்காவாசிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், முஸ்லிம்களையும் ஏளனமாக 'ஸாபி' என்று அழைத்து வந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: 'நாங்கள் எங்கள் சவாரியிலிருந்து இறங்கிப் பார்த்தபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்களுக்கு ஏகத்துவத்தின் பக்கமும், அல்லாஹ்வின் மீதான ஈமானின் பக்கமும் அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களோ அன்னாரை நிராகரிப்பதோடு துன்புறுத்தியும் வந்தார்கள். எந்த அளவுக்கென்றால், மதியம் ஆகி விட்டது. பிறகு அன்னாரைச் சூழ்ந்திருந்த மக்கள் விலகிச் சென்றனர்.'

அன்னார் (ஸல்) அனுபவித்த இன்னல்கள் குறித்துப் பல்வேறு வரலாற்று நூல்களில் பதிவாகியுள்ளது. அவற்றிலிருந்து தொகுத்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களும் தமது 'தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன்' எனும் நூலில் ஓரிடத்தில் இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கடைவீதி வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, மக்காவின் போக்கிரி கும்பல் ஒன்று அன்னாரைச் சூழ்ந்து கொண்டது. வழிநெடுகிலும் அன்னாரின் பிடரியில் அடித்துக்கொண்டே, மக்களே! இதோ இவர்தான் தன்னை ஒரு நபி என்று கூறுகிறார் என்று ஏளனம் செய்தார்கள்.

அன்னாரின் வீட்டிற்குள் அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து தொடர்ந்து கற்கள் வீசப்பட்டன. அசுத்தமான பொருட்கள் அன்னாரின் வீட்டிற்குள் எறியப்பட்டன. சமைக்கும் இடங்களில் கூட ஆடு, ஒட்டகங்களின் குடல்கள் போன்ற அசுத்தமான பொருட்கள் வீசப்பட்டன. அன்னார் தொழும்போது அன்னார் மீது புழுதி கிளப்பப்பட்டது; மண் அள்ளி வீசப்பட்டது. எந்த அளவிற்கு என்றால், வேறு வழியின்றி ஒரு மலையின் பாறை இடுக்கின் கீழ் மறைந்து நின்று அன்னார் தொழ வேண்டியிருந்தது. ஆனால், ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக அன்னாரின் உள்ளத்தில் இருந்த அந்த துடிப்பு ஒரு கணமும் குறையவில்லை; அதற்காக அன்னார் மீது பல்லாயிரக்கணக்கான ஸலவாத்துகளும் அருள்களும் உண்டாகட்டும்! அந்த அனைத்து இன்னல்களையும் அன்னார் மிகுந்த மனமகிழ்வோடும் இன்முகத்தோடும் ஏற்றுக் கொண்டார்கள். இவ்வளவு நடந்த பிறகும் மனிதகுலத்தின் மீதான அன்னாரின் அன்பிலும் கருணையிலும் கடுகளவும் குறைவு ஏற்படவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: 'ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை நாம் பார்க்கும்போது, இந்த வாதம் ஒரு நிதர்சனமான உண்மையாகத் தெரிகிறது. மனிதகுலத்தின் மீது அன்னார் கொண்டிருந்த அந்த மகத்தான அன்பிற்கும் கருணைக்கும் சான்றாக விளங்கும் சம்பவங்களை நாம் ஒவ்வொரு அடியிலும் காண்கிறோம். அந்த ஏக இறைவனின் செய்தியை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக, எல்லைகளற்ற துயரங்களை பல ஆண்டுகளாக அன்னார் அனுபவிக்க வேண்டியிருந்தது. ஒருமுறை கஃபத்துல்லாஹ்வில் காஃபிர்கள் அன்னாரின் கழுத்தில் ஒரு துணியைப் போட்டு மிகக் கடுமையாக இறுக்கினார்கள். அதனால் அன்னாரின் கண்கள் சிவந்து பிதுங்கின. ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் இதைக் கேள்விப்பட்டதும் ஓடி வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் இத்தகைய துன்பத்தில் இருப்பதைக் கண்டு அவர்கள் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. அந்த காஃபிர்களை அப்புறப்படுத்தியவாறே, 'அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்! என் இறைவன் அல்லாஹ் என்று கூறுவதற்காகவா நீங்கள் அவருக்கு அநீதியிழைக்கிறீர்கள் என்று கூறினார்கள்.'

ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமில் நின்று கொண்டு மக்காவின் முஷ்ரிக்குகளை நோக்கி, 'லா இலாஹ இல்லல்லாஹ் - அல்லாஹ்வைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்று கூறுங்கள்; நீங்கள் வெற்றியடைவீர்கள்' என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் குறைஷிகள் அன்னார் மீது பாய்ந்தார்கள். ஒருவர் சத்தமிட்டுக் கொண்டே அன்னாரைத் தாக்க வந்தபோது, ஹாரிஸ் பின் அபீ ஹாலா அவர்களே முதன்முதலாக அன்னாரை வந்தடைந்தார்கள். ஹாரிஸ் அவர்கள் அந்த மக்களுடன் சண்டையிட்டு அவர்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து அப்புறப்படுத்தினார்கள். அதன் பிறகு அவர்கள் அனைவரும் ஹாரிஸ் அவர்கள் மீது பாய்ந்து அவர்களை ஷஹீத் ஆக்கிவிட்டார்கள்.

ஏகத்துவத்தைப் பிரச்சாரம் செய்த குற்றத்திற்கு தண்டனையாக மக்காவின் காஃபிர்கள் அன்னாரையும் அன்னாரின் குடும்பத்தாரையும் 'ஷிஃபே அபீ தாலிப்' (எனும் பள்ளத்தாக்கி)ல் மூன்று ஆண்டுகள் சிறை வைத்தனர். அனைத்து வகையான சமூகப் புறக்கணிப்புகளும் அவர்கள் மீது செய்யப்பட்டன. அந்தத் தடை நீங்கியபோது, ஒருபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னரை விட அதிக மன உறுதியுடனும் துணிவுடனும் ஏகத்துவப் பிரச்சாரத்தை மக்கா முழுவதும் பரப்பியபோது, மறுபுறம் குறைஷிகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது மீண்டும் அநீதிகளையும் சித்திரவதைகளையும் அரங்கேற்றத் தொடங்கினார்கள்.

அன்னாரின் தாயிஃப் பயணமும் ஒரு புகழ்பெற்ற சம்பவமாகும். இது குறித்தும் ஏற்கனவே பலமுறை

கூறப்பட்டுள்ளது. அங்கு அன்னார் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அநீதிகள் வரலாற்றில் பல்வேறு விதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களும் ஓரிடத்தில் இவ்வாறு எழுதுகிறார்கள்:

'ஷிஃபே அபீ தாலிப் முற்றுகை விலகி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சுதந்திரமாக நடமாடும் வாய்ப்பு கிடைத்தபோது, தாயிஃபுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுக்க அன்னார் (ஸல்) நாடினார்கள்.'

இது ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டிருந்தாலும், இதில் சில கூடுதல் விவரங்கள் உள்ளன.

தாயிஃப் என்பது மக்காவிலிருந்து தென்கிழக்கே நாற்பது மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு புகழ்பெற்ற இடமாகும். அங்கு 'பனூ சகீஃப்' எனும் கோத்திரத்தினர் வசித்து வந்தனர். கஃபாவின் சிறப்பம்சத்தைத் தவிர்த்துப் பார்த்தால், தாயிஃப் நகரம் அந்தஸ்தில் மக்காவிற்கு இணையாகக் கருதப்பட்டது. அங்கு செல்வாக்கு மிக்கவர்களும், பெரும் பெரும் செல்வந்தர்களும் வசித்து வந்தனர். தாயிஃபின் இந்த முக்கியத்துவத்தை மக்காவாசிகளே ஒப்புக்கொண்டிருந்தனர். இதைப் பற்றி மக்காவாசிகள் கூறியது திருக்குர்ஆனில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது:

அதாவது, 'இந்தக் குர்ஆன் இறைவனிடமிருந்து வந்ததாக இருந்தால், மக்கா அல்லது தாயிஃபின் ஏதேனும் ஒரு பெரிய மனிதர் மீது இது ஏன் இறக்கப்படவில்லை? (என்பது அவர்களின் வாதமாக இருந்தது)

எவ்வாறிருப்பினும், நுபுவ்வத்தின் பத்தாம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃப் நகருக்குத் தனியாகச் சென்றார்கள்; அல்லது சில அறிவிப்புகளின்படி ஸைது பின் ஹாரிஸா அவர்களும் உடன் சென்றார்கள். அங்கு சென்றடைந்ததும் அன்னார் பத்து நாட்கள் தங்கி, நகரின் தலைவர்களை அடுத்தடுத்துச் சந்தித்துப் பேசினார்கள். ஆனால் அந்த நகரத்தின் நற்பேறிலும், மக்காவைப் போலவே அப்போது யாரும் ஈமான் கொள்வது விதிக்கப்படவில்லை. எந்தளவுக்கென்றால், அனைவரும் நிராகரித்ததோடு ஏளனமும் செய்தார்கள்.

இறுதியாக, அன்னார் (ஸல்) தாயிஃபின் மிகப் பெரும் தலைவரான 'அப்து யஃலீல்' என்பவனிடம் சென்று இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தார்கள். ஆனால் அவனும் அதனை தெளிவாக நிராகரித்ததோடு கேலி செய்யும் தொனியில், 'நீர் உண்மையாளர் என்றால், உம்மோடு பேசுவதற்கு எனக்குத் தகுதியில்லை; நீர் பொய்யர் என்றால், உம்மோடு பேசுவது வீணானது' என்று அன்னாருக்கு இவ்வாறு பதிலளித்தான். மேலும், அன்னாருடைய பேச்சுகள் நகரின் இளைஞர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்திவிடுமோ என்று அஞ்சி, 'நீர் இங்கிருந்து செல்வதே நல்லது; ஏனெனில் உமது பேச்சை இங்கு யாரும் கேட்பதற்குத் தயாராக இல்லை' என்று கூறினான்.

அதன்பின்னர், அந்தத் துரதிஷ்டசாலி நகரின் விஷமிகளை அன்னாருக்குப் பின்னால் ஏவிவிட்டான். அன்னார் நகரை விட்டு வெளியேறியபோது, அந்தக் கூட்டத்தினர் கூச்சலிட்டுக் கொண்டே பின்னால் வந்து கற்களை வீசத் தொடங்கினர். அதனால் அன்னாரின் உடல் முழுவதும் இரத்தத்தால் நனைந்தது. தொடர்ச்சியாக மூன்று மைல் தூரம் வரை அவர்கள் அன்னாரை ஏசிக்கொண்டும் கற்களை வீசிக்கொண்டும் வந்தார்கள். தாயிஃபிலிருந்து மூன்று மைல் தொலைவில் மக்காவின் தலைவனான உத்பா பின் ரபீஆவின் தோட்டம் ஒன்று இருந்தது. அன்னார் (ஸல்) அத்தோட்டத்திற்குள் சென்று தஞ்சம் புகுந்தார்கள்; அநீதியிழைத்த அந்த மக்கள் களைப்படைந்து திரும்பிச் சென்றனர்.

அங்கு ஒரு நிழலில் நின்றுகொண்டு அன்னார் (ஸல்) அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اللَّهُمَّ إِلَيْكَ أَشْكُو ضَعْفَ قُوَّتِي وَقِلَّةَ حِيلَتِي، وَهَوَانِي
عَلَى النَّاسِ اللَّهُمَّ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ
أَنْتَ رَبُّ الْمُسْتَضْعَفِينَ وَأَنْتَ رَبِّي

என் இறைவா! என் ஆற்றலின் பலவீனத்தையும், என் தந்திரமின்மையையும், மக்கள் மத்தியில் நான் சிறுமைப்படுத்தப்படுவதையும் உன்னிடமே முறையிடுகிறேன். என் இறைவா! நீயே கருணையாளர்களுக்கெல்லாம் பெரும் கருணையாளன். பலவீனமானவர்களுக்கும், இயலாதவர்களுக்கும் நீயே பாதுகாவலன்; நீயே என் ரட்சகன்! என்று துஆ செய்தார்கள்.

தொடர்ந்து அந்த துஆவில், 'இருள்களை அகற்றி, மனிதனை இம்மை மற்றும் மறுமையின் நன்மைகளுக்கு வாரிசாக்குகின்ற உனது முகத்தின் ஒளியைக் கொண்டே நான் உன்னிடத்தில் பாதுகாப்புத் தேடுகிறேன்' என்று வேண்டினார்கள்.

உத்பாவும், ஷைபாவும் அப்போது அந்தத் தோட்டத்தில் இருந்தார்கள். அன்னாரை இந்த நிலையில் கண்டபோது, தூரத்து உறவு முறை அல்லது கோத்திர உணர்வு காரணமாக, அல்லது வேறு ஏதோ ஒரு எண்ணத்தினால், அத்தாஸ் என்ற பெயர் கொண்ட ஒரு கிறிஸ்தவ அடிமையின் மூலமாக ஒரு தட்டில் சில திராட்சைப் பழங்களை வைத்து அன்னாரிடம் அனுப்பி வைத்தார்கள். அன்னார் அதைப் பெற்றுக்கொண்டு அத்தாஸிடம், 'நீ எந்த ஊரைச் சேர்ந்தவன்? உனது மார்க்கம் என்ன?' என்று கேட்டார்கள். அதற்கு அவன், 'நான் நைனுவாவைச் சேர்ந்தவன்; மார்க்கத்தால் கிறிஸ்தவன்' என்று கூறினான். அதற்கு அன்னார் (ஸல்), 'இறைவனின் நல்லடியார் யூனுஸ் பின் மத்தி அவர்கள் வாழ்ந்த அதே நைனுவாவா? என்று கேட்டார்கள். அத்தாஸ் வியப்புடன், ஆம் : ஆனால், உங்களுக்கு யூனுஸ் அவர்களைப் பற்றி எப்படித் தெரியும்? என்று கேட்டார். அதற்கு, அன்னார் (ஸல்) அவர் என் சகோதரர்; ஏனெனில், அவரும் அல்லாஹ்வின் ஒரு நபி, நானும் அல்லாஹ்வின் ஒரு நபி தான் என்று கூறினார்கள். பின்னர் அன்னார் (ஸல்) அவருக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துரைத்தார்கள். அது அவர் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் கலப்பற்ற தன்மையுடன் அன்னாரின் கைகளை முத்தமிட்டார்.

இந்தக் காட்சியைத் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த உத்பாவும், ஷைபாவும், அத்தாஸ் திரும்பியதும் அவரிடம், 'அத்தாஸ்! உமக்கு என்னவாயிற்று? ஏன் அந்த மனிதரின் கைகளை முத்தமிடுகிறாய்? அந்த மனிதர் உனது மார்க்கத்தைச் சீரழித்து விடுவார். உனது மார்க்கமோ அவருடைய மார்க்கத்தை விடச் சிறந்தது' என்று கூறினார்கள்.

சிறிது நேரம் அந்தத் தோட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓய்வெடுத்த பிறகு அங்கிருந்து புறப்பட்டு மக்காவிலிருந்து ஒரு நாள் பயணத் தொலைவில் உள்ள நக்லா எனும் இடத்தை அடைந்தார்கள். அங்கு சில நாட்கள் தங்கியிருந்தார்கள். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஹிரா மலைக்கு வந்தார்கள். தாயிஃப் பயணத்தின் வெளிப்படையான தோல்வி காரணமாக மக்காவாசிகள் இன்னும் துணிச்சலடைந்து மேற்கொண்டு அநீதி இழைக்கக்கூடும் என்ற அச்சம் இருந்ததால், அன்னார் அங்கிருந்தபடியே 'முத்இம் பின்

அதீ' என்பவருக்கு ஒரு செய்தி அனுப்பினார்கள். 'நான் மக்காவிற்குள் நுழைய விரும்புகிறேன். இதற்கு நீங்கள் எனக்கு உதவ முடியுமா?' என்பதே அச்செய்தியாகும்.

முத்இம் ஒரு தீவிரமான காஃபிராக இருந்த போதிலும் அவரிடம் நல்லியல்பு இருந்தது. இத்தகு சூழலில் உதவி கோருபவரை நிராகரிப்பது அரபுச் சான்றோர்களின் இயல்புக்கு மாறானதாகும். எனவே, அவர் தனது மகன்களையும் உறவினர்களையும் அழைத்துக் கொண்டு, ஆயுதம் ஏந்திய நிலையில் கஃபாவிற்கு அருகில் நின்றுகொண்டார். பின்னர் அன்னாரை வரச்சொல்லித் தகவல் அனுப்பினார். அன்னார் வந்து கஃபாவைத் தவாஃப் செய்தார்கள். அங்கிருந்து முத்இம் மற்றும் அவரது பிள்ளைகளின் வாள் ஏந்திய பாதுகாப்பில் தமது இல்லத்திற்குள் நுழைந்தார்கள்.

வழியில் அபூஜஹ்ல், முத்இமை இந்த நிலையில் கண்டு வியப்புடன், அமுஜீரூன் அம் தாபிஉன் என்று கேட்டான்.

அதாவது, நீ முஹம்மது (ஸல்) அவர்களுக்கு தஞ்சம் மட்டும் அளிக்கிறாயா? அல்லது அவரைப் பின்பற்றிவிட்டாயா? அதற்கு முத்இம், 'நான் தஞ்சம் அளிப்பவன் மட்டுமே; பின்பற்றுபவன் அல்ல' என்று கூறினார். அதற்கு அபூஜஹ்ல், அப்படியானால் சரி, அதில் எந்த ஆட்சேபனையுமில்லை என்று கூறினான். முத்இம் இறுதிவரை குஃப்ர் நிலையிலேயே மரணமடைந்தார். ஆயினும் அவர் இந்த நன்மையை செய்திருந்தார்.

ஹதீஸில் வருகிறது: ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், உஹத் யுத்தத்தின் நாளை விடவும் அதிக துன்பமான நாளை தாங்கள் எதிர்கொண்டதுண்டா என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்), 'ஆயிஷா! உனது சமுதாயத்தால் நான் பல பெரும் பெரும் கடுமையான தருணங்களைச் சந்தித்திருக்கிறேன்' என்று கூறிவிட்டு, பின்னர் தாயிஃப் பயணத்தின் போது நேர்ந்த இன்னல்களைக் குறிப்பிட்டார்கள்.

அந்தப் பயணத்திலிருந்து நான் திரும்பிக்கொண்டிருந்த போது, மலைகளின் வானவர் என்னிடம் வந்து, அல்லாஹ் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளான்; தாங்கள் கட்டளையிட்டால் வலப்புறமும், இடப்புறமும் சூழ்ந்துள்ள இந்த இரு மலைகளையும் அவர்கள் மீது மோதச் செய்து அவர்களை அழித்துவிடுகிறேன்; அவர்கள் மீது விழச் செய்து அவர்களை அழித்து விடுகிறேன்' என்று கூறினார். அதற்கு அன்னார் (ஸல்), வேண்டாம்! இவர்களின் சந்ததியிலிருந்து ஏக இறைவனை வணங்கக் கூடியவர்களை அல்லாஹ் உருவாக்குவான் என்று நான் நம்புகிறேன் என்றார்கள்.'

அன்னாரிடம் மனிதகுலத்தின் மீதான பரிவும் கருணையும் மேலோங்கி இருந்தது; அத்தோடு அம்மக்களின் சந்ததியினர் ஒருநாள் இஸ்லாத்தை ஏற்று ஏகத்துவத்தில் நிலைத்திருப்பார்கள் என்ற முழுமையான நம்பிக்கையும் அன்னாரிடம் இருந்தது.

ஏகத்துவத்திற்காக அன்னார் (ஸல்) அனுபவித்த இன்னல்கள் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:

'ஏகத்துவத்தைப் பிரச்சாரம் செய்த காரணத்தினாலேயே எதிரிகளால் அன்னாருக்கு அனைத்துத் துன்பங்களும் இழைக்கப்பட்டன. அன்னார் (ஸல்) அடிக்கப்பட்டார்கள்; நாய்களும், சிறுவர்களும் அன்னாருக்குப் பின்னால் ஏவிவிடப்பட்டனர். ஒருமுறை அன்னார் (ஸல்) தாயிஃப் சென்றிருந்தபோது, அங்கிருந்த மக்கள் அன்னாரை எந்த அளவிற்கு அடித்தார்கள் என்றால், தலைமுதல் கால்வரை இரத்தத்தால் நனைந்து போனார்கள். இதைப் பற்றி சற்று முன் நான் கூறியிருந்தேன். அன்னார் (ஸல்) வேதனையினால் மயங்கி விழுவார்கள்; ஆனால் மீண்டும் எழுந்திருக்கும் போது மக்கள் மீண்டும் அன்னார் மீது கற்களை வீசுவார்கள். அத்தகு நிலையிலும் அன்னாரின் நாவிலிருந்து, இறைவா! இவர்களை மன்னித்துவிடு; ஏனெனில் இவர்கள் உண்மையை அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்ற வார்த்தைகளே வெளிப்பட்டன.

இத்தகு சூழ்நிலையை கடக்க நேர்ந்தபோதிலும் அன்னார் ஏகத்துவப் பிரச்சாரத்தைக் கைவிடவில்லை. அம்மக்கள் எதைச் செய்தாலும் என்னால் ஏகத்துவப் பிரச்சாரத்தை விட முடியாது என்றே கூறிவந்தார்கள். பின்னர் அன்னாரின் மரணம் நெருங்கிய வேளையிலும், எனக்குப் பிறகு ஷிர்க் செய்துவிடாதீர்கள் என்று அறிவுறுத்தியவாறே விடைபெற்றார்கள். அதாவது, அன்னாரது முழு வாழ்வும் ஏகத்துவத்தில் இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேலும் எழுதுகிறார்கள்: 'அல்லாஹ் தனது ஏகத்துவத்திற்கான சான்றை அன்னாருடைய பிறப்பிற்கு முன்னரே அன்னாரின் தந்தையை மரணமடையச்செய்தும், பிறந்த பிறகு அன்னாரின் தாயாரை மரணமடையச்செய்தும் வழங்கினான் என்பது எனது கருத்து. அன்னாருடைய பெற்றோரின் மறைவு என்பது உண்மையில் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கான அல்லாஹ்வின் விருப்பமாகவே இருந்தது. அன்னாரின் ஆரம்பகால இயலாத நிலையில் தந்தையும் இருக்கவில்லை; தாயாரும் இருக்கவில்லை. இவ்வாறான நிலையில் அல்லாஹ் அன்னாருக்கு வழங்கிய மகத்தான முடிவு ஏக இறைவனின் இருப்புக்கு மிகப் பெரிய சான்றாக விளங்கியது. அல்லாஹ்வின் எந்த ஏகத்துவத்தை அன்னார் பிரச்சாரம் செய்தார்களோ அதுவே குழந்தைப் பருவம் முதல் இறுதி வரை அன்னாரைப் பாதுகாத்தது என்பது இதன் மூலம் உறுதியாகிறது.'

அரபுச் சந்தைகளிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தப்லீக் செய்த குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏகத்துவத்தை நிலைநாட்ட மக்காவில் தனிப்பட்ட முறையிலும், குழுவுடனும் தப்லீக் கடமையை நிறைவேற்றி வந்தார்கள். இது தவிர, அரேபியாவின் சில சந்தைகளுக்கும் சென்று அங்கு(ள்ள மக்களுக்கு) ஏக இறைவனின் பக்கம் வருமாறு செய்தியை எடுத்துரைப்பார்கள். மக்காவிற்கு வெளியே பல்வேறு இடங்களில் மக்கள் ஒன்று கூடுவார்கள்; அங்கு வியாபாரமும் நடைபெறும்; மக்களும் கூடுவார்கள். அவற்றை அஸ்வாகுல் அரப் என்று அழைப்பார்கள். இந்திய பாகிஸ்தான் கலாச்சாரத்தில் இதனை சந்தை என்று கூறுவார்கள். இவ்வாறான சந்தைகள் அங்கு நடைபெறும். உக்காஸ் மிஜன்னா மற்றும் ஸூல் மஜாஸ் ஆகியவை குறைஷிகள் மற்றும் அரேபியர்களின் சந்தைகளாக இருந்தன. இவற்றுள் உக்காஸ் சந்தை மிகப் பெரியதாகும். இது மக்காவிலிருந்து மூன்று நாட்கள் பயணத் தொலைவில் இருந்தது. ஷவ்வால் மாதம் முழுவதும் அரேபியர்கள் அங்கு தங்குவார்கள். பின்னர் மக்காவிலிருந்து சில மைல் தொலைவில் உள்ள மர்ருஸ் ஸஹ்ரான் எனும் இடத்தில் அமையும் மிஜன்னா சந்தைக்குச் சென்று அங்கு ஸூல்கஃதா மாதம் 20 ஆம் தேதி வரை தங்குவார்கள். அதன் பிறகு அரஃபா மைதானத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள ஸூல் மஜாஸ் சந்தைக்குச் சென்று ஹஜ்ஜூடைய நாட்கள் வரை அங்கு தங்குவார்கள். இந்த இடங்கள் அனைத்திற்கும் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தப்லீக் செய்வார்கள். ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

'ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவில் பத்து ஆண்டுகள் தங்கியிருந்தார்கள். ஹஜ்ஜுடைய நாட்களில் உக்காஸ் மற்றும் மிஜன்னா சந்தைகளுக்குச் சென்று அங்குள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் தங்குமிடங்களுக்கும் தேடிச் சென்று மக்களுக்கு அழைப்பு விடுப்பார்கள். 'எனது இறைவனின் செய்தியை எடுத்துரைக்க எனக்குத் தஞ்சம் அளிப்பவர் யார்? எனக்கு உதவக் கூடியவர் யார்? அவருக்கு சொர்க்கம் உண்டு' என்று அன்னார் கூறுவார்கள்.'

அறியாமைக் காலத்தை கண்டவரும், பின்னர் இஸ்லாத்தை ஏற்றவருமான ஹஸ்ரத் ரபீஆ பின் அப்பாத் கூறுகிறார்கள்: 'நான் ஸுல் மஜாஸ் சந்தையில் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எனது கண்களால் கண்டேன். அன்னார் (ஸல்) மக்களிடம், 'மக்களே! அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்று நீங்கள் கூறுங்கள்; நீங்கள் வெற்றியடைவீர்கள்' என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) சந்தையின் தெருக்களில் முன்னேறிச் சென்றார்கள்; மக்கள் அன்னாரைக் கண்டு கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், யாரும் அன்னாரின் பேச்சை ஏற்றுக்கொண்டதாக நான் காணவில்லை. இருப்பினும் அன்னார் (ஸல்) மௌனமாகி விடவில்லை; தொடர்ந்து மக்களிடம் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்று கூறுங்கள், நீங்கள் வெற்றி பெறுவீர்கள்' என்று கூறிக்கொண்டே இருந்தார்கள்.'

இந்த ஏகத்துவச் செய்தியைப் பரப்பியதற்காகப் அன்னாருக்கு நெருக்கமானவர்களிடமிருந்தும் அந்நியர்களிடமிருந்தும் பல இன்னல்களை அன்னார் எதிர்கொண்டார்கள். இதன் காரணமாக (ஒரு கட்டத்தில்) அன்னாரால் வெளிப்படையாகத் தொழக்கூட முடியவில்லை; ஏனெனில் எதிரிகள் தாக்குதல் நடத்திவிடுவார்கள் என்ற அச்சம் இருந்தது. இருப்பினும் அன்னார் தமது செய்தியைத் தொடர்ந்து மக்களிடம் கொண்டு சேர்த்தார்கள். இஸ்லாத்தை ஏற்றவர்கள் மீதும் அநீதிகள் இழைக்கப்பட்டன. தொழுகை மற்றும் இறைவணக்கங்கள் ஆகியவற்றை நிறைவேற்றுவது தொடர்பாக ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது:

ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் மக்காவின் மலை இடுக்குகளுக்குச் சென்று மக்களிடமிருந்து மறைவாகத் தொழுது வந்தார்கள். நீண்ட காலம் இவ்வாறு செய்து வந்தார்கள். பின்னர் இது குறித்து ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களுக்குத் தெரியவந்தது. இருவரும் தொழுவதைக் கண்ட அபூ தாலிப், ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடம், 'என் சகோதரர் மகனே! நீர் ஏற்றுக்கொண்டிருக்கும் இந்த மார்க்கம் எது?' என்று கேட்டார். அதற்கு அன்னார் (ஸல்), 'என் தந்தையின் சகோதரரே! இது அல்லாஹ்வின் மார்க்கம்; அவனது வானவர்கள், அவனது தூதர்கள் மற்றும் நம் தந்தை இப்ராஹீம் (அலை) ஆகியோரின் மார்க்கமாகும்' என்று கூறினார்கள். மேலும், 'அல்லாஹ் என்னை இந்த மார்க்கத்துடன் தூதராக அனுப்பி வைத்துள்ளான். என் தந்தையின் சகோதரரே! நான் உங்களுக்கு நற்போதனை வழங்கவும், உங்களை நேர்வழியின் பால் அழைக்கவும் நீங்கள் மற்றவர்களை விட தகுதியானவர். நீங்கள் இதனை ஏற்றுக்கொள்வதற்கும், எனது உதவியில் பங்கெடுப்பதற்கும் மிகவும் உரிமையுடையவர்' என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்கள், 'என் சகோதரர் மகனே! எனது முன்னோர்களின் மார்க்கத்தை என்னால் விட முடியாது. எனினும், நான் உயிரோடு இருக்கும் வரை எதிரிகளால் உமக்கு எந்தத் தீங்கும் நேராது. எவ்வாறிருப்பினும், நான் உமக்கு உதவி செய்வேன்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்கள் தமது மகன் அலீயிடமும், 'நீ எத்தகைய மார்க்கத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'நான் அல்லாஹ்வையும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீதும் ஈமான் கொண்டுள்ளேன். அன்னார் கொண்டு வந்தவற்றை உண்மைப்படுத்துகிறேன். அன்னாருடன் இணைந்து அல்லாஹ்வைத் தொழுகிறேன்' என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூ தாலிப், 'நிச்சயமாக அவர் உன்னை நன்மையின் பக்கமே அழைப்பார். எனவே நீ அவருடனேயே இரு' என்று தமது மகனுக்கு அறிவுறுத்தினார்கள்.

ஏற்கனவே நான் கூறியது போல, ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக ஸஹாபிகள் மீதும் பெரும் அநீதிகள் இழைக்கப்பட்டன. மக்காவின் குறைஷிகள் ஒருபுறம் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அரசியல் ரீதியாகவும் அச்சுறுத்தல் மூலமாகவும் இஸ்லாமியப் பிரச்சாரத்தை விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தடுக்க முயன்றனர். மறுபுறம், இஸ்லாத்தை ஏற்றவர்கள் மீது மிகக் கொடூரமான அநீதிகளையும் மிருகத்தனமான கொடுமைகளையும் அரங்கேற்றினர். அதை விவரிப்பதற்கு பேனாவுக்கும் வ◌மையில்லை; அதனை எடுத்துரைக்கும் துணிச்சலும் எவருக்கும் ஏற்படாது. அவ்வாறிருந்தும், எடுத்துரைக்கப்பட்டுள்ள சம்பவங்களுள் பல எவ்வாறு உள்ளன என்றால், அது ஒரு மனிதனை நிலைகுலையச் செய்யும் அளவுக்குக் கடுமையானவை.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்ட போது பல விதமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். மக்கள் அநீதியிழைப்பதில் தீவிரம் காட்டியபோது, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் 'அஹத், அஹத்' (இறைவன் ஒருவனே) என்று கூறிக்கொண்டிருப்பார்கள். 'நாங்கள் கூறுவது போல நீயும் கூறு' என்று அவர்கள் வற்புறுத்திய போது, 'நீங்கள் கூறுபவற்றை எனது நாவால் கூற இயலவில்லை' என்று ஹஸ்ரத் பிலால் அவர்கள் பதிலளித்தார்கள்.

மற்றோர் அறிவிப்பில், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் துன்புறுத்தப்பட்ட போது, இணை வைப்பாளர்கள் அவர்களைத் தங்கள் பக்கம் இழுக்க முயன்றனர். அப்போதும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் 'அல்லாஹ், அல்லாஹ்' என்றே கூறினார்கள்.

இன்னோர் அறிவிப்பில், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஈமான் கொண்ட போது, அவரது எஜமானர்கள் அவரைப் பிடித்துத் தரையில் கிடத்தி, அவர் மீது கற்களையும் பசுவின் தோலையும் போட்டார்கள். 'உமது இறைவன் லாத் மற்றும் உஸ்ஸா தான்' என்று அவர்கள் கூறச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் அப்போதும் 'அஹத், அஹத்' என்றே கூறி வந்தார்கள். அப்போது அங்கு அந்த எஜமானர்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் வந்தார்கள். 'எவ்வளவு காலம்தான் இந்த மனிதரைத் துன்புறுத்துவீர்கள்?' என்று கேட்டுவிட்டு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை ஏழு 'ஊக்கியா' கொடுத்து விலைக்கு வாங்கி விடுதலை செய்தார்கள். ஓர் ஊக்கியா என்பது நாற்பது திர்ஹம்கள் ஆகும். அதாவது 280 திர்ஹம்கள் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்கி விடுதலை செய்தார்கள். இவர்களைத் தவிர, ஹஸ்ரத் ஸுமையா, ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர், ஹஸ்ரத் கப்பாப் மற்றும் பல அடிமைகளும், சுதந்திரமான பல ஆண்களும்

பெண்களும் ஏகத்துவத்தை ஏற்ற காரணத்தினால் காஃபிர்களின் கொடூரமான சித்திரவதைகளுக்கு இலக்கானார்கள்.

மக்காவின் காஃபிர்கள் பலவீனமான முஸ்லிம்களைத் துன்புறுத்தி வந்தார்கள்தான்! அவர்கள் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களையும் கூட விட்டுவைக்கவில்லை. அதுபற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. இன்னும் சொல்லப்போனால், அனைவரையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே மிகக் கடுமையான துன்பங்களையும், வேதனைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எல்லோரையும் விட அதிகம் புகழப்பட்டவர் என்ற பொருள்படும் 'முஹம்மது' (ஸல்) என்ற அன்னாரின் பெயரைச் சிதைத்து, எல்லோரையும் விட அதிகம் இகழப்பட்டவர் என்ற பொருள்படும் 'முஸம்மம்' என்று அவர்கள் அழைத்தது எவ்வளவு பெரிய வேதனையாக இருந்திருக்கும் - நவூதுபில்லாஹ்! அந்த ஊரிலேயே எல்லோரையும் விட அதிகம் உண்மையாளராக விளங்கியவரைப் பொய்யர் என்று கூறினார்கள். அந்தச் சமூகத்தின் பெரும் நலன் விரும்பியை மோசடி செய்பவர் என்றும் பேராசைக்காரர் என்றும் ஏமாற்றுக்காரர் என்றும் அவர்கள் பழித்தார்கள். தமது இளமையையும் உடல் நலத்தையும், இரவும் பகலும் அந்த மக்களின் நல்வாழ்விற்காக அர்ப்பணித்தவரைப் பைத்தியம் என்றும் நோயாளி என்றும் கூறினார்கள். சில நேரங்களில் அன்னாரின் கழுத்தில் துணியைப் போட்டு மூச்சு நிற்கும் அளவுக்கு இழுப்பார்கள். சில நேரங்களில் கற்களை வீசுவார்கள்; அசுத்தமான பொருட்களை அன்னார் (ஸல்) மீது எறிவார்கள்.

உர்வா பின் ஸுபைர் அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் அவர்களிடம், இணை வைப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இழைத்த மிக மோசமான செயல் எது? என்று கேட்டேன். அதற்கு அவர் கூறினார்: 'ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமின் 'ஹத்தீம்' பகுதியில் தொழுது கொண்டிருந்தார்கள்.

அதாவது, கஃபாவிற்கு அருகிலுள்ள காலியான பகுதி ஆகும் அது. அதைச் சுற்றிலும் சிறிய சுவறு கட்டப்பட்டிருக்கும். அந்தப்பகுதிக்கு ஹத்தீம் என்று பெயர்.

அப்போது உக்பா பின் அபீ முஅய்த் அங்கு வந்து ஒரு துணியை அன்னாரின் கழுத்தில் போட்டு மிகக் கடுமையாக இறுக்கினான். அந்தச் சமயம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு வந்து, உக்பாவின் தோளைப் பிடித்துத் தள்ளிவிட்டு அன்னாரை விட்டு அவனை நீக்கினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், என் இறைவன் அல்லாஹ் என்று கூறும் ஒரு மனிதரையா நீங்கள் கொல்லப் பார்க்கிறீர்கள் என்று கேட்டார்கள்.

போர்க்களங்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏகத்துவத்திற்காக எப்போதும் தன்மானத்தை வெளிப்படுத்தியதை நாம் காண்கிறோம். பலமுறை இது தொடர்பாக கூறப்பட்டும் உள்ளது. உஹத் போரின் புகழ்பெற்ற சம்பவம் நாம் அறிந்ததே. அபூ ஸுஃப்யான், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டு, 'இவர்கள் உள்ளார்களா?' என்று கேட்டார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், யாரிடமும் பதில் சொல்ல வேண்டாம் என்று கூறினார்கள். ஏனெனில் அந்த நேரத்தில் பதில் கூறுவது முஸ்லிம்களின் பலவீனமான நிலையை வெளிப்படுத்தி அவர்களை ஆபத்தில் தள்ளக்கூடும் என்பதால் மௌனம் காக்குமாறு அன்னார் அறிவுறுத்தினார்கள்.

அதைக் கண்ட அபூ ஸுஃப்யான், 'ஹுபல் (சிலை) ஓங்குக!' என்று முழக்கமிட்டார். அவர் இதைக் கூறியதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொறுக்கமுடியாமல், 'இதற்குப் பதில் கூறுங்கள்' என்று கூறினார்கள். ஸஹாபிகள், 'நாங்கள் என்ன பதில் கூற வேண்டும்?' என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்), அல்லாஹ்வே மிக உயர்ந்தவன்; அவனே கண்ணியமிக்கவன் என்று கூறுங்கள் என்றார்கள். பின்னர் அபூ ஸுஃப்யான், 'எங்களுக்கு 'உஸ்ஸா' (சிலை) உண்டு. உங்களுக்கு உஸ்ஸா இல்லை' என்று கூறினார். அப்போதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'இதற்குப் பதில் கூறுங்கள்' என்றார்கள். (ஸஹாபிகளாகிய) அவர்கள், நாங்கள் என்ன கூறுவது என்று கேட்டபோது, அல்லாஹ்வே எங்கள் பாதுகாவலன்; உங்களுக்குப் பாதுகாவலன் எவரும் இல்லை என்று கூறுமாறு அன்னார் கட்டளையிட்டார்கள். அல்லாஹ்வின் இருப்பு பற்றியும் அவனுடைய ஏகத்துவத்தைப் பற்றியும் கேள்வி எழுந்தபோது, அன்னார் எந்த ஓர் ஆபத்தையும் பொருட்படுத்தவில்லை.

தவ்ஹீதின் மீதான தன்மானத்தின் காரணமாகத்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம்

اللہ اعلیٰ واجل اللہ اعلیٰ واجل

என்று முழங்குங்கள் என்றார்கள். நீங்கள் பொய் சொல்கிறீர்கள்; ஹுபல் சிலைக்கு எந்தப் பெருமையும் இல்லை; அல்லாஹ் ஒருவனே இணையற்றவன்; கண்ணியமானவன், அவனது அந்தஸ்தே மேலானது' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்றும் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதில் அன்னார் வகித்த இடத்தைக் குறித்து எழுதியுள்ள ஒரு மேற்கோளை இங்கு நான் வாசிக்கிறேன். இது நாம் மீண்டும் மீண்டும் வாசிக்கவும் கேட்கவும் வேண்டிய ஒன்று; தவ்ஹீது குறித்த சரியான ஞானத்தையும் புரிதலையும் நாம் எவ்வாறு பெற வேண்டும் என்பதற்கு இது ஒரு வழிகாட்டியாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய இந்த இறைத்தூதர் எவ்வளவு உயர்வான தகுதியைக் கொண்ட இறைத்தூதர் ஆவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கின்றேன். ஆயிரமாயிரம் அருள்களும் சாந்தியும் அவருக்கு உண்டாவதாக! அவருடைய உயரிய அந்தஸ்தின் எல்லையை கண்டறிய முடியாது. அவருடைய பரிசுத்தமாக்கும் தாக்கத்தைப் பற்றி அனுமானிப்பது மனிதனின் வேலையன்று. உண்மையைக் கண்டறிய வேண்டிய முறையில் அவருடைய உயர் அந்தஸ்து கண்டறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். உலகிலிருந்து மறைந்த அந்த ஏகத்துவத்தை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தவர் அந்த வீரர் ஒருவரே! அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவர் உயிரே உருகி விட்டது. எனவே அவருடைய உள்ளத்தின் இரகசியத்தை அறிந்திருந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் - முன்னவர் பின்னவர் அனைவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவருடைய குறிக்கோள்களை அவர் வாழ்நாளிலேயே நிறைவேற்றினான்.

இறைவன் மீது அன்னார் (ஸல்) கொண்டிருந்த நேசமும் எல்லையற்றது; படைப்பினங்கள் மீது அன்னார் (ஸல்) கொண்டிருந்த பரிவும் எல்லையற்றது. இது எவ்வளவு அழகான விஷயம்! மக்கள் இறைவனுக்கு நெருக்கமானவர்களாக மாற வேண்டும்; தவ்ஹீதில் நிலைத்திருக்க வேண்டும்;

தங்களின் இம்மை மறுமை வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அன்னாரின் இலக்காக இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:

அன்னாரே ஒவ்வோர் அருளுக்கும் தலையூற்றாக விளங்குகிறார்கள். அன்னாரது அருளைப் பெற்றுக்கொண்டதாக ஒப்புக் கொள்ளாமல் எவராவது ஒரு சிறப்பை உரிமை கொண்டாடினால், அவர் மனிதர் அல்ல; மாறாக ஷைத்தானின் சந்ததி ஆவார். ஏனெனில், ஒவ்வொரு சிறப்பிற்கும் உரிய திறவுகோல் அன்னாருக்கே வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஞானத்தின் பொக்கிஷமும் அன்னாருக்கே அருளப்பட்டுள்ளது. அன்னார் (ஸல்) மூலமாகப் பெறாதவன் நித்திய இழப்பிற்குள்ளானவன். நாம் என்ன? நமது உண்மை நிலை என்ன? இந்த நபியின் மூலமாகவே நாம் உண்மையான ஏகத்துவத்தைப் பெற்றோம்; உயிருள்ள இறைவனைப் பற்றிய ஞானம் இந்த முழுமையான நபியின் மூலமாகவும் அவரது ஒளியின் மூலமாகவுமே நமக்குக் கிடைத்தது என்று நாம் ஒப்புக் கொள்ளாவிட்டால் நாம் நன்றி மறந்தவர்களாகிவிடுவோம்.
அல்லாஹ்வின் முகத்தைக் காண்பதற்கு உதவும் அவனது உரையாடல்களைப் பெறும் பாக்கியத்தைப் பெறுவதற்கும் இந்த மாபெரும் நபியே காரணமாக இருந்தார். நேர்வழி எனும் இந்தச் சூரியனின் கதிர்கள் நம் மீது விழுகின்றன; நாம் அவருக்கு முன்னால் நிற்கும் வரை மட்டுமே ஒளியுடன் இருக்க முடியும்.

எனவே இறைவனைச் சென்றடையவும், உண்மையான ஏகத்துவத்தை அறியவும் இப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஒரே வழியாக இருக்கிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்: எந்த நபர்கள் இந்தத் தவறான எண்ணத்தில் பிடிவாதமாக இருக்கிறார்களோ, அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்ளாதவர் அல்லது மார்க்கத்தை விட்டு விலகிய ஒருவர், ஏகத்துவத்தில் நிலைத்திருந்து அல்லாஹ்வை இணையற்ற ஏகன் என்று அறிந்து கொண்டால் அவரும் இரட்சிப்பு பெற்றுவிடுவார் என்றும், ஈமான் கொள்ளாததாலோ அல்லது முர்தத் ஆனதாலோ அவருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் கருதுகிறார்களோ, அத்தகையவர்கள் உண்மையில் ஏகத்துவத்தின் உண்மையை பற்றியே அறியாதவர்கள் ஆவர். வெறுமனே இறைவனை ஏகன் என்று மட்டும் கருதுவதால் இரட்சிப்பு கிடைத்துவிடாது; மாறாக, இரட்சிப்பு என்பது இரண்டு விஷயங்களைப் பொறுத்தே அமைகின்றது.

1. முழுமையான உறுதியுடன் அல்லாஹ்வின் இருப்பு மற்றும் அவனது ஏகத்துவத்தின் மீது ஈமான் கொள்ள வேண்டும்.

2. அந்த ஏக இறைவனின் மீதான முழுமையான நேசம் ஒருவரது உள்ளத்தில் எவ்வளவு ஆழமாகப் பதிய வேண்டும் என்றால், அதன் ஆதிக்கத்தினால் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிதலே அவரது உயிருக்கு நிம்மதி தரக்கூடியதாக மாற வேண்டும்; அவனின்றி அவரால் வாழவே முடியாது என்ற நிலை ஏற்பட வேண்டும்.
அதாவது, அவரது நிலையில் இந்த அளவு இறை ஆதிக்கம் ஏற்பட்டு விட வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:

அவனது நேசம் மற்ற அனைத்து நேசங்களையும் அழித்துவிட வேண்டும். இத்தகைய உண்மையான ஏகத்துவம், நமது தலைவரும் எஜமானருமான முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதைத் தவிர வேறு எதன் மூலமும் கிடைக்காது. ஏன் கிடைக்காது? இதற்கான பதில் என்னவென்றால், இறைவனது இருப்பு என்பது மறைவிலும் மறைவானதும், எட்ட முடியாததற்கும் அப்பாற்பட்டதும், மிகவும் நுட்பமானதும் ஆகும்; மனித அறிவு அதனை தனது சுய ஆற்றலால் மட்டும் கண்டறிய முடியாது. எந்தவொரு தர்க்க ரீதியான ஆதாரமும் இறை இருப்பிற்கு அறுதியான சான்றாக முடியாது. ஏனெனில், அறிவின் ஓட்டமும் முயற்சியும், இவ்வுலகின் படைப்புகளைக் கண்டு ஒரு படைப்பாளன் இருக்க வேண்டும் என்ற தேவையை உணர்வதுடன் நின்றுவிடும். ஆனால் ஒரு தேவையை உணர்வது என்பது வேறு; அந்தப் படைப்பாளன் உண்மையில் இருக்கிறான் என்ற நிச்சய உறுதி நிலையை அடைவது என்பது வேறு விஷயமாகும்.

இவ்வுலகிற்கு ஒரு படைப்பாளன் இருக்க வேண்டும் என்று கூறுவது மட்டும் போதுமானதல்ல; மாறாக அவன் யார்? அவன் உயிருள்ள இறைவனா? என்பதை அறிய வேண்டுமானால், அந்த ஞானம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்திருப்பதன் மூலமே கிடைக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:

அறிவின் வழிமுறை குறைபாடுள்ளதாகவும், முழுமையற்றதாகவும் சந்தேகத்திற்குரியதாகவும் இருப்பதால், ஒவ்வொரு தத்துவஞானியாலும் வெறும் அறிவைக் கொண்டு இறைவனை அடையாளம் காண முடியாது. மாறாக, அறிவின் மூலம் மட்டும் இறைவனைத் தேடுபவர்கள் இறுதியில் இறைமறுப்பாளர்களாக மாறிவிடுகிறார்கள். பூமி மற்றும் வானத்தின் படைப்புகள் குறித்துச் சிந்திப்பது அவர்களுக்கு எவ்விதத்திலும் பயன் தருவதில்லை.

இதையே நாம் இக்காலத்தில் காண்கிறோம். முஸ்லிம்களிடையே கல்வி கற்ற பலர் நாத்திகர்களாக மாறி வருகின்றனர். இறை இருப்பை மறுக்கிறார்கள். ஏனெனில் இவ்விஷயம் அவர்களுக்குப் புரிவதில்லை. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து அன்னார் போதித்த விஷயங்களைக் குறித்துச் சிந்திக்காததே இதற்குக் காரணமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:

அவர்கள் அல்லாஹ்வின் முழுமையான மனிதர்களைப் பார்த்து எள்ளி நகையாடுகிறார்கள். இவ்வுலகில் எவ்வாறான ஆயிரக்கணக்கான பொருள்கள் காணப்படுகின்றன என்றால், அவற்றில் நமக்கு எந்தப் பலனும் இருப்பதாகத் தெரிவதில்லை என்றும், நமது அறிவுப்பூர்வமான ஆய்வின் மூலம் அவற்றில் படைப்பாளனை அடையாளப்படுத்தும் எவ்வித கைத்திறனும் நிரூபிக்கப்படுவதில்லை என்றும் அவர்கள் வாதிக்கிறார்கள். எந்த அளவுக்கென்றால், அத்தகைய பொருள்களின் இருப்பு வீணானது, தேவையற்றது என்று அவர்கள் கருதுகின்றனர். அந்தோ பரிதாபம்! அந்த அறிவிலிகள் புரிவதில்லை.

ஒரு படைப்பாளன் இல்லை என்பதற்கு அவர்கள் தரும் சான்று என்னவென்றால், ஒவ்வொரு பொருளிலும் ஏதேனும் ஒரு பயன் இருக்க வேண்டும் என்பதில்லை என்று கூறுகிறார்கள். உண்மையில் அவர்களுக்கு அந்தப் பொருளின் பயன் என்ன என்பது தெரியவில்லை. போதிய அறிவு இல்லாத காரணத்தினால் அவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள்.

அன்னார் (அலை) மேலும் கூறுகின்றார்கள்: தங்களை முதல் தரமான அறிவாளிகள் என்றும் தத்துவவாதிகள் என்றும் கருதிக்கொண்டு, இறைவனின் இருப்பையே கடுமையாக மறுக்கும் இத்தகைய மக்கள் இன்றைய காலத்தில்

இலட்சக்கணக்கில் காணப்படுகின்றனர். அவர்களுக்கு ஏதேனும் ஒரு வலுவான அறிவுப்பூர்வமான ஆதாரம் கிடைத்திருந்தால், அவர்கள் இறை இருப்பை மறுத்திருக்க மாட்டார்கள் என்பது வெளிப்படை. மேலும், இறைவனின் இருப்பு குறித்து ஏதேனும் உறுதிமிக்க அறிவுப்பூர்வமான சான்று அவர்களின் வாயை அடைத்திருந்தால், அவர்கள் இவ்வளவு வெட்கக்கேடாகவும், கேலியும், கிண்டலும் செய்துகொண்டு இறைவனை மறுக்க மாட்டார்கள். எனவே, எந்தவொரு நபரும் தத்துவவாதிகளின் படகில் ஏறிக்கொண்டு சந்தேகங்கள் எனும் புயலிலிருந்து தப்பித்துவிட முடியாது. அதில் அவர்கள் நிச்சயம் மூழ்கிப் போவார்கள். அவர்களுக்கு ஒருபோதும் தூய ஏகத்துவம் எனும் பானம் கிடைக்கப் போவதுமில்லை.

இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மத்தியஸ்தம் இன்றி ஏகத்துவம் கிடைத்துவிடும் என்றும், அதன் மூலம் மனிதன் இரட்சிப்பு பெற்றுவிடலாம் என்றும் கருதுவது எவ்வளவு தவறான, துர்நாற்றம் வீசக்கூடிய சிந்தனையாகும்! அறிவிலிகளே! இறைவனது இருப்பு குறித்து முழுமையான உறுதி ஏற்படாத வரை, அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி பிறக்க முடியும்? எனவே, உண்மையான ஏகத்துவம் நபியின் வாயிலாக மட்டுமே கிடைக்கும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நமது நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டின் இறைமறுப்பாளர்களுக்கும் மார்க்கமற்றவர்களுக்கும் ஆயிரக்கணக்கான விண்ணின் அடையாளங்களைக் காட்டி அவர்களை இறைவனின் இருப்பை ஏற்கச் செய்தார்கள். இன்று வரையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் அத்தகைய அடையாளங்களை இறைமறுப்பாளர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கிறார்கள்.

இன்றும் நாம் அடையாளங்கள் எடுத்து வைக்கிறோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:

உண்மையான விஷயம் என்னவென்றால், உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் நேரில் காணாத வரை, ஷைத்தான் அவனது உள்ளத்தை விட்டு வெளியேறவும் மாட்டான்; உண்மையான ஏகத்துவம் அவனது உள்ளத்தில் நுழையவும் செய்யாது. மேலும், இறைவனது இருப்பை ஒருவனால் உறுதியாக ஏற்கவும் முடியாது. இத்தகைய தூய, முழுமையான ஏகத்துவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது.

எனவே, இந்த உண்மையான ஏகத்துவத்தைத் தேடுவதற்கே நாம் முயற்சி செய்ய வேண்டும். நமது ஈமானை எத்தகைய உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றால், அங்கு நாம் எல்லாவித தியாகத்திற்கும் தயாராக இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் உண்மையான நேசத்தை நம்முள் உருவாக்க வேண்டும். இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏகத்துவப் பிரச்சாரத்தைத் தொடரவே அன்னாரின் உண்மை ஊழியராகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பியுள்ளான். நாம் அன்னாரிடம் பைஅத் செய்துள்ளோம். எனவே நாம் அதனுடைய உரிமையை செலுத்த வேண்டும் என்பதற்காக நாம் முழுமையாக முயற்சி செய்யவும் வேண்டும்; துஆவும் செய்ய வேண்டும். ஏகத்துவத்தை நிலைநாட்டுவதிலும் அதன் தன்மானத்திலும் நாம் அனைவருக்கும் முன்னே இருக்க வேண்டும் என்று ரமலானின் எஞ்சியுள்ள இந்த நாட்களில் நாம் குறிப்பாக துஆ செய்ய வேண்டும்.

அல்லாஹ் நமக்கு அதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! நமது பலவீனங்களை நீக்குவானாக!

முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள் என்று கடந்த குத்பாவிலும் கூறியிருந்தேன். அவர்களும் உண்மையான ஏகத்துவத்தை உணர்ந்து அதன்படி செயல்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் எஞ்சியிருக்க முடியும். அப்போதுதான் எதிரிகளின் தஜ்ஜாலிய சூழ்ச்சிகளிலிருந்து அவர்கள் தப்பிக்க முடியும். அல்லாஹ் அவர்களுக்கும் இதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக.

இன்றும் தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை நடத்துவேன். அது, ஜமாஅத் முரப்பியான மதிப்பிற்குரிய ஸிக்ருல்லாஹ் தாயோ ஸாஹிப் அவர்களுடையதாகும். அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு தமது 80 ஆவது வயதில் வஃபாத் ஆனார்கள். **இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.**

அல்லாஹ்வின் அருளால் அவர்கள் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அவர்கள் நைஜீரியாவைச் சேர்ந்தவர்கள். 1965 ஆம் ஆண்டு ஒரு கனவின் மூலமாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். 1966 ஆம் ஆண்டு கானாவில் உள்ள மிஷனரி ட்ரைனிங் கல்லூரியில் சேர்ந்து தனது ஆரம்பக் கல்வியை முடித்த பிறகு, 1969 இல் நைஜீரியா திரும்பினார்கள். ஒரு வருடம் அங்கு தொண்டாற்றிய பின், 1970 இல் ஷாஹித் பட்டத்திற்காக ரப்வாவில் உள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். 1977 ஆம் ஆண்டு மௌலவி ஃபாஸில் தேர்விலும் தேர்ச்சி பெற்றார்கள். 1979 இல் ஷாஹித் பட்டம் பெற்ற பிறகு, நைஜீரியா திரும்பி தனது தொண்டைத் துவங்கினார்கள்; மரணம் வரை அங்கேயே பணியாற்றினார்கள். சுமார் 47 ஆண்டுகள் மார்க்கத் தொண்டு புரியும் நல்வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது. நைஜீரியாவின் பல்வேறு இடங்களில் அவர்கள் பணியாற்றும் நல்வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்துள்ளது. நைஜீரியாவின் 'நாயிப் அமீர்' ஆகவும் தொண்டாற்றினார்கள். இதழியல் (Journalism) துறையில் முதுகலை பட்டம் பெற்றிருந்ததால், அது சார்ந்த பணிகளிலும் ஈடுபட்டு வந்தார்கள். நைஜீரியாவின் ஜாமிஅதுல் முபஷ்ஷிரீனுடைய முதல்வராகவும் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். முதலில் பொறுப்பு முதல்வராகவும், பின்னர் மூன்று நான்கு ஆண்டுகள் முழுநேர முதல்வராகவும் பணியாற்றினார்கள். மிகச்சிறந்த விளையாட்டு வீரராகவும் இருந்தார்கள். அவர்களுக்கு விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வம் இருந்தது; ஆயினும், அவர்கள் விளையாட்டை தமது இறைவணக்கங்களுக்கு ஒருபோதும் தடையாக இருக்க விட்டதில்லை. அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளர், மொழியியலாளர் மற்றும் கவிஞராகவும் திகழ்ந்தார்கள்.

அன்னாரின் மறைவுக்குப் பிறகு அவரது மனைவி, மூன்று மகன்கள் மற்றும் ஐந்து மகள்கள் உள்ளனர். அவர்களது இளைய மகன் அப்துல் முஜீப் ஸாஹிப் அவர்கள் தற்போது நைஜீரியாவில் ஜமாஅத்தின் முபல்லிஃக் ஆகவும், 'ரிவியூ ஆஃப் ரிலிஜன்ஸ்' நைஜீரியா கிளையின் ஒருங்கிணைப்பாளராகவும் தொண்டாற்றி வருகிறார்கள். அவரும் வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார்.

மிஷனரி இன்சார்ஜ் தாஹிர் அத்னான் ஸாஹிப் கூறுகிறார்: 'மர்ஹூம் அவர்கள் மிகுந்த பேணுதலுடையவராகவும், கீழ்ப்படிதலுடையவராகவும், ஜமாஅத் தொண்டுகளுக்காக எப்போதும் தயாராக இருப்பவராகவும் திகழ்ந்தார்கள். 20 ஆண்டுகளுக்கும் மேலாக

அவர்களை மிக அருகில் இருந்து பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அக்காலத்தில் அவர்களது உயரிய பண்பு, அடக்கம், பணிவு மற்றும் கிலாஃபத்துடனும் ஜமாஅத் அமைப்புடனும் அவர்கள் கொண்டிருந்த அசாத்திய நன்றியுணர்வு மற்றும் கீழ்ப்படிதலுக்குப் பல உதாரணங்களை நான் கண்டுள்ளேன். நான் இன்சார்ஜ் ஆக நியமிக்கப்பட்ட போது, அவர்கள் என்னை விட வயதில் மூத்தவராக இருந்த போதிலும், முழு நன்றியுணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் எனது சொற்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள்.'

அதேபோல், ஜமாஅத்தின் முரப்பியாகிய யூசுப் காலிக் ஸாஹிப் கூறுகிறார்: 'முதல்வர் என்ற முறையில் மாணவர்களின் தர்பியத் விஷயத்தில் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். மாணவர்களிடையே பொறுப்புணர்வை ஏற்படுத்தியதோடு, எந்தப் பணிக்காகவும் சாக்குப்போக்குகள் கூறக்கூடாது என்று எப்போதும் அறிவுறுத்தி வந்தார்கள். கலீஃபத்துல் மஸீஹின் அறிவுரைகளை உடனுக்குடன் செயல்படுத்துவதில் குறிப்பாக அழுத்தம் கொடுப்பார்கள். நடைமுறைப் பயிற்சிக்காக மாணவர்களைத் தப்லீக் பயணங்களுக்கும் அனுப்பி வைப்பார்கள். ஒவ்வொரு வேலைக்கும் தனது சொந்த முன்மாதிரியை முதலில் வெளிப்படுத்தினார்கள். இது மாணவர்களின் வாழ்வில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

நான் அவர்களை நேரில் பார்த்திருக்கிறேன். அவர்கள் மிகுந்த கலப்பற்ற எண்ணம் உடையவராகவும், நன்றியுணர்வுமிக்கவராகவும், பணிவுள்ள மனிதராகவும் இருந்தார்கள்.

அல்லாஹ் அவர்கள் மீது மன்னிப்பையும் கருணையையும் பொழிந்து, அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக!

தமிழாக்கம்
முபல்லிஃக்
A.P.A. தாரிக் அஹ்மது

****** *** **

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்று (1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், எனக்கு பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள் . எனவே நீங்கள் இறைவனுடைய இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்று சேர்ந்திருந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நல்லவர்களின் ஜமாஅத்தும் ஒன்றுகூடி துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலம் இரண்டாவது வல்லமை விண்ணிலிருந்து இறங்கி உங்கள் இறைவன் எப்படிப்பட்ட வல்லமை மிக்க இறைவன் என்பதை உங்களுக்கு காட்டட்டும். உங்கள் மரணத்தை அருகில் இருப்பதாகக் கருதுங்கள். அந்த நேரம் எப்போது வரும் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.

தூய மனதை கொண்ட ஜமாஅத்தின் சான்றோர்கள் என் பெயரில் எனக்கு பிறகு மக்களிடமிருந்து பைஅத் வாங்கட்டும். ஆசியா, ஐரோப்பா போன்ற உலகின் பல்வேறு கண்டங்களிலும் பூமியிலுள்ள பல்வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகின்ற எல்லா நல்ல ஆன்மாக்களையும் எல்லா நல்ல இயல்பு கொண்டவர்களையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்து, தனது அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்கவே இறைவன் விரும்புகிறான். இதுவே இறைவனுடைய நோக்கமாகும். அதை நிறைவேற்றுவதற்காகவே நான் உலகத்தில் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே நீங்கள் மென்மை, நல்லொழுக்கம், துஆக்கள் ஆகியவற்றில் அழுத்தம் கொடுத்து இந்த நோக்கத்தைப் பின்பற்றுங்கள். எனக்கு பிறகு யாராவது இறைவனிடமிருந்து பரிசுத்த ஆவியை பெற்று நிற்காத வரை நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்றுங்கள்.

(அல் வஸிய்யத் நூல்: பக்கம் 10 -14)

****** *** **

## தலையங்கம்... 2-ம் பக்கத் தொடர்ச்சி

ஜமாஅத்தில் நிறுவினான். மேலும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் முதலாவது கலீஃபாவாக ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள் கிலாஃபத்தின் அரியணையில் அமர்ந்தார்கள். அன்னார் (ரலி) கிலாஃபத்தின் பதவியில் அமர்ந்த உடனே இஸ்லாத்தின் வெற்றிக்கான நற்செய்திகள் தொடர்ந்து வெளிப்படத் தொடங்கிவிட்டன அன்னார் (ரலி) மூலமாக ஜமாஅத் மீண்டும் சமுதாய ஒற்றுமையில் ஒன்று சேர்க்கப்பட்டது. மேலும் சமுதாய ஒற்றுமை மற்றும் ஜமாஅத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கு ஒரு உத்திரவாதமாக கிலாஃபத் திகழ்கின்றது. இஸ்லாத்தின் வலிமையை அன்னார் நம்மவர்கள் மற்றும் மற்றவர்களுக்கு முன்னால் மிக அழகிய வடிவத்தில் எடுத்துரைத்தார்கள்.

கிலாஃபத் நிலை பெறுதல் கிலாஃபத்தின் வலிமை என்பது உண்மையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிலை நிற்றல் மற்றும் அதன் உறுதிப்பாடு இன்னும் கூறப்போனால் இஸ்லாத்தின் வலிமை மற்றும் அதன் வெற்றிக்கான உத்திரவாதமாகும்.

மேலும் அதன் மூலமே ஜமாஅத் உறுப்பினர்களின் தர்பிய்யத்தும் இஸ்லாமிய தப்லீஃக்கிற்கான கடமையை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்பதை ஹஸ்ரத் அக்தஸ் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.

அல்ஹம்துலில்லாஹ்! இன்று கிலாஃபத் நிலை பெற்று 118 ஆண்டுகள் ஆகிவிட்டன. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களும், மற்றவர்களும் இந்த விஷயத்தை நன்றாக புரிந்து வைத்துள்ளனர். அதாவது இந்த விரைவான முன்னேற்றம் மற்றும் இந்த குறுகிய காலத்தில் இந்த அளவிற்கு ஜமாஅத் வளர்ந்தது உள்ளபடியே நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைபெற்று இருப்பதன் காரணமாகவே ஆகும். மேலும் கிலாஃபத் நிறுவப்பட்ட காலத்தில் எந்த மக்கள் நிராகரித்து இருந்தார்களோ, மேலும் அதனை எதிர்ப்பதில் நிலை நின்றார்களோ இன்று அவர்கள் மூலமாக அவர்களின் இஸ்லாமிய வெற்றிக்கான வாக்குறுதி எப்படி பூர்த்தியாகும்?

இன்று அவர்களுக்கு தங்களது சமுதாய வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்வதே கடினம் ஆகிவிட்டது. மற்றொரு பக்கம் அஹ்மதிய்யா ஜமாஅத் கிலாஃபத்தின் நிழலின் கீழ் தற்போது உலகில் 200 நாடுகளுக்கும் கூடுதலாக பரவி விட்டது. ஜமாஅத்தின் முபல்லிஃக்மார்கள் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் காலத்தில் தற்போது உலகம் முழுவதும் பரவியுள்ளனர். மேலும் ஆசியா, ஐரோப்பா ஆப்பிரிக்கா, அமெரிக்கா மற்றும் ஏனைய தீவுகள் வரை சென்றடைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இனிமையான நீரூற்றிலிருந்து தாகம் கொண்ட ஆன்மாக்களை அந்த நீரை அருந்தச் செய்து வருகின்றனர். நூல்களும் அஹ்மதிய்யா கலீஃபாக்களின் அறிவார்ந்த கருவூலங்களும் மற்றும் ஏனைய ஜமாஅத் நூல்களின் பதிப்பின் துவக்கமும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் அருளுக்குரிய காலகட்டத்தில் வேகமாக பரவியது. மேலும் இந்த நூல்கள் உலகின் பல்வேறு மொழிகளிலும் வெளியிடப்பட்டன. இந்த நூல்கள் மட்டும் வெளியாகவில்லை. இன்னும் கூறப்போனால், காதியானில் இருந்து ஏனைய பத்திரிகைகளும் வெளியாகத் துவங்கின. மேலும், உலகம் முழுவதும் ஜமாஅத் பத்திரிகைகள் மற்றும் இதழ்களின் பதிப்பின் தொடரும் துவங்கிவிட்டது.

மேலும் தற்போது உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு மொழிகளில் ஜமாஅத் பத்திரிகைகளும், இதழ்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு என்ற வஸ்ஸிஃ மகானக என்ற இல்ஹாம் இறங்கியது. மேலும் அல்லாஹ்வினுடைய வீடுகள் மற்றும் அவனது ஏழை

அடியார்களுடைய வீடுகளின் கட்டடங்களும் கட்டடப் பணிகளின் தொடரும் துவங்கியது. உலகம் முழுவதும் தற்போது வரை ஓராயிரம் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு விட்டன. மேலும் நூற்றுக்கணக்கான ஏழைகளுடைய வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இது மட்டுமின்றி, இன்னல்களுக்கு ஆளான மனிதர்களுக்காக மருத்துவமனை கட்டிக் கொடுக்கப்பட்டது. மேலும் ஏழை பிள்ளைகளின் கல்விக்காக பள்ளிக்கூடங்களும் கட்டப்பட்டன. இவை அனைத்தும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் இனிமையான கனிகளில் ஒன்றாகும். மேலும் தற்போது மனிதம் முதலில் என்ற தன்னார்வத் தொண்டு அமைப்பின் மூலமாக உலகம் முழுவதும் தேவையுடையவர்களுக்கும், ஏழைகளுக்கும் சேவைகள் செய்யப்படுகின்றன. மேலும் இயற்கைச் சீற்றங்களின் காலகட்டத்தில் உதவி செய்யப்படுகிறது. அஹ்மதிய்யா கிலாஃபத் இந்த அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதுடன் ஜமாஅத்தின் ஆன்மீக முன்னேற்றத்திற்காகவும் இரவும் பகலும் பாடுபட்டு வருகின்றது. ஐவேளை தொழுகைகளுக்கான அறிவுரை. இறை தியானம் தொழுகையை பொருளுடன் நிறைவேற்றுவது. திருக்குர்ஆன் தர்ஸுகள் போன்றவற்றிக்கான ஏற்பாடு. துஆக்கள் செய்வதற்கான வலியுறுத்தல் இவை அனைத்தும் கிலாஃபத்தின் நிழலின் மூலமாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

எல்லாவற்றையும் விட அதிகமாக ஒவ்வொரு அஹ்மதியுடனும் காலத்தின் கலீஃபாவிற்கு தனிப்பட்ட தொடர்பு இருக்கின்றது.

மேலும் இங்கு நிறைவாக, சமுதாய ஒற்றுமை பற்றி குறிப்பிடுவதும் அவசியமாகும். கிலாபஃத்தின் கீழ் தற்போது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மட்டுமே இந்த அருள் கொடை கிடைத்து இருக்கின்றது. அதாவது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜுமுஆ குத்பா மூலம் ஒவ்வொரு வாரமும் மகத்தான ஆன்மிக வழிகாட்டல்களை அஹ்மதிகளுக்கு வழங்கி வருகின்றார்கள். மேலும் ஒளியின் மினாராவாக இருக்கக் கூடிய அந்த குத்பாக்களின் மூலமாக ஜமாஅத் ஒரே நேரத்தில் முழு உலகிலும் ஒற்றுமையின் சரடில் மட்டும் கோர்க்கப்படவில்லை; மாறாக உலகம் முழுவதும் ஆன்மிக மற்றும் பௌதீக நன்மைகளை ஜமாஅத் அதிலிருந்து பெற்று வருகின்றது.

இன்று அஹ்மதிய்யா கிலாஃபத் உலகளாவிய ஒருமைப்பாட்டின் பக்கம் முழு உலகத்தையும் அழைத்துக் கொண்டிருக்கின்றது. மேலும் கருத்து வேறுபாடுகளை மறந்து ஏக இறைவனின் பக்கம் வரும்படி உலகை அறிவுறுத்திக் கொண்டிருக்கின்றது. மேலும் அவர்களின் உள்ளங்களில் ஏக இறைவனின் பக்கம் திரும்புதல் மற்றும் மனிதர்களுக்கிடையில் நீதியை நிலை நிறுத்துதல் ஆகியவையே உலக அமைதிக்கான வழிமுறையாகும்; என்ற கருத்தை பதித்து வருகின்றது. மேலும் அதனை பரப்பிக் கொண்டிருக்கின்றது.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரவும், பகலும் உலகம் முழுவதும் அனைத்து நாடுகளிலும், மேலும் அந்த நாடுகளின் தலைவர்களுக்கும் இந்த உண்மையான அமைதியின் பக்கம் அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்தின் இந்த வாழ்வளிக்கக்கூடிய குரல் உலக மக்களின் உள்ளங்களில் விரைவாக தாக்கத்தை ஏற்படுத்தும்படி அல்லாஹ் அருள் செய்வானாக! ஏனெனில் இது ஒன்றே அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான கோட்டையாக இருக்கின்றது. (முற்றும்)

*******

## அல் வஸிய்யத்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பெரும் துன்பங்கள் வருமென்றும் பல ஆபத்துகள் பூமியில் இறங்குமென்றும் அவற்றில் சில என் வாழ்நாளிலும் மற்றும் சில எனது மறைவுக்கு பிறகும் வெளிப்படுமென்றும் அவன் இந்த இயக்கத்திற்கு முழுமையான முன்னேற்றத்தை வழங்குவானென்றும் அவற்றில் சில எனது கரங்களாலும் மற்றும் சில நான் மறைந்த பிறகும் நிறைவேறும் என்றும் இறையறிவிப்புகள் எனக்குத் தெரிவிக்கின்றன.

இது இறைவனின் நடைமுறையாகும். அவன் மனிதனை பூமியில் படைத்த நாளிலிருந்தே எப்போதும் இந்த நடைமுறையை வெளிப்படுத்தி வந்துள்ளான்.

நிச்சயமாக நானும் எனது தூதரும் வெற்றி பெற்றே தீருவோம். (58:22) என அல்லாஹ் எழுதி வைத்துள்ளான் என்று அவன் கூறியதற்கிணங்க அவன் தனது நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் உதவி செய்கிறான்; அவர்களுக்கு வெற்றியை வழங்குகின்றான். இங்கு வெற்றி என்பதன் கருத்து, எவ்வாறு நபிமார்களும், தூதர்களும் விரும்பினார்களோ அவ்வாறே இறைவனின் உண்மையான அடையாளம் பூமியில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும் அதனை எவரும் எதிர்த்து நிற்க முடியாமலாக வேண்டும் என்பதும் ஆகும். எனவே இறைவன் வல்லமை மிக்க அடையாளங்களுடன் அவர்களது உண்மையை வெளிப்படுத்துகிறான். மேலும், எந்த நேர்வழியை அவர்கள் உலகில் பரப்ப விரும்புகின்றார்களோ அதற்கான விதையை அவர்களது கைகளாலேயே அவன் விதைத்து விடுகின்றான். ஆனால், அவர்களது கைகளால் அதனை முழுமையாக நிறைவு செய்ய அவன் வைப்பதில்லை. மாறாக, வெளிப்படையில் தோல்வி என்னும் அச்சத்தை தன்னுள் கொண்டுள்ள ஒரு நேரத்தில் அவர்களுக்கு மரணத்தைக் கொடுத்து, எதிரிகளுக்கு எள்ளி நகையாடவும் பழிச்சொற்களையும் அவதூறுகளையும் கூறுவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடுகின்றான். அவர்கள் எள்ளி நகையாடி, பரிகாசம் செய்த பிறகு மீண்டும் தனது வல்லமையின் மற்றொரு கையை காட்டுகின்றான். அதன் மூலம் ஓரளவுக்கு முழுமை பெறாமல் இருந்த அந்த நோக்கங்கள் அதன் முழுமையான நிறைவை எட்டிவிடுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி விடுகிறான்.

சுருக்கமாக, இறைவன் இருவிதமான வல்லமையை வெளிப்படுத்துகின்றான். முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் கரத்தை காட்டுகின்றான். இரண்டாவதாக, ஒரு நபி மரணிக்கின்ற சமயத்தில் அந்த நபியின் மரணத்திற்கு பின்னர் (அவரை பின்பற்றுபவர்கள்) துன்பங்களை எதிரிடும் நிலை உருவாகின்றது. எதிரிகள் வலுப்பெற்று இப்போது பணி சீர்குலைந்து விட்டது என கருதுகின்றனர். இந்த ஜமாஅத் இனி அழிந்து விடும் என அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். ஜமாஅத்திலுள்ள மக்களும் சந்தேகத்தில் வீழ்ந்து விடுகின்றனர். அவர்களது இடுப்புகள் முறிந்து விடுகின்றன. பாக்கியமிழந்த பலர் மார்க்கத்தை விட்டு விலகும் வழிகளை மேற்கொண்டு விடுகின்றனர். அப்போது இறைவன் இரண்டாம் முறையாக தனது மகத்தான வல்லமையை வெளிப்படுத்துகின்றான். மேலும் வீழ்ந்து கிடக்கும் ஜமாஅத்தை காப்பாற்றி விடுகின்றான்.

எனவே கடைசி வரை பொறுமையுடன் இருப்பவர் இறைவனின் இந்த அற்புதத்தை காண்கிறார். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் இவ்வாறே நடந்தது.

*******

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்பவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)



# ஜுமுஆ பேருரை

**உலகமே நோக்கமாக இருக்கக் கூடாது; மாறாக**
**உலகத்தைப் பெறுவதன் அசல் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும். இது நம்பிக்கையாளரின் அடையாளம் ஆகும்**

மார்க்கத்திற்குத் தொண்டு செய்வதாக இருக்கின்ற வகையில், உலகத்தைப் பெற வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒருவர் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதற்கு, பயணத்துக்காக சவாரியையும் பயணத்துக்குத் தேவையான பொருட்களையும் உடன் எடுத்துக் கொள்கிறார்

உலகை மார்க்கத்தின் மேப்பாட்டுக்காகவே சம்பாதிக்க வேண்டுமே அன்றி, தவறான வேலையை செய்து நமது இம்மையையும், மறுமையையும் சீர்கெடுத்துக் கொள்வதற்காக இருக்கக் கூடாது

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: அல்லாஹ் رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنۡيَا حَسَنَةً وَّفِى الۡاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ என்ற போதனையை வழங்கியிருக்கிறான்.

பொருள்: அல்லாஹ்வே! எங்களுக்கு உலகத்தின் நன்மைகளையும் வழங்குவாயாக! மறுமையின் நன்மைகளையும் வழங்குவாயாக!

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 மார்ச் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அமான் மாதம் 20 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۞ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۞ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۞

مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۞ اِيَّاكَ نَعۡبُدُ وَاِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۞ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۞

صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۞

இன்று நான் பெருநாள் குத்பாவும் கொடுத்திருக்கிறேன். எனவே, இப்பொழுது நான் சுருக்கமாக குத்பா கொடுப்பேன். அதற்காக ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்திருக்கிறேன். நாம் இதன் பக்கம் எப்பொழுதும் கவனம் செலுத்த வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நம்பிக்கை கொண்டவருக்கு உலகத்துடன் எந்த அளவுக்குத் தொடர்புகள் பரந்துபட்டு இருக்குமோ அவை அவருடைய உயர்ப்படித்தரத்துக்குக் காரணமாக அமையும். ஏனெனில், அவருடைய முக்கியக் குறிக்கோள் மார்க்கமாக இருக்கும். அவர்களுடைய நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும் என்பதனால்தான், அவர்களுக்கு உலகத்துடன் இருக்கும் தொடர்புகளும் விரிவாகவும், நன்றாகவும் இருக்கும். அதாவது, உலகத்தைப் பெறுவதன் அசல் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும். இது நம்பிக்கையாளரின் அடையாளம் ஆகும். அவருடைய உலகம், செல்வம் மற்றும் மதிப்பு ஆகியவை மார்க்கத்திற்குத் தொண்டாற்றுபவையாக இருக்கும். எனவே, உலகம் குறிக்கோளாக இருக்கக் கூடாது; மாறாக, உலகத்தைப் பெறுவதில் மார்க்கம் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும் என்பதே அசல் விஷயமாகும். உலகை சம்பாதித்தாலும், நமது மார்க்கம் மேம்பட வேண்டும்; நாம் மார்க்கத்துக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பது அதன் நோக்கமாக இருக்க வேண்டும். உலகையும் மார்க்கத்தின் மேப்பாட்டுக்காகவே சம்பாதிக்க வேண்டுமே அன்றி, தவறான வேலையை செய்து நமது இம்மையையும், மறுமையையும் சீர்கெடுத்துக் கொள்வதற்காக இருக்கக் கூடாது. அதற்கு மாறாக, நமது மறுமையை சீராக்கிக் கொள்வதற்காகவும், நமது மார்க்கத்தை சீர்தூக்கிக் கொள்வதற்காகவும் நாம் உலகை சம்பாதிக்க வேண்டும்.

மேலும், கூறினார்கள்: மார்க்கத்திற்குத் தொண்டு செய்வதாக இருக்கின்ற வகையில், உலகத்தைப் பெற வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒருவர் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதற்கு, பயணத்துக்காக சவாரியையும் பயணத்துக்குத் தேவையான பொருட்களையும் உடன் எடுத்துக் கொள்கிறார்.

ஆக, அவருடைய உண்மையான நோக்கம் சேருமிடத்தைச் சென்றடைவதாக இருக்கிறதே தவிர, சவாரியும் வழிக்குத் தேவையானதும் உண்மையான நோக்கமாக இருப்பதில்லை. நாம் உடன் எடுத்துக் கொள்ளும் இந்த அனைத்துப் பொருட்களும் பயணத்தில் எளிமையை ஏற்படுத்துவதற்காக இருக்கின்றன. நிம்மதியாகப் பயணம் கழிந்து விட வேண்டும்; நாம் சேருமிடத்தை சென்றடைந்து விட வேண்டும் என்பதே அதன் நோக்கமாக இருக்கிறது. அதுவன்றி, நாம் அவற்றால் பயணத்தில் இன்புற வேண்டும் என்பது நோக்கமாக இருப்பதில்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அவ்வாறே மனிதன் உலகைப் பெற வேண்டும். ஆனால், அதை மார்க்கத்திற்குத் தொண்டு செய்வதாகக் கருதி பெற வேண்டும். (அதற்காக) அல்லாஹ் இந்த துஆவைக் கற்றுக் கொடுத்துள்ளான்:

رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنۡيَا حَسَنَةً وَّفِى الۡاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

பொருள்: அல்லாஹ்வே! எங்களுக்கு உலகத்தின் நன்மைகளையும் வழங்குவாயாக! மறுமையின் நன்மைகளையும் வழங்குவாயாக!

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: அல்லாஹ்

رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنۡيَا حَسَنَةً وَّفِى الۡاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

என்ற போதனையை வழங்கியிருக்கிறானே, இதிலும் உலகத்தை முதன்மையாக வைத்துள்ளான். ஆனால், எந்த உலகத்தை? முதலில் உலகத்தை வைத்துள்ளான். ஆனால், ஏன்? எந்த உலகத்தை வைத்துள்ளான்? மறுமையில் நன்மைகளுக்குக் காரணமாக அமையக் கூடிய அந்த உலகின் நன்மைகளை வைத்துள்ளான். எந்த உலகத்தைப் பெற்று மறுமையிலும் பயன் கிடைக்குமோ அத்தகைய

உலகம். மறுமையின் நன்மைகளுக்குக் காரணமாக அமையக் கூடிய அத்தகைய உலக விஷயங்கள் கிடைக்க வேண்டும். அதுவல்லாமல், நாம் மறுமையில் வெட்கத்தை எதிர்கொள்ள நேரிடுவதாக இருக்கக் கூடாது. முற்றிலும் உலகில் மூழ்கிவிடும்போது, வெட்கத்தை எதிர்கொள்ள நேரிடும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

நம்பிக்கை கொண்டவர் உலகைப் பெறுவதில் மறுமையின் நன்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது. இந்த துஆவிற்கான போதனையிலிருந்து தெளிவாகப் புரிந்து விடுகிறது. அத்துடன், ஒரு நம்பிக்கை கொண்ட முஸ்லிம் உலகைப் பெறுவதற்காக எந்த வழிமுறைகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டுமோ, உலகைப் பெறுவதற்கான அந்த அனைத்து மிகச் சிறந்த வழிமுறைகள் பற்றியும் உலகின் நன்மை என்ற சொல்லில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதை மேற்கொள்வதனால், நன்மையும், சிறப்பும் மட்டுமே இருக்கின்றனவோ அத்தகைய அனைத்து வழிமுறைகள் மூலமாகவும் உலகைப் பெறுங்கள். (அதை விட்டுவிட்டு) பிற மனித குலத்திற்குத் துன்பம் ஏற்படுதவற்குக் காரணமாக அமைகின்ற வழியில் அல்ல. உங்கள் இனத்தவரில் எவருடைய குறைபாடுக்கும், வெட்கத்திற்கும் காரணமாக இருக்கின்ற வழியில் அல்ல. ஐயமின்றி, இத்தகைய உலகம் மறுமையின் நன்மைக்குக் காரணமாகத் திகழும். எப்படிப்பட்ட உலகை சம்பாதிக்க வேண்டுமென்றால், அதனால், உங்களுக்கு மட்டும் பலன் ஏற்படாமல், அதற்கும் மேற்பட்டு, மனித குலத்துக்கும் பலன் ஏற்பட வேண்டும். நீங்கள் வெட்கப்படுவதற்குக் காரணமாக அமைகின்ற, உங்களுடைய குடும்பம் மற்றும் உங்களுடைய நெருங்கிய உறவினர்கள் வெட்கப்படுவதற்குக் காரணமாக அமைகின்ற எந்தச் செயலும் உலகில் நிகழக் கூடாது. மாறாக, தூய்மையான, சுத்தமான வாழ்வு இருக்க வேண்டும். நன்மை மற்றும் இறையச்சத்தில் நடக்கக்கூடிய வாழ்வாக அது இருக்க வேண்டும். இப்படிப்பட்ட வாழ்க்கை இருக்கும் போது, இப்படிப்பட்ட உலகத்தை சம்பாதிப்பதற்காக உங்களுடைய வாழ்வைக் கழிப்பீர்களாயின், அது இம்மை மற்றும் மறுமை ஆகிய இரண்டிலும் உங்களுக்கு அருள்களைத் தரும்.

பொதுவாக, தற்போது உலகம் தனது நோக்கங்களையும், பலன்களையும் பெறுவதில் மூழ்கியிருக்கிறது. சுய ஆதாயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட இந்தக் காலத்தில் சமுதாயங்களை நாம் பார்த்தோமேயானால், அவர்களுக்குத் தமது சமுதாயத்தைப் பற்றிய கவலை மட்டுமே உள்ளதே தவிர, மனிதத்தைப் பற்றி அல்ல. அதில் விழுந்து இந்த மக்கள் தமது அழிவிற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தகைய நிலையில் நாம் அல்லாஹ்விடம் உலகம் மற்றும் மறுமைக்கான நன்மைகளைப் பெறுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய சூழ்நிலையில், நாம் இதன் பக்கம் மிக அதிகம் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. அப்போதுதான் நாம் நம்முடைய இம்மையையும், மறுமையையும் சீர்படுத்திக் கொள்ளவும் முடியும். எல்லா விதமான பேராபத்துகளில் இருந்து பாதுகாப்பாக இருக்கவும் முடியும். நான் கூறியது போன்று, உலகம் அழிவின் குழிக்குள் செல்கிறது.

அல்லாஹ் நம்மை அதிலிருந்து பாதுகாத்து வைப்பானாக! அல்லாஹ் நமக்கு நம்முடைய அமல்களையும் சிறப்பாக்குவதற்கு நல்வாய்ப்பு கிடைக்கச் செய்வானாக! இப்பொழுது குத்பாவில் நான் கூறியது போன்று, இந்த ரீதியிலும் நமக்கு துஆக்கள் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைக்கட்டுமாக! அல்லாஹ் நமக்கு உண்மையில், இந்த நன்மைகளைப் பெறுவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! மிகச் சிறந்த துஆக்களையும் செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! அவற்றை ஏற்றும் கொள்வானாக!

தமிழாக்கம்
முரப்பி
அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * *

## கிலாஃபத் மார்க்க அமைப்பின் நிரந்தர அங்கமாகும்

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

உலகத்தின் அடிப்படையில் இரண்டு விதமான பொருட்கள் உள்ளன என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். ஒன்று தன்னுடைய இருப்பின் அடிப்படையில் தற்காலிகமான மற்றும் குறிப்பிட்ட நேரத்தின் விளைவினால் உள்ளது. மேலும் இதில் மனித இனத்திற்காக ஏதாவது ஒரு பகுதியில் உண்மையான பயன் நோக்கமாக இருக்காது. இரண்டாவது விஷயம், உலக அமைப்பின் பகுதியாக இருக்கின்றது. மேலும் மக்களுக்கு அதில் ஏதாவது ஒரு பயன் நோக்கமாக இருக்கின்றது. ஆரம்பத்தில் சொல்லப்பட்ட அந்தப் பொருள் உலகத்தில் நுரையைப் போன்று எழுகின்றது. மேலும் நுரையைப் போன்று அழிந்து விடுகின்றது. ஆனால், இரண்டாவதாக சொல்லப்பட்ட விஷயம் உறுதியாக இருந்து வருகின்றது. அதற்கு உலகத்தில் நிலைத்து நிற்கும் தன்மை கிடைக்கின்றது.

எனவே அல்லாஹ் கூறுகின்றான்:

நுரை போன்ற பொருள் உடனடியாக காணாமல் போய்விடுகின்றது. ஆனால், பயன் தரும் பொருள் நிலைத்து நின்று வாழ்ந்து பயன் தருகின்றது.

(திருக்குர்ஆன் 13:18)

இந்த அடிப்படை கருத்தை வைத்து இயற்கையை உற்று நோக்கினால் நமக்கு உலகத்தில் எந்த பொருளாவது எவ்வகையிலும் பயன் தர வல்லது என்றால் அல்லாஹ் அதை நிலைபெறச் செய்ய ஏதாவது ஒரு அமைப்பை உருவாக்கி உள்ளான் என்ற நுட்பமான ஞானம் தென்படுகின்றது. எதுவரை என்றால், மிகச் சிறிய உயிரினம் மேலும், மிகவும் ஏளனமாக பார்க்கப்படும் செடி, கொடிகள் கூட பரிணாம வளர்ச்சிக்கான ஏற்பாடுகளை கொண்டுள்ளது. மேலும் இயற்கையின் மறைவான இருப்பு தனது வலுவான கையால் அதை அழிவில் இருந்தும் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றது. மேலும் அதாவது எந்த அளவிற்கு ஏதாவது ஒரு பொருள் மனித இனத்திற்கு பயனுள்ளதாக இருக்கிறதோ அந்த அளவிற்கு இறைவன் புறமிருந்து அதை பாதுகாப்பதற்கான ஏற்பாடு மிகவும் வலுவான மற்றும் மிகவும் பரந்த முறையில் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை அண்ட சராசரத்தையும் மிகவும் ஆழ்ந்து கவனிக்கும்பொழுது இந்த விஷயம் ஒருபோதும் மறைவானதாக இருப்பதில்லை.

திருக்குர்ஆனில் பாதுகாப்பது தொடர்பான வாக்குறுதியும் இந்த அடிப்படை பொருளில்தான் உள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்:

திருக்குர்ஆனுடைய இறை வெளிப்பாடுகள் எப்பொழுதும் ஒரு அடையாளமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இறைவனுடைய நோக்கம் என்னவென்றால் மறுமை நாள் வரை மக்களை விழிப்புடன் வைப்பதற்கான வழிவகையாக இது இருக்க வேண்டும் என்பதற்காக இறைவனே இதற்கான பாதுகாவலனாக இருக்கின்றான். மேலும் எப்பொழுதும் எவ்வாறான விஷயங்களை உருவாக்குகின்றான் என்றால் அது வெளிப்படையான மற்றும்

இதன் தொடர்ச்சி 20 -ம் பக்கம்

## அஹ்மதிய்யா கிலாஃபத்தும் இறை வணக்கங்களை நிலைநாட்டுதலும்
(மவ்லானா எச். ஷம்ஸுத்தீன் ஸாஹிப், ஆசிரியர் பத்ர் பத்திரிகை மலையாளம்)

அல்லாஹ் மனித படைப்பின் அசல் நோக்கம் இறைவணக்கம் என்று கூறியிருக்கின்றான். அதாவது,

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ

என்று அல்லாஹ் கூறுகின்றான். பொருள்: நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்திருக்கின்றேன். (51: 57)

மனித படைப்பின் இதே நோக்கத்திற்கு போதனை வழங்கவும், மேலும் மனிதனை எப்பொழுதும் அதன் பக்கம் கவனமூட்டுவதற்காகவும் அல்லாஹ் ஒவ்வொரு சமுதாயத்திலும் நபிமார்களை அனுப்பி வந்தான் ஆக, அல்லாஹ் கூறுகின்றான் :

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَسُولًا أَنِ اعْبُدُوا اللَّهَ وَاجْتَنِبُوا الطَّاغُوتَ

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; தீயவர்களை விட்டு விலகுங்கள் என்ற கட்டளையுடன் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் நிச்சயமாக நாம் தூதரை அனுப்பினோம். ( 16:37)

நபியின் மரணத்திற்குப் பிறகு அவரது இயக்கம் கிலாஃபத்தின் கீழ் தொடர்கின்றது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

مَا مِنْ نُبُوَّةٍ قَطُّ إِلَّا تَبِعَتْهَا خِلَافَةٌ

( கன்ஸுல் மால் : தொகுதி 6, பக்கம் 109)

பொருள்: ஒவ்வொரு நபித்துவத்திற்குப் பிறகும் கிலாஃபத் இருக்கிறது.

கிலாஃபத் தொடர்பாக வாக்குறுதி வழங்கப்பட்டுள்ள இஸ்திஃக்லாஃப் வசனத்தில் கலீஃபாக்களின் ஒரு தெளிவான அடையாளமாக அல்லாஹ் இதனை எடுத்துரைத்துள்ளான்.

يَعْبُدُونَنِي لَا يُشْرِكُونَ بِي شَيْئًا

பொருள்: அவர்கள் என்னையே வணங்குவார்கள் மேலும் என்னுடன் எனக்கு யாரையும் இணையாக்க மாட்டார்கள். அடுத்து, இந்த வசனத்திற்கு பிறகு அடுத்த வசனத்திலேயே அல்லாஹ் கிலாஃபத்தின் அசல் நோக்கத்தின் பக்கம் கவனமூட்டிவாறு இவ்வாறு கூறுகின்றான்:

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَأَطِيعُوا الرَّسُولَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ

நீங்கள் தொழுகையை நிலைநாட்டுங்கள் ஜக்காத்து செலுத்துங்கள் மேலும் உங்கள் மீது கருணை காட்டப்படுவதற்காக தூதருக்கு கட்டுப்பட்டு நடங்கள். ( 24:57)

அருளுக்குரிய நபிமொழிகளில் இருந்து தெரிய வருவது என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அவர்கள் முஸ்லிம் சமுதாயத்தில் நபித்துவ வழியில் கிலாஃபத் இரண்டு முறை மலரும் என்று செய்தி வழங்கியுள்ளார்கள். ஒன்று தமது மரணத்திற்குப் பிறகு உடனடியாக நிலைபெறும். இரண்டாவதாக, இறுதி காலத்தில் நிலைபெறும் என்ற செய்தி தெரிய வருகின்றது. முன்னறிவிப்பிற்கு ஏற்ப கிலாஃபத்தே ராஷிதா நிலை பெற்றது. மேலும் இரண்டாவதாக, முன்னறிவிப்பிற்கு ஏற்ப இன்று அஹ்மதிய்யா கிலாஃபத் நிலைபெற்றிருக்கின்றது.

இறைவணக்கம் குறிப்பாக தொழுகை கிலாஃபத்தே ராஷிதாவின் சிறப்புப் பண்பாக இருந்து வந்தது. குலஃபாயே ராஷிதீன் சுயமே தொழுகை மற்றும் துஆக்களில் மிகவும் ஈடுபாட்டுடன் இருந்தனர். மேலும் சமுதாயத்திலும் அதற்கான ஆன்மாவை நிலைநிறுத்தி வந்தார்கள்.

இஸ்லாத்தின் ஆரம்பகால வரலாறு இறை வணக்கங்களுக்கான ஈமானை வலுவூட்டும் சம்பவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. வாருங்கள்! அவற்றிலிருந்து சில சம்பவங்களை நாம் அலசலாம். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் இறைதூதர் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கையில் முற்றிலும் இறுதி நாட்களில் தொழுகையில் இமாமத் செய்வதற்கான கண்ணியத்தை வழங்கி இருந்தான். அது ஒரு வகையில் கிலாஃபத்தின் அரியணையில் அமர்த்தியதற்கான ஓர் அறிவிப்பாக இருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஜமாஅத்தான தொழுகையை எந்த அளவிற்கு கருத்தில் கொண்டு வந்தார்கள் என்றால், அது தொடர்பாக

أَنَّهُ كَانَ يُوَكِّلُ رِجَالًا بِإِقَامَةِ الصُّفُوفِ فَلَا يُكَبِّرُ حَتَّى يُخْبَرَ أَنَّ الصُّفُوفَ قَدِ اسْتَوَتْ

என்று வருகின்றது.

அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஜமாஅத்தான தொழுகைகளில் வரிசைகளை சீர்படுத்தும் பணியை சில நபர்களிடம் ஒப்படைத்து இருந்தார்கள். மேலும், வரிசைகள் சீராக்கப்பட்டு விட்டன என்று தனக்கு கூறப்படாத வரை பாங்கு கூறக்கூடியவர் இகாமத் கூற மாட்டார்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எந்த வார்த்தைகளில் எதிரிகளை எச்சரித்து இருந்தார்களோ அந்த வார்த்தைகளில் இருந்து இஸ்லாமிய வரலாற்றில் கிலாஃபத் மற்றும் இறை வணக்கத்திற்கு இடையே ஓர் உறுதியான உறவு இருந்தது என்பதை மிகவும் தெளிவான முறையில் தெரிய வருகின்றது.

அன்னார் (அலை) கூறினார்கள்:

நீங்கள் என்னை கொலை செய்துவிட்டால் இறைவன் மீது ஆணையாக! எனக்குப் பிறகு நீங்கள் ஒருபோதும் பரஸ்பரம் நேசத்துடன் வாழ முடியாது. மேலும் ஒருபோதும் அனைவரும் இணைந்து தொழ முடியாது. மேலும் ஒருபோதும் ஒன்றிணைந்து உங்களுடைய எதிரிகளுடன் போர் செய்ய முடியாது. ( தாரீகே ரஸுல்)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தொடர்பாக இவ்வாறு அறிவிப்பில் வருகின்றது:

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடத்தில் தொழுகை நன்றாக இருக்கின்றது : முஆவியா (ரலி) அவர்களிடம் உணவு நன்றாக கிடைக்கின்றது என்று ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்.
(கிலாஃபத்தே ராஷிதா, பக்கம் 194)

சுருக்கமாக, இஸ்லாத்தின் துவக்கக் காலத்தில் உங்களுடைய இறை வணக்கம் மற்றும் அதனை சமுதாயத்தில் நிலைபெற செய்வதற்காக அவர்கள் மேற்கொண்ட எண்ணற்ற முயற்சிகள் இஸ்லாத்தின் வரலாற்றில் ஓர் ஒளிமயமான அத்தியாயமாக விளங்குகின்றது. ஒருமுறை எதிரியின் ஓர் உளவாளி முஸ்லிம்களின் படைகளின் நிலைமைகளை அறிவதற்காக வந்திருந்தார். அவர் முஸ்லிம்களுடைய ஒரு விஷயத்தால் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானார். முஸ்லிம்களுடைய இறை வணக்கத்தால் அவர் தாக்கத்திற்குள்ளானார். அந்த நபர் வெளிப்படையாக இவ்வாறு கூறினார்: (முஸ்லிம்களாகிய) அந்த மக்கள் வினோதமான படைப்பினமாக இருக்கின்றனர் : பகலில் அவர்கள் சண்டையிடுகின்றனர். இரவிலோ எழுந்து இறைவனை வணங்குகின்றனர்; மேலும் அந்த இறைவனை அவர்கள் நினைவு கூறுகின்றனர்.
(தஃப்ஸீர் கபீர் தொகுதி 9 பக்கம் 191)

இந்தப் பரிதாபமான நிலையிலிருந்து இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக அல்லாஹ் நிர்ணயித்த நேரத்தில் உம்மத்தீ நபியின் ஆடையை அணிவித்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி என்ற பட்டத்துடன் அனுப்பினான். அன்னாரைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஒரே ஹதீஸில் நான்கு முறை நபியுல்லாஹ் என்ற பட்டத்தை அருளியுள்ளார்கள்.

ஆக, அன்னார் (அலை) தமது அந்தஸ்தை விவரித்தவாறு கூறுகின்றார்கள்:

இறைவன் புறமிருந்து நான் இரண்டு பெயர்களை பெற்றுள்ளேன்: குலாம் அஹ்மது என்ற எனது பெயரிலிருந்து வெளிப்படுவதைப் போன்று, உம்மத்தீ நபி என்ற ஒரு பெயர் எனக்கு வைக்கப்பட்டிருக்கின்றது; மேலும், பராஹீனே அஹ்மதிய்யாவில் எனது பெயர் அஹ்மது என்று வைக்கப்பட்டு இருப்பதைப் போன்று எனக்கு நிழல் நபி என்ற இரண்டாவது பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதே பெயரால் நான் மீண்டும் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளேன் அழைக்கப்பட்டேன். மேலும் நான் நிழல் நபியாக இருக்கின்றேன் என்பது இதன் பக்கமே சுட்டிக் காட்டுகின்றது எனவே நான் உம்மத்தீ நபியும், நிழல் நபியும் நபியும் ஆவேன்.
(ரூஹானீ கஸாயீன் 21, பக்கம் 360)

மேலும், ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது வருகையின் நோக்கம் தொடர்பாக கூறுகின்றார்கள்:

எந்தப் பணிக்காக இறைவன் என்னை நபியாக ஆக்கி அனுப்பியிருக்கின்றனோ அது என்னவென்றால், இறைவனுக்கும் படைப்பினத்திற்கும் இடையிலான உறவில் ஏற்பட்ட விரிசலை அகற்றி அன்பு மற்றும் தூய்மையின் தொடர்பை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும் என்பதாகும். தொகுதி 20 பக்கம் 180)

எவ்வாறு இருப்பினும், அன்னார் (அலை) தமது

வெற்றிகரமான பணிக்குப் பிறகு மே 26, 1908 ஆம் ஆண்டு உலகிலிருந்து மறைந்து தமது இறைவனிடம் சென்று விட்டார்கள் மேலும் அடுத்த நாளே, அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப மீண்டும் நபித்துவ வழியில் கிலாஃபத்தை நிறுவினான். அஹ்மதிய்யா கலீஃபாக்களின் தனிச் சிறப்பு மிக்க மகிமை இறை வணக்கத்தை நிலை நிறுத்துதல் ஆகும் என்பதற்கு அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நூற்றாண்டு கால வரலாறே தெள்ளத்தெளிவான சான்று பகர்கின்றது.

**முதல் கிலாஃபத்தும் இறை வணக்கமும்**

அல்லாஹ் ஹஸ்ரத் ஹக்கீம் மௌலானா நூருத்தீன் (ரலி) அவர்களுக்கு முதல் கலீஃபத்துல் மஸீஹ் என்ற அந்தஸ்தை அருளினான்.

அன்னாரின் இறையச்சத்திற்கும், பரிசுத்தத்திற்கும் ஒரு பேசும் உலகம் சான்று பகர்ந்துள்ளது. மேலும் அந்தக் காலத்தில் அனைத்து நம்பிக்கையாளர்களுக்கு மத்தியிலும் இறை வணக்கத்தின் அடிப்படையில் அன்னாரின் அந்தஸ்து மிகவும் தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது. எந்த அளவிற்கு என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வாழ்நாளில் அன்னாருடைய இமாமத்தின் கீழ் தொழுகையை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்கி வந்துள்ளார்கள். மேலும் பெரும்பாலான விவகாரங்களில் குறிப்பாக மார்க்கச் சட்ட விவகாரங்களில் அன்னாரிடமே ஆலோசனை செய்து வந்தார்கள். தொழுகை மற்றும் அல்லாஹ்வுடன் தொடர்பை அன்னார் மிகவும் வலியுறுத்தி வந்தார்கள். அன்னாரின் வீட்டில் ஒரு பைத்துத் துஆ இருந்தது. அன்னார் (ரலி) ஜமாஅத்திற்கு தொழுகையின் பக்கம் எப்போதும் கவனமூட்டி வந்தார்கள்.

பைஅத்தின் சொற்களில் அதாவது பைஅத் செய்பவர்களுக்கான அந்த நிபந்தனைகளின் கீழ்கண்ட சொற்களை அன்னார் சேர்த்திருக்கின்றார்கள். நான் ஐவேளை தொழுகைகளை பேணிவருவேன்; மேலும் ஸகாத் மற்றும் ஹஜ்ஜை எனது ஆற்றலுக்கு ஏற்ப நிறைவேற்ற முயற்சி செய்வேன். (ஹயாதே நூர் பக்கம் 337)

மஸ்ஜித் நூர் கட்டுவதற்கான திட்டம் முதலாவது கிலாஃபத் காலகட்டத்தில் மூன்று பொருளாதார திட்டங்களுக்கான தொடர்பு தஃலீமுல் இஸ்லாம் என்ற பள்ளிக்கூடத்துடன் இருக்கின்றது. அந்தப் பள்ளிக்கூடம் கட்டப்படுவதற்கும் அந்த பள்ளிக்கூடத்துடன் போர்டிங் ஹவுஸ் மற்றும் பள்ளிவாசல்களுக்கும் கடுமையான தேவை இருந்தது (தாரீகே அஹ்மதிய்யா தொகுதி 3 பக்கம் 312)

ஜுமுஆ அன்று விடுமுறை

ஜுமுஆ அன்று விடுமுறை வழங்குவது தொடர்பாக ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் டிசம்பர் 12, 1911 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற பிரிட்டிஷ் இந்தியாவின் பேரரசர் ஜார்ஜ் பஞ்சம் அவர்களின் பதவி ஏற்பு விழாவில் ஒரு மெமோரியல் வழங்கினார்கள். அது வைஸ்ராய் ஹிந்து மூலமாக பிரிட்டானியா பேரரசர் வரை கொண்டு சேர்க்கப்பட்டது. அதில் முஸ்லிம்களுக்கு ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு ஜுமுஆ அன்றும் இரண்டு மணி நேரம் விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்று விண்ணப்பிக்கப்பட்டது.
(தாரீகே அஹ்மதிய்யத் பாகம் 3, பக்கம் 379)

**இரண்டாம் கிலாஃபத்தும் தொழுகையை நிலை நிறுத்துதலும்**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடைய 52 வருடகால கிலாஃபத் காலகட்டம் இறை வணக்கத்தை நிலை நிறுத்துவது தொடர்பாக ஒரு மைல் கல்லாக திகழ்கின்றது. அன்னார் (ரலி) இறை வணக்கங்கள் அதாவது தொழுகை, நோன்பு, ஸகாத் மற்றும் ஹஜ் தொடர்பான விஷயங்களில் மிகவும் எளிய மொழியில் அதனுடைய நுட்பமான ஞானத்தை மட்டும் புரிய வைக்கவில்லை; மாறாக, அதன் மேற்பார்வைக்காகவும் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இறை வணக்கங்களின் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். தொழுகை நம்பிக்கையாளரின் மிஃராஜ் ஆகும்.

எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அனைத்து வழிகாட்டல்களும் இறைத் தொடர்பு மற்றும் இறையச்சத்தைச் சுற்றி சுழல்கின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஆகஸ்ட் 11ஆம் தேதி, 1955 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தின் இளைஞர்களுக்கு இந்த விஷயத்தை வலியுறுத்தினார்கள்.

மேலும் கூறினார்கள்:

வானத்தின் வாசல்கள் உங்களுக்கு திறந்து விடும் வகையிலும், உங்கள் மீது இல்ஹாம் இறங்க தொடங்கி விடும் வகையிலும் நீங்கள் இறையச்சம் மற்றும் இறை வணக்கத்தில் குறிப்பாக அழுத்தம் கொடுக்க வேண்டும்.

(அல்ஃபஸ்ல், நவம்பர் 17 1955 ஆம் ஆண்டு)

**இறை தியானம் செய்வதற்கான திட்டம்**

ஹுஸூர் அன்வர் அவர்கள் மே 12 ஆம் தேதி, 1944 ஆம் ஆண்டு இந்த திட்டத்தை அறிவித்தார்கள். அதாவது அஹ்மதிகள் தொழுகைகளை அழகுபடுத்தி தொழ வேண்டும்; மேலும் ஜமாஅத்தாக தொழ வேண்டும். மேலும் தினமும் குறைந்தது 12 முறை தஸ்பீஹும் தஹ்மீதும், துருவதும் ஓதுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பெரியவர் சுயமே ஜமாஅத்தாக தொழவில்லை என்றால், பின்னர் அவர் நயவஞ்சகர் ஆவார். ஆனால், எவர்கள் தமது பிள்ளைகளிடம் ஜமாஅத்தாக தொழுவதற்கான பழக்கத்தை ஏற்படுத்தவில்லையோ அவர்கள் (ஒருவகையில்) தமது பிள்ளைகளை கொலை செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனர். தாயும், தந்தையும் தத்தமது பிள்ளைகளிடம் ஜமாஅத்துடன் தொழுவதற்கான பழக்கத்தை ஏற்படுத்துங்கள். அவ்வாறு செய்தால், பின்னர் எங்களின் பிள்ளைகளின் சீர்திருத்தம் சாத்தியமற்றதாகும்; மேலும் அவர்களுக்கு எந்த சிகிச்சையும் பயன் அளிக்காது என்று கூறக்கூடிய நிலை ஒருபோதும் அவர்களுக்கு ஏற்படாது.
(அல் அஸ்ஹார் லஸ்வாதுல் கமார், தயாரிப்பு ஹஸ்ரத் ஸய்யிதா மர்யம் ஸித்தீகா, 168)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தொழுகையின் பல்வேறு அம்சங்களின் மீது ஒளிபாய்ச்சியவாறு, ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அதனை உரிய நேரத்தில் ஜமாஅத்தாக நிறைவேற்றுவதன் பக்கம் அறிவுரை வழங்கியிருந்தார்கள். அதுமட்டுமின்றி, இன்னும் கூறப்போனால் அதனுடைய செயல் வடிவமாக தமது குடும்பத்தில் இருந்து அதனை தொடங்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனக்கு நினைவு உள்ளது. ஒருமுறை, நாங்கள் ஐந்து, ஆறு பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தபோது, ஒரு விளையாட்டில் மூழ்கி அஸர் தொழுகையை ஜமாஅத்தாக தொழுவதிலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆகிவிட்டோம்.

ஹுஸூர் (ரலி) அவர்கள் தொழுது விட்டு திரும்பி வந்தபோது, நாங்கள் விளையாடிக் கொண்டு இருப்பதை பார்த்து விட்டார்கள். மேலும், அனைவரையும் ஒன்று கூட்டி தம்முடன் ஹஸ்ரத் அம்மீ ஜான் அவர்களுடைய வளாகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். மேலும் அங்கு அனைவரையும் ஒரு வரிசையில் சிறிய அளவிலான தண்டனை கொடுப்பதற்காக நிறுத்தினார்கள். ஆக, ஒருவகையில் கூட்டுத் தொழுகையில் பங்கு பெறாமல் இருந்ததற்கான தண்டனையும் கூட்டாகவே வழங்கப்பட்டது.

ஹுஸூர் அவர்களுக்கு இந்த ஆர்வம் குழந்தைப் பருவம் முதலே இருந்தது. அதாவது மிகவும் சிறிய வயதிலேயே அன்னாருக்கு இரவில் எழுந்து மஸ்ஜித் சென்றடைந்து இறைவனின் சன்னிதானத்தில் விழுந்து மன்றாடுவதும் இஸ்லாத்தின் வெற்றிக்காக துவாக்கள் வேண்டுவதும் கண்ணீரால் சஜிதாவை நனைப்பதும் நம்பத் தகுந்த அறிவிப்புகளில் இருந்து நிரூபணமாகின்றது.

**பள்ளிவாசல்கள் கட்டுமானத் திட்டம்**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு தொழுகையை நிலை நாட்டுதலுடன் ா பள்ளிவாசல்கள் கட்டுமானத்தின் பக்கமும் சிறப்பு கவனம் இருந்தது. எந்த அளவுக்கு என்றால், அன்னார் (ரலி) ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பட்ஜெட்டில் மூன்றில் ஒரு பகுதியை பள்ளிவாசல்கள் கட்டுமான வகைக்காக செலவு செய்வதற்கு விருப்பம் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 1952 ஆம் ஆண்டு நிகழ்ந்த மஜ்லிஸே ஷூரா. கூட்டத்தில், வெளிநாடுகளில் பள்ளிவாசல் கட்டுமானம் தொடர்பான திட்டங்களை அறிவித்தவாறு கூறினார்கள்:

ஐரோப்பிய நாடுகளில் பள்ளிவாசல்கள் தப்லீஃக்கில் ஒரு முக்கிய அம்சமாக இருக்கின்றன. (ரிப்போர்ட் மஜ்லிஸே ஷூரா 1952 ஆம் ஆண்டு , பக்கம் 20)

மேலும் கூறினார்கள்: அமெரிக்கா, ஹாலந்து, ஜெர்மனி இத்தாலி, ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் ஆகிய ஆறு நாடுகள் இருக்கின்றன. அவற்றில் நமது பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு விட்டால் பின்னர் தப்லீஃகிற்கு ஒரு மிகப்பெரிய

வழிமுறையாக அவை நிரூபணமாகும்.

ஒருவேளை இந்த பள்ளிவாசல் கட்டுமானத்திற்கு அனுமானமாக 7 லட்சம் ரூபாய் ஆகும் என்றால், நாம் நமது வருடாந்திர பட்ஜெட்டில் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கினால் பின்னர் ஏழு ஆண்டுகளிலும், வருடாந்திர பட்ஜெட்டில் ஐம்பதாயிரம் ரூபாய் ஒதுக்கினால் பின்னர் 14 ஆண்டுகளில் இந்த தொகையை நாம் பூர்த்தி செய்து விட முடியும். ஆனால், எவ்வாறு இருப்பினும் ஏதாவது நாம் செய்ய வேண்டும்; அப்போதுதான் நாம் நமது தப்லீஃக் பணிகளை விரிவடைய செய்ய முடியும். மேலும் மக்கள் ஒன்று கூடுவதற்கும் சாத்தியம் இருக்கும்.

இரண்டாம் கிலாஃபத்தின் காலத்தில் ஐரோப்பிய மண்ணில் 5 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. மஸ்ஜித் ஃபஸ்ல் லண்டன் (1924), மஸ்ஜித் முபாரக் ஹாலந்து (1955), மஸ்ஜித் ஃபஸ்லேல் உமர் ஹாம்பர்க், ஜெர்மனி (1957), மஸ்ஜித் நூர் பிராங்க்ஃபர்ட் ஜெர்மனி (1959), மஸ்ஜித் மஹ்மூத் சுவிட்சர்லாந்து (1963).

எப்படியிருப்பினும், அன்னாரது கிலாஃபத் காலகட்டத்தித்தில் சுமார் 311 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன அல்லது விரிவாக்கம் செய்யப்பட்டன. அவற்றில் ரப்வா, ஹாலந்து, அமெரிக்காவின் மஸ்ஜித்கள் முதன்மையானவை.

**நமது பாங்கு (அதான்) ஓசையில் சூரியன் மறையக் கூடாது!**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் ஆயிரக்கணக்கான பள்ளிவாசல்களில் பாங்கு சொல்லப்படும்போது, கிறிஸ்தவம் இறந்துவிட்டது என்றும், இந்த ஒளி மெல்ல, மெல்ல உலகம் முழுவதும் பரவி ஜப்பான், பிலிஃப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசியா வழியாக பாகிஸ்தானுக்கு வரும் என்றும் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்வார்கள். முன்பு மக்கள் ஆங்கிலேயப் பேரரசில் சூரியன் மறையாது என்று கூறுவார்கள். ஆனால், இப்போது நடைமுறையில் இந்த விஷயம் அஹ்மதிய்யத்திற்கும் பொருந்துகிறது. இனி அஹ்மதிய்யத் மீதும் சூரியன் மறையாது. ஆனால், நமது பாங்கு ஒலியிலும் சூரியன் மறையக் கூடாது என்று நாம் விரும்புகிறோம்.(ஆதாரம்: அல்-ஃபசல் 26 டிசம்பர் 1957)

பதாஹ் பள்ளத்தாக்கிலிருந்து உதயமான சூரியன் மேன்மேலும் உயர்ந்து கொண்டே செல்லட்டும்! அந்த நுபுவ்வத்தின் ஒளி நிலைத்திருக்கட்டும்! இன்ஷா அல்லாஹ்!

**மூன்றாவது கிலாஃபத்தும் இறை வணக்கத்திற்கான திட்டமும்**

ஹஸ்ரத் மூன்றாம் கலீஃபத்துல் மஸீஹ் ஹாஃபிழ் மிர்ஸா நாஸர் அஹ்மது ஸாஹிப் (ரஹி) அவர்கள் கிலாஃபத் பொறுப்பை ஏற்ற பிறகு, பள்ளிவாசல்கள் கட்டுமானப் பணிகள் மேலும் விரிவடைந்தது. அதன்படி நார்வே, அமெரிக்கா, கனடா, இத்தாலி, ஜப்பான், ஸ்பெயின் போன்ற நாடுகளில் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. இதில் ஸ்பெயினில் உள்ள 'மஸ்ஜித் பஷாரத்' ஒரு சிறப்பம்சத்தைப் பெற்றுள்ளது: அதாவது 750 ஆண்டுகளுக்குப் பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு அந்த மண்ணில் முதல் முறையாக பள்ளிவாசல் கட்டும் நற்பேறு கிடைத்தது. அல்ஹம்துலில்லாஹ்!

இதேபோல் பைத்துல்லாஹ்வை (இறை இல்லத்தை) நிர்மாணிப்பதன் மகத்தான முப்பது நோக்கங்கள்' என்ற தலைப்பில் அன்னாரின் தொடர் உரைகள், இறை வணக்கம் மற்றும் பள்ளிவாசல் கட்டுதலின் பக்கம் கவனம் ஈர்க்கும் ஒரு மிகச்சிறந்த படைப்பாகும்.

ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றுதல் மற்றும் நோன்பு நோற்பது குறித்துப் பல உரைகள் மற்றும் எழுத்துப்பூர்வமான அறிவுறுத்தல்கள் மூலம் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அன்னார் (ரஹி) கவனமூட்டினார்கள். குறிப்பாக, ஜமாஅத்தின் நூற்றாண்டு விழாவின் நன்றி செலுத்தும் சந்தர்ப்பத்தின் போது துஆக்கள் மற்றும் நஃபில் தொழுகைகளின் பக்கமும் அன்னார் (ரஹி) கவனமூட்டினார்கள்.

**நான்காவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் இறை வணக்கங்களை நிலைநாட்டுதல் மற்றும் பள்ளிவாசல்கள் கட்டுமானம்**

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 8 நவம்பர் முதல் 20 டிசம்பர் 1985 வரை, தொழுகையை நிலைநாட்டுவது குறித்து தொடர் உரைகளை நிகழ்த்தினார்கள். ஒவ்வொரு மாதமும் ஒரு செயற்குழு கூட்டத்தை தொழுகையை நிலைநாட்டுவது குறித்து ஆலோசிக்க கூட்ட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

1988-ல் முபாஹலா சவாலுக்குப் பிறகு, 17 ஜூன் 1988 அன்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கண்ட ஒரு கனவின் அடிப்படையில், இறை வணக்கங்களை நிலைநாட்டுதலின் பக்கம் சிறப்புக் கவனம் செலுத்தினார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 1990-ஆம் ஆண்டு, சூரா ஃபாத்திஹாவின் ஒளியில் நீண்ட தொடர் குத்பா பேருரைகளை வழங்கத் தொடங்கினார்கள். அவை இறை வணக்கத்தின் சுவை மற்றும் துஆவின் ஒழுங்கு முறைகள் என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டு விட்டன. ஹுஃஸூர் அன்வர் அவர்கள் குழந்தைகளின் உருது வகுப்புகளிலும் தொழுகையின் பாடங்களை எளிய முறையில் கற்றுக்கொடுத்தார்கள். மேலும் பெரியவர்களும் அதிலிருந்து பயன்பெறும்படி வழிகாட்டலும் வழங்கினார்கள். (வெள்ளிக்கிழமை உரை, 17 அக்டோபர் 1997)

ஒரு ஜுமுஆ பேருரையில் 'ஸலாத்துல் வுஸ்தா' (நடுத் தொழுகை) பற்றி விளக்கும்போது, வேலைகளுக்கு இடையில் வரக் கூடிய அஸர் தொழுகை மற்றும் ஃபஜ்ர் தொழுகைகளைப் பாதுகாப்பதன் பக்கமும் ஜமாஅத்திற்கு சிறப்புக் கவனமூட்டினார்கள்.

**ஜுமுஆ தொழுவதற்கான இயக்கம்**

ஜனவரி 1, 1988 அன்று, ஐரோப்பிய நாடுகளில் வாழும் அஹ்மதிகளுக்கு ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றும்படி ஒரு சிறப்பு கவனமூட்டினார்கள். வேலைக்கு விடுப்பு எடுக்க வேண்டியிருந்தாலும் அல்லது ராஜினாமா செய்ய நேரிட்டாலும், ஒவ்வொரு மூன்றாவது ஜுமுஆவையும் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்கள். ஆக, நூற்றுக்கணக்கான மக்கள் இதற்கு செவிசாய்த்தவாறு தங்களது பணிகளை தியாகம் செய்து விட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்குச் சிறந்த வாழ்வாதாரத்தை வழங்கினான்.

**பள்ளிவாசல்கள் கட்டுமானம்**

பாகிஸ்தான் மற்றும் பிற நாடுகளில் எதிரிகள் அஹ்மதிய்யா பள்ளிவாசல்களை இடிக்கத் தொடங்கியபோது, நான்காவது கலீஃபாவின் காலத்தில் பள்ளிவாசல்கள் கட்டும் பணி விரிவுபடுத்தப்பட்டது. பாகிஸ்தானில் சுமார் 20 பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டன. இருப்பினும், நான்காவது கிலாஃபத்தின் காலத்தில் 13,065 புதிய பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. நூற்றுக்கணக்கான பள்ளிவாசல்கள் புதுப்பிக்கப்பட்டன அல்லது விரிவாக்கம் செய்யப்பட்டன.

**நூறு பள்ளிவாசல்கள் கட்டும் திட்டம்**

1989-ல் ஜெர்மனியில் 100 பள்ளிவாசல்கள் கட்டும் இயக்கத்தை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தொடங்கினார்கள். மே 22, 1997 அன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் துணைவியார் ஸய்யிதா மஹ்ர் ஆபா அவர்கள் மரணமடைந்தார்கள். 23 மே அன்று ஜெர்மனியின் வருடாந்திர குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமாவில் உரை நிகழ்த்தியவாறு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறினார்கள்:

ஜெர்மனியின் 100 பள்ளிவாசல்கள் கட்டுமான திட்டத்தில் ஹஸ்ரத் மஹர் ஆபா அவர்கள் சார்பாக 3 லட்சம் ஜெர்மன் மார்க் தொகை

வழங்கப்படும்.

(பின்னர் 5 லட்சமாக அதிகரித்து விட்டார்கள்) மேலும், தம் சார்பாக ஐம்பதாயிரம் ஜெர்மன் மார்க் தொகையை வழங்குவதாக அறிவித்தார்கள். (பின்னர் ஐம்பது லட்சம் ஜெர்மன் மார்க்குகள் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது).

ஆக, இந்த திட்டத்தின் கீழ் டிசம்பர் 25, 1998-ம் ஆண்டில் முதல் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டினார்கள். அதன் பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் பல ஆஃப்ரிக்கன் நாடுகளிலும் நூறு பள்ளிவாசல்கள் கட்டுமானத்திற்கான திட்டங்களை வழங்கினார்கள். எனவே இவ்வாறு பல நாடுகளிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கென்யாவில் இத்திட்டத்தின் கீழ் 70 பள்ளிவாசல்களும், தான்சானியாவில் 33-க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களும் கட்டப்பட்டுள்ளன.

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல்**

பிரிட்டனில் ஒரு புதிய மற்றும் விசாலமான பள்ளிவாசலுக்காக பிப்ரவரி 24, 1995 அன்று 5 மில்லியன் பவுண்டுகள் திரட்டும் இயக்கத்தை ஹுஸூர் அன்வர் அவர்கள் தொடங்கினார்கள். மார்ச் 28, 1999 அன்று ஹுஸூர் அவர்களால் முன்மொழியப்பட்ட இடத்தில் ஈதுல்-அழ்ஹா தொழுகையை நடத்தினார்கள். அதே ஆண்டு அக்டோபர் 19 அன்று பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அக்டோபர் 3, 2003 அன்று இது திறந்து வைக்கப்பட்டது. ஒரே நேரத்தில் பத்தாயிரம் நபர்கள் தொழ முடியும். இது மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய பள்ளிவாசலாகும்.

**ஐந்தாவது கிலாஃபத்தின் அருளுக்குரிய காலத்தில் இறை வணக்கங்களை நிலைநாட்டுதல்**

ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறை வணக்கங்கள் மற்றும் கிலாஃபத்திற்கும் இடையிலான ஓர் உறுதி மிக்கத் தொடர்பை குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

கிலாஃபத்துடன் உங்களுக்கு இருக்கும் மிகப்பெரிய தொடர்பு தொழுகைதான் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். எங்கு நம்பிக்கையாளர்களின் உள்ளங்களுக்கு அமைதி மற்றும் கிலாஃபத்திற்கான வாக்குறுதி உள்ளதோ அங்கு அத்துடன் அடுத்த வசனத்திலேயே தொழுகையை நிலை நாட்டுவதற்கான கட்டளையும் உள்ளது. (அந்நூர்: 57)

எனவே உறுதிப்பாட்டைப் பெறுவதற்கும், கிலாஃபத் அமைப்பிலிருந்து பயனடைவதற்கான முதல் நிபந்தனை தொழுகையை நிலைநாட்ட வேண்டும் என்பதாகும். ஏனெனில், இறை வணக்கங்களும், தொழுகையுமே எப்படிப்பட்ட விஷயம் என்றால், அது அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்கக் கூடியவையாகும். இறைவன் கூறுகின்றான்:

எனது இந்த அருட்கொடைக்குப் பிறகு நீங்கள் எனக்கு நன்றி செலுத்தி என்னை வணங்குவதன் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால், பின்னர் அந்நிலையில் நீங்கள் கட்டுப்படாதவர்களாக இருப்பீர்கள். பின்னர் நன்றி செலுத்துதல் இருக்காது, நன்றி கேடு இருக்கும். மேலும் கட்டுப்படாதவர்களுக்கு கிலாஃபத்திற்கான வாக்குறுதி பொருந்தாது. இன்னும் கூறப்போனால், அந்த வாக்குறுதி நம்பிக்கையாளர்களுக்கானதாகும். ஆக, தமது தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்தாத ஒவ்வொரு நபரும் கிலாஃபத் அமைப்பின் அருளிலிருந்து பயன்பெற முடியாது. இது ஓர் எச்சரிக்கையாகும். கிலாஃபத் அமைப்பிலிருந்து பயன்பெற வேண்டும் என்றால், பின்னர் அவர்கள் என்னை மட்டுமே வணங்குவார்கள் என்ற அல்லாஹ்வின் இந்தக் கட்டளையின்படி செயல்படுவார்கள்.

எனவே ஒவ்வோர் அஹ்மதியும் தமது உள்ளத்தில் இந்த எண்ணத்தை நன்றாக பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது கிலாஃபத்தின் வடிவில் கிடைக்கப் பெற்றுள்ள இந்த அருட்கொடையிலிருந்து ஒருவர் தமது தொழுகைகளை பாதுகாப்பவராக இருக்கும் போதுதான் பயன் பெற முடியும். (குத்பாத்தே மஸ்ரூர், தொகுதி 5, பக்கம் 150 - 151)

**தொழுகையை நிலைநாட்டல்**

ஹுஸூர் அன்வர் கூறுகின்றார்கள்:

இறைவனை வணங்குவதை நமது பிறப்பின் நோக்கம் என்று அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். எனவே, கிளை அமைப்புகளும், ஜமாஅத் அமைப்பும் காலத்திற்கேற்ப சோம்பேறித்தனத்தைத் தவிர்த்து, ஒவ்வொரு நாளும் ஆன்மீக முன்னேற்றத்தை நோக்கி நகரும் வகையிலான திட்டங்களை உருவாக்க வேண்டும். நமது இறை வணக்கங்களின் முன்னேற்றமே நமக்கு வெற்றியை வழங்கக் கூடியதாகும். எனவே இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். அனைத்து அமைப்புகளும் மிகவும் கவனமாக செயல்படுவது அவசியமாகும். லஜ்னா இமாயில்லாஹ்வும் இது தொடர்பான தனது பங்களிப்பை ஆற்ற வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் தொழுகைகளை வீடுகளில் கண்காணிக்க வேண்டும். ஆண்களும், இளைஞர்களும் பள்ளிவாசலுக்கு வந்து ஜமாஅத்துடன் தொழுகை நடத்துவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

பள்ளிவாசல்களுக்குச் செல்வதற்குத் தொடர்ந்து நினைவூட்டிக்கொண்டே இருப்பது பெண்களின் கடமையாகும். பெண்கள் தங்கள் பங்களிப்பைச் சரியாகச் செய்தால், ஒரு அசாதாரண மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.(ஜூமுஆ பேருரை, 27 ஜனவரி 2017)

அதேபோன்று, மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் பாரத் 2025-ம் ஆண்டு வருடாந்திர இஜ்திமாவில் ஹுஸூர் அன்வர் அவர்கள் வழங்கிய தூதுச் செய்தியில் கூறுகின்றார்கள்:

அன்ஸாருல்லாஹ்வின் பெரிய பொறுப்பு என்னவென்றால், அவர்கள் தொழுகையை நிலைநாட்டுவதன் (இகாமத்துஸ் ஸலாத்) முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு, அதை நிறைவேற்றுபவர்களாக மாற வேண்டும். உங்கள் குழந்தைகளுக்கும், குடும்பத்தினருக்கும் தொழுகையின் பக்கம் கவனமூட்டுங்கள். அனைத்து அன்ஸார்களும் இதில் கவனம் செலுத்தினால், ஒரு புரட்சியே ஏற்படக் கூடும். எனவே, இதில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். (அன்ஸாருல்லாஹ் மாத இதழ், டிசம்பர் 2025)

**ஃபஜ்ர் தொழுகை மற்றும் இணையதளம்**

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறுகின்றார்கள்:

பெரும்பாலான வீடுகளில் ஆய்வு செய்யுங்கள்: பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை ஃபஜ்ர் தொழுகையை ஏன் தொழுவதில்லை என்றால், இரவு நீண்ட நேரம் வரை தொலைக்காட்சி பார்க்கின்றார்கள் அல்லது இணையதளத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். தமது நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அதன் விளைவாக, அதிகாலையில் கண் விழிப்பதில்லை. இன்னும் சிலரோ, காலையில் தொழுகைக்காக எழுவதன் பக்கம் செலுத்துவதில்லை. (ஜூமுஆ பேருரை, 20 மே 2016)

**அருளுக்குரிய ரமலான்**

இதேபோல், ரமலான் தொடர்பாகப் பல குத்பாக்களில் அதன் முக்கியத்துவம் மற்றும் கண்ணியத்தை கருத்தில்

Proprietor off : 044- 2200 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➤ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➤ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➤ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➤ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL : razikxerox@gmail.com

கொண்டவாறு ரமலானைக் கழிக்க வேண்டும் என்று அன்னார் வழிகாட்டியுள்ளார்கள். மேலும் கூறினார்கள்:

ஆண்டிற்கு குறைந்தது 40 நஃபில் நோன்புகள் வைக்கவும்: குறைந்தது நாற்பது நஃபில் நோன்புகளை ஆண்டு முழுவதும் வைக்க வேண்டும். அதாவது, நாற்பது வாரங்களுக்கு வாரம் ஒருமுறை நோன்பு வைக்க வேண்டும். துஆக்கள் செய்ய வேண்டும். நஃபில் தொழுங்கள்.தான தர்மங்கள் செய்யுங்கள்.

(ஜுமுஆ பேருரை, 12 பிப்ரவரி 2016)

ஹுஸூர் அவர்கள் இறை வணக்கங்கள் தொடர்பான பல்வேறு விஷயங்களை மிகவும் எளிமையான முறையில் விளக்கியுள்ளார்கள். இப்போதும் இந்த இறை வணக்கங்களுக்கான அறிவுரைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்:

'எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் ஒவ்வொரு கணமும் இறைவனின் கட்டளைகளின்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். தமது வாழ்க்கையை இறை வணக்கங்களாலும், இறைவனிடம் பாவமன்னிப்பு செய்தவாறும், அல்லாஹ்வின் பாதுகாப்பின் கீழ் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் எல்லா விதமான உரிமைகளையும் நிறைவேற்றுவதற்கும் இறைவனின் உதவியால் நமக்கு சக்தி கிடைக்கும்.

எனவே ஒரு இறையச்சம் கொண்ட மனிதர் பக்குவம் கொண்ட மனிதர் ஆவார். அவர் எப்போதும் இறைவனின் கட்டளைகளின்படி செயல்படும் முயற்சி செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்.'

(ஜுமுஆ பேருரை, 14 ஏப்ரல் 2006)

இன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அருளுக்குரிய விருப்பத்திற்கு ஏற்ப, அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நிழலின் கீழ் உலகம் முழுவதும் 16,000-க்கும் மேற்பட்ட அஹ்மதிய்யா பள்ளிவாசல்களின் மினாராக்களிலிருந்து வரும் பாங்கோசை எங்கு ஒலித்துக் கொண்டிருக்குமோ, அங்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஒருபோதும் சூரியன் மறைவதில்லை என்ற உண்மைத்துவத்தையும் பறைசாற்றி கொண்டிருக்கின்றது.

சுருக்கமாகச் சொன்னால், கிலாஃபத் எப்போதும் இறை வணக்க முறைகளின் பாதுகாவலராகவும், இறை மார்க்கத்தின் கொடியை ஏந்திச் செல்லக் கூடியதாகவும் இருந்து வருகிறது. இதுவே அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மிக தனித்துவமான அடையாளமாகும். அஹ்மதிய்யா கிலாஃபத்தின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும், அவர்கள் என்னையே வணங்குவார்கள்; எனக்கு எதையும் இணையாக்க மாட்டார்கள் என்ற திருக்குர்ஆனின் வசனத்திற்கு ஓர் வாழும் உதாரணமாகத் திகழ்கிறது. அஹ்மதிய்யா வரலாறு இத்தகைய ஈமானிய நிகழ்வுகளால் நிறைந்துள்ளது. எல்லாக் காலத்திலும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் முதல் முன்னுரிமை, ஏகத்துவக் கொள்கையைப் பரப்புவதும் இறைவனை வணங்குமாறு அழைப்பு விடுப்பதுமே ஆகும்.

இன்று உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் 'ஹைய்யா அலஸ் ஸலாஹ், ஹைய்யா அலல் ஃபலாஹ்' (தொழுகைக்கு வாருங்கள், வெற்றியின் பக்கம் வாருங்கள்) என்று பாங்கு சத்தம் ஒலிக்கிறது.

இது ஒரு பொதுவான மற்றும் உலகளாவிய அழைப்பாகும். இது ஒவ்வொரு இதயத்தையும் அழைக்கிறது: 'அன்பின் கரங்களை நீட்டி உன்னை அழைக்கிறோம். வா! இறைவனுக்காகத் திரும்பிப் பார்!. எங்கள் கிலாஃபத்தின் ஒவ்வொரு விருப்பமும் துஆவும் இதுவே ஆகும்:

' ஷைத்தானின் ஆட்சி இவ்வுலகிலிருந்து அழிந்து போகட்டுமாக! உலகம் முழுவதும் என் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் ஆட்சி நிலை பெறட்டுமாக!

தமிழாக்கம்

முரப்பி

A அப்துர் ரஹ்மான் தாஹிர்

** * * * * * * * *

24 - பக்கத் தொடர்ச்சி

அருகில் வாருங்கள். இதில்தான் நன்மை இருக்கிறது.

எல்லா பக்கங்களிலும் விலங்குகள் இருக்கின்றன. நான் பாதுகாப்பு அரண் ஆவேன்.

இந்த குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளால் உலகம் முழுவதும் உள்ள இலட்சக்கணக்கான மக்கள் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். இவர்களைப் பற்றிய நம்பிக்கையை வலுவூட்டும் நற்குறிப்புகள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்களிலும் ஜமாஅத்தின் இதழ்களிலும் காணப்படுகின்றன.

உண்மையின் இந்த ஆன்மிக குரலை செவிமடுக்கின்ற நற்பாக்கியம் நமக்கு கிடைத்திருக்கின்றது என்ற வகையில் அஹ்மதிகளாகிய நாம் மிகவும் நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றோம். இறைவன் காலத்தின் கலீஃபாவின் மூலம் நம்மை ஓர் உலகளாவிய சமுதாயமாக ஆக்கியிருக்கின்றான். இறைவன் நமக்கு காலத்தின் கலீஃபாவின் மூலம் ஆன்மிக மற்றும் பௌதீக அறிவுகளால் நிரப்பியுள்ளான். காலத்தின் கலீஃபாவின் அருளால் உலகிற்கு இஸ்லாத்தின் அமைதி தரும் போதனைகளை கற்பித்துள்ளான். பிறரையும் அதன் அருகில் கொண்டு வருவதற்கான நல்வாய்ப்பையும் வழங்கியுள்ளான். ஆகவே இந்த அருட்கொடையை மதிப்பதும் இந்த கட்டளைகளை நுட்பமாக கவனிப்பதும் அதன்படி செயல்படுவதும் மேலும் நமது அடுத்த தலைமுறையை இதன்படி செயல்படுவதற்காக ஆயத்தமாக்குவதும் மிக அவசியமாகும்.

ஹஸ்ரத் அமீருல் மூமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்றைய நாட்களில் கிலாஃபத்துடன் உள்ள தொடர்புக்காக அல்லாஹ் நமக்கு MTA-வையும் ஓர் ஊடகமாக ஆக்கியுள்ளான். இவ்வாறே அல் இஸ்லாம் வலைதளமும் இருக்கின்றது. இவற்றுடனும் இணைந்திருப்பதற்கான அவசியம் உள்ளது. ஒவ்வோர் அஹ்மதி இளைஞரையும், ஆணையும், பெண்ணையும் இவற்றுடன் இணைக்க முயற்சி செய்ய வேண்டும். ஜமாஅத் அமைப்பும் கிளை அமைப்பும் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். (அல்ஃபஸ்ல், இன்டர் நேஷனல் 30 ஆகஸ்ட், 2013)

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறுகின்றார்கள்:

நம்மிடம் எந்த அளவு தூய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன? எந்த அளவுக்கு நாம் நமது குழந்தைகளையும் ஜமாஅத்துடன் இணைத்து வைக்க முயற்சி செய்கின்றோம்? எந்தளவு நாம் திருக்குர்ஆனின் போதனைகளின்படி செயல்படுகின்றோம்? மேலும், இவர்கள் நம்மை விட நல்ல முஸ்லிம்கள் என்று நம்மைக் குறித்து பிறரும் உயர்வாக உணரும் அளவுக்கு திருக்குர்ஆனின்படி எந்த அளவிற்கு செயல்படுகின்றோம்? இஸ்லாத்தின் எதிரிகள் நம்மைப் பார்த்து இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்படுகின்ற வகையில் நமது முன்மாதிரி இருக்கின்றதா? என்று நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நாம் இந்த இலக்குகளை அடைந்து கொண்டிருக்கின்றோம் என்றால் இன்ஷா அல்லாஹ் இவை நாம் இறைவனின் நெருக்கத்தைப் பெற காரணமாக அமைகின்ற அதேவேளையில் நம்மை எண்ணிக்கையிலும் அதிகரிக்கக் காரணமாக அமையும். மேலும் ஜமாஅத்திற்கு எதிரான வன்முறைகள் எல்லாம் ஒருநாள் காற்றில் பறந்து விடும். அல்லாஹ் தஆலா உங்கள் அனைவருக்கும் மேலும் எனக்கும் ஈமானிலும் உறுதியான நம்பிக்கையிலும் வளர்ச்சியை வழங்குவானாக. ஒவ்வொரு நொடியும் உங்களை தன் பாதுகாப்பில் வைப்பானாக. மேலும் எதிரிகளின் ஒவ்வொரு திட்டத்தையும் மண்ணோடு மண்ணாக்குவானாக. (ஜுமுஆ குத்பா, டிசம்பர் 24, 2013)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ் ) அவர்களின் அனைத்து கட்டளைகளையும் கவனமாக கேட்டு அதன்படி நாமும், நமது சந்ததிகளையும், சந்ததிகளின் சந்ததிகளையும் செயல்பட்டு வர வலியுறுத்திக் கொண்டே இருப்பதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக!

ஆமீன்!

** * * * * * * * *

## 'பத்ர் காதியான் வார இதழ் - ஓர் அறிமுகம்

இறுதிக்காலத்தில் தோன்றவிருந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களின் வெளிப்பாட்டின் அடையாளங்கள் குறித்து திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ள அடையாளங்களில் ஒன்று, அந்தக் காலத்தில் நூல்கள் பரப்பப்படும்' என்பதாகும். அதாவது, பேனாவின் மூலம் கல்வி கற்பிக்கப்படும். அவ்வாறு பரப்பப்படும் ஏடுகள், செய்தித்தாள்கள் மற்றும் இதழ்களில் ஒரு பத்திரிகைதான் 'பத்ர்' பத்திரிகையாகும். இது இஸ்லாம் அஹ்மதிய்யத்தை மட்டுமே பிரச்சாரம் செய்கிறது. மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஒப்புக் கொண்ட மக்களின் கல்வி, தர்பிய்யத் மற்றும் அறிவுசார் வளர்ச்சியை வழங்கும் பணியைச் செய்கிறது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 'அல்-பத்ர்' மற்றும் 'அல்-ஹகம்' பத்திரிகைகளைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

இந்தப் பத்திரிகைகள் என்னுடைய இரு கரங்களாக இருக்கின்றன. இவை இறை இல்ஹாம்களை உடனடியாக நாடுகளில் பரப்புகின்றன. மேலும் சாட்சிகளாக இருக்கின்றன.'

(பத்ர் 8, ஜூன் 1905, பக்கம் 2; மல்ஃபூஸாத் பாகம் 4, பக்கம் 292)

அல்லாஹ்வின் அருளால், இந்தியப் பிரிவினைக்குப் பிறகு, 7 மார்ச், 1952 முதல் 'பத்ர்' பத்திரிகை அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியானிலிருந்து தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. தற்போது இது 74-வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

2016-ஆம் ஆண்டு முதல், 'பத்ர்' பத்திரிகை இந்தி, பெங்காளி, ஒடியா, தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய 7 பிராந்திய மொழிகளில் பதிப்பிக்கப்படுகின்றன. இந்தப் பத்திரிகை ஒவ்வொரு வாரமும் akhbarbadr.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

இது கிலாஃபத்தின் குரலாகும். இதில் காலத்தின் கலீஃபாவின் ஜுமுஆ பேருரைகள், உரைகள், திருமண அறிவிப்புகள், கேள்வி-பதில் வடிவிலான ஜுமுஆ உரைகள், ஹுஸூர் அன்வர் அவர்களின சுற்றுப் பயணங்களின் முக்கிய அறிக்கைகள், மற்றும் அன்னாரது பணிகளின் சுருக்கமான அறிக்கைகள் பிரசுரிக்கப்படுகின்றன. மேலும், இதில் ஜமாஅத்தின் வளர்ச்சி மற்றும் அறிமுகம் தொடர்பான கட்டுரைகளும் இடம் பெறுகின்றன. இந்த வகையில், இது அஹ்மதிய்யத்தின் வரலாறு மற்றும் சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றிற்கான ஒரு முக்கிய ஆதாரமாகவும் பதிவாகவும் விளங்குகிறது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் நிகழும் பிறப்புகள், மரணங்கள், திருமணங்கள் மற்றும் வெற்றிகள் குறித்த அறிவிப்புகளும் இதில் வெளியிடப்படுகின்றன. நோயாளிகளுக்காக துஆ செய்யக் கோரும் அறிவிப்புகள், இறந்தவர்களைப் பற்றிய குறிப்புகள் ஆகியவற்றின் மூலம் உலகெங்கிலும் உள்ள அஹ்மதி சகோதர, சகோதரிகள் அவர்களுக்காக துஆ செய்ய முடிகிறது.

அறிவுசார்ந்த, இலக்கிய மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகளின் களஞ்சியமாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது. இலக்கியத் துணுக்குகள், கவிதைகள் தோட்டமாக இது திகழ்கிறது.

சுருக்கமாகச் சொன்னால், 'பத்ர்' என்பது அஹ்மதிய்யத்தின் ஒரு நதியாகும். இது ஒவ்வொரு வாரமும் எண்ணற்ற இதயங்களின் தாகத்தைத் தீர்க்கின்றது.

நமது தலைவர் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலின்படி, நான்கு அம்சத் திட்டத்தின் கீழ் ஒவ்வோர் அஹ்மதி வீட்டிலும் பத்ர் பத்திரிகை அனைவரிடமும் சென்றடைவது அவசியமாகும். எனவே, ஜமாஅத் நண்பர்கள் உருது மொழியிலோ அல்லது தத்தமது வட்டார மொழிகளிலோ வெளிவரும் பத்ர் வார இதழின் சந்தாதாரர்களாக ஆகுமாறும், இந்தப் பத்திரிகை சுயசார்பு அடைந்து தொடர்ந்து வெளிவருவதற்கு நிதி ரீதியாக ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்தப் பத்திரிகையின் மூலம் சரியான முறையில் பயனடைய அருள் புரிவானாக! ஆமீன்!

அனைத்து மாவட்ட அமீர்மார்கள், உள்ளூர் ஜமாஅத் தலைவர்கள், பொறுப்புப் பரப்புரையாளர்கள் முபல்லிஃக்மார்கள் மற்றும் உள்ளூர் முஅல்லிம் மார்கள் இந்த விஷயத்தில் ஜமாஅத் உறுப்பினர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு ஒரு சிறப்புக் கோரிக்கை விடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஜமாஅத்தின் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் ஒரு இதழாவது சென்றடைவதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ் பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் உயர்ந்த விருப்பம் மற்றும் எதிர்பார்ப்புகளின்படி, இதன் சந்தாதாரர்கள் மற்றும் வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டே இருங்கள்.

ஜஸாக்கமுல்லாஹ்! .
நிர்வாகி, வார இதழ் 'பத்ர்'
காதியான்

* * * * * * * * *

14- ம் பக்கத் தொடர்ச்சி......

பொருள் வடிவில் இரண்டு நிலையிலும் இதை பார்த்துக் கொண்டிருக்கின்றது. அதாவது திருக்குர்ஆனுடைய பாதுகாப்பின் காரணம் திக்ர் என்ற சிறிய சொல்லில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதே நிலைதான் நுபுவ்வத் தொடர்பாக உள்ளது. இறைவன் உலகத்தை ஒரு மாபெரும் குழப்பத்தில் சிக்கிக் கொண்டு இருப்பதை பார்த்து அதை சீர்திருத்த வேண்டும் என்பதற்காக ஒரு நபரை தன் புறமிருந்து ரஸூல் அல்லது நபியாக ஆக்கி அனுப்புகின்றான். ஆனால், நபி மனிதராக இருக்கின்ற காரணத்தினால் மனித படைப்பின் விஷயங்கள் அனைத:தும் அவருடைய வாழ்வின் அங்கமாக இருக்கின்றன. இதன் அடிப்படையில் சில எண்ணக் கூடிய ஆண்டுகளை விட அதிகமாக அவருக்கு அந்த வாழ்க்கை ஒத்துழைப்பு தருவதில்லை. இவ்வாறான நிலையில் அல்லாஹ் அந்த நபியுடைய மிஷனை வெற்றி பெறச் செய்ய மேலும் அதன் உச்சத்தை அடைய வைப்பதற்காக அவருடைய மரணத்திற்கு பிறகு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.அதன் மூலமாக நபியினால் விதைக்கப்பட்ட விதை தன்னுடைய உச்சத்தை அடைவது அவசியமாக இருக்கின்றது. மேலும் நபியை அனுப்பி எந்த சீர்திருத்தத்தை உருவாக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகின்றானோ அது உலகத்தில் நிலைபெற்று பரவ வேண்டும். இந்த இறைவனுடைய ஏற்பாடு அதாவது நுபுவ்வத்தின் முழுமைத்துவம் என்று சொல்ல வேண்டும். அது கிலாஃபத் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. அல்லாஹ்வுடைய நடைமுறை என்னவென்றால், ஒவ்வொரு நபிக்குப் பிறகும் அவருடைய பணியை முழுமைப்படுத்துவதற்காக கிலாஃபத் தொடரை நிலைநாட்டுகின்றான். இந்த கலீஃபாக்கள் பொதுவாக நபி அல்லது இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர் இல்லை. ஆனால், நபியுடைய தர்பிய்யத்தை பெற்று அவருடைய இறை நோக்கமான மிஷனை புரிந்து செயல்படுத்துகின்றனர்.

* * * * * * * * *

## ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளிலிருந்து பயன் பெறுவதன் முக்கியத்துவமும் &அருட்களும்

(மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது ஸாஹிப் காதிம், ஆசிரியர் - பத்ர் வார இதழ், உருது )

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

يٰٓأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اسْتَجِيْبُوْا لِلّٰهِ وَلِلرَّسُوْلِ إِذَا دَعَاكُمْ لِمَا يُحْيِيْكُمْ

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! (அல்லாஹ்வின் தூதராகிய) அவர் உங்களுக்கு உயிர் கொடுப்பதற்காக அழைத்தால் நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் பதில் அளியுங்கள். (8: 25)

لِلَّذِيْنَ اسْتَجَابُوْا لِرَبِّهِمُ الْحُسْنٰى ۚ وَالَّذِيْنَ لَمْ يَسْتَجِيْبُوْا لَهُ لَوْ أَنَّ لَهُمْ مَّا فِي الْأَرْضِ جَمِيْعًا وَّمِثْلَهُ مَعَهُ لَافْتَدَوْا بِهِ ۚ أُولٰٓئِكَ لَهُمْ سُوْٓءُ الْحِسَابِ ۙ وَمَأْوٰىهُمْ جَهَنَّمُ ۖ وَبِئْسَ الْمِهَادُ

பொருள் : தங்கள் இறைவன் கூறுவதை ஏற்றுக் கொண்டவர்களுக்கு (நிலையான) நன்மை உண்டு. மேலும் அவன் கூறுவதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் பூமியிலுள்ளவை அனைத்தும் இன்னும் அவற்றிற்கு சமமானவையும் அவர்களுக்கு இருந்து, அவர்கள் அப்பொருள்களையெல்லாம் தங்களுக்கு ஈடாகக் கொடுத்தாலும் அவர்களுக்குத் தீய (முடிவைக் கொண்ட) கேள்விக் கணக்கு உள்ளது. அவர்களின் தங்குமிடம் நரகமாகும்.அது மிகக் கெட்ட இடமாகும். (13: 19)

மதிப்பிற்குரியவர்களே, நாம் நற்பேறு பெற்ற ஜமாஅத் ஆவோம். அல்லாஹ்வின் அருளால் இக்காலக்கட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்பட்டு இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளவும், நபித்துவத்தின் வழியில் வந்த கிலாஃபத்திற்கு கீழ்படிந்து இறைவனின் மகத்துவம் வாய்ந்த ஆன்மிக, பௌதீக அருட்களை பெறுவதற்கான நற்பேறை பெற்று வருகின்றோம். இமாம் மஹ்தி (அலை) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒப்பாக இருப்பார் என்று அல்லாஹ் கூறியிருக்கின்றான். அல்ஜுமுஆ என்ற அதிகாரத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

هُوَ الَّذِيْ بَعَثَ فِي الْأُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۚ وَإِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ

பொருள்: அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு - அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தபோதிலும் - அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி அவர்களைத் தூய்மைப்படுத்தி அவர்களுக்கு வேதத்தையும், நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான். (62: 03)

இதற்கு அடுத்த வசனத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றம் முன்னவர்களுக்கிடையில் ஏற்பட்டதைப் போன்றே பின்னவர்களுக்கு மத்தியிலும் உவமை வடிவில் நிகழும். இதில் அவர்களுக்கு இதே பணிகள் தான் இருக்கும் என்று கூறுகின்றான்.

மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமை மிக்கவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான். (62: 04)

அதாவது, இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றம் உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் தோற்றமாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதலாம் தோற்றத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதே பொறுப்புகள் தான் இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவை இறைவனின் வசனங்களை ஓதிக்காட்டுதல், அவர்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்துதல், இறை வேதத்தைக் கற்பித்தல் மற்றும் அதிலுள்ள கட்டளைகளை எடுத்துரைத்தல் ஆகியவையே அந்த பணிகள். முந்தைய சான்றோர்களும் இதனை விளக்கி எழுதுகையில் வரவிருக்கும் மஹ்தியிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளிகள் பிரதிபலிக்கும் என்று எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் ஸாஹிப் தஹ்லவி (ரஹி) அவர்கள் அல்கைருல் கஸீர் என்ற தமது நூலில் முன்னறிவிப்பு செய்தவாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மிக ஒளிகள் பிரதிபலிப்பதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹே அதிக உரிமை படைத்தவர் ஆவார். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இந்த சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண மனிதராக இருப்பார் என்று பொதுமக்கள் கருதுகின்றனர். அவ்வாறல்ல, மாறாக, அவர் முஹம்மத் என்ற பெயரின் உண்மையான விளக்கமாகவும், பிரதிபலிப்பாகவும் இருப்பார். (ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஏப்ரல் 5, 1985- அன்று ஆற்றிய உரை)

மதிப்பிற்குரியவர்களே! வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காலத்தின் இமாமாக தோன்றுகின்றவர்களிடம் இருக்கும் ஆற்றலைக் குறிப்பிட்டு கூறும் இடத்தில் பஸத் ஃபில் இல்மி என்பதும் ஒன்று என்றார்கள். அதாவது அல்லாஹ் அனுப்பவிருக்கின்ற தன் பிரதிநிதிக்கு ஆன்மிக மற்றும் பௌதீக அறிவுகளின் விசாலத்தை வழங்குகின்றான்.

இதை விளக்கியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

மூன்றாவது திறன் அறிவில் மேன்மை வகிக்கும் திறனாகும். இது இமாமத்திற்காக மிகவும் இன்றியமையாத ஒரு சிறப்புத் திறனாகும். இமாம் என்ற சொல்லின் உட்பொருள் எல்லா நுட்பங்கள், ஞானங்கள், அன்பின் இன்றியமையாதவை, உண்மை மற்றும் விசுவாசம் ஆகியவற்றில் முந்திச் செல்வதை எதிர்பார்க்கின்றது. ஆகையால் அவர் தன் பிற எல்லாத் திறன்களையும் இதிலேயே ஆக்கிக் கொள்கின்றார். மேலும்,

رَبِّ زِدْنِيْ عِلْمًا

(20: 115) என்ற துஆவில் எப்போதும் மூழ்கி இருக்கின்றார். முன்னதாகவே அவருடைய இயல்பும், உணர்வுகளும் இந்த அம்சங்களுக்காக அற்புதமான முறையில் தகுதி வாய்ந்துள்ளன. ஆகவே இறைவனின் அருளால் இறைஞானத்தில் அவருக்கு ஒரு மேன்மை வழங்கப்படுகின்றது. மேலும் அவருடைய சமகாலத்தில் அவருக்கு நிகராகத் திருக்குர்ஆன் ஞானங்களை அறிந்தவர்; முழுமையான பயனளிப்பவர் மற்றும் அத்தாட்சிகளை நிறைவு செய்பவர் யாரும் இருப்பதில்லை. அவரது சீரிய கருத்துகள் பிறருடைய அறிவிலுள்ள பிழைகளைத் திருத்துகின்றன. மார்க்க ஞானங்களை எடுத்துரைப்பதில் எவருடைய கருத்தும் இவருடைய கருத்திற்கு எதிராக இருக்குமாயின் உண்மை இவர் பக்கமே இருக்கும், ஏனெனில், உண்மையான நுண்ணறிவைத் தெரிந்து கொள்வதில் அவருடைய முற்போக்கு சிந்தனையின் ஒளி அவருக்கு உதவுகின்றது. பிரகாசமான கதிர்களைக் கொண்ட அந்த ஒளி பிறருக்கு வழங்கப்படுவதில்லை.

ذٰلِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ

(62:05).

கோழி, முட்டைகளைத் தன் சிறகுகளுக்குள் வைத்து அடைகாத்து, குஞ்சு பொரிக்கின்றது. பிறகு அந்தக் குஞ்சுகளை சிறகுகளுக்குள் வைத்து தன் திறமைகளை அவற்றிற்கு ஊட்டுகின்றது. அதேபோன்று இமாமும் தம் ஆன்மிக ஞானங்களால் தம்முடன் இருக்கும் மக்களுக்கு ஆன்மிக அறிவில் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றார்.

இந்த தோட்டத்திற்கு அவர் இறைவனின் சார்பாக தோட்டக்காரராக அமர்த்தப்படுகின்றார். எல்லாவித ஆட்சேபனைகளைப் போக்குவதும் ஆட்சேபனை செய்பவர்கள் அனைவரது வாயை அடைப்பதும் அவரது கடமையாகும். ஆட்சேபனைகளைப் போக்குவது மட்டும் அவரது கடமையல்ல. கூடுதலாக, இஸ்லாத்தின் அழகையும் அதன் பொலிவையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவதும் அவரது கடமையாகும். ஆகவே அப்படிப்பட்ட நபர் மிகவும் மரியாதைக்குரியவரும், போற்றத்தக்கவரும் ஆவார். ஏனெனில், அவருடைய இருப்பினால் இஸ்லாத்தின் வாழ்வு வெளிப்படுகின்றது.அவர் இஸ்லாத்தின் பெருமிதம் ஆவார். அவர் அனைத்து மக்களுக்கும் இறைவனால் சான்று பூர்த்தியாக்கப்பட்டவர் ஆவார். அவரை விட்டு விலகியிருப்பது யாருக்கும் தகுந்ததன்று. ஏனெனில், அவர் இறைவனின் விருப்பம் மற்றும் கட்டளையால்

இஸ்லாத்தின் கண்ணியத்தை வளர்ப்பவரும் எல்லா முஸ்லிம்களின் மீதும் அனுதாபம் கொண்டவரும். மார்க்க ஞானங்களை ஒரு வளையத்தைப் போன்று சூழ்ந்தவருமாவார். இஸ்லாம் மற்றும் நிராகரிப்பின் ஒவ்வொரு மல்யுத்த மைதானத்திலும் அவரே பதிலளிக்கின்றார். அவருடைய தூய மூச்சுக் காற்றே நிராகரிப்பை முற்றிலும் அழிக்கின்றது. அவரே எல்லாமாகவும், அவரைத் தவிர மற்றவர்கள் அவரது அங்கமாகவும் பாவிக்கப்படுகின்றனர். (இமாமின் தேவை எனும் நூல், ரூஹானீ கஸாயீன், தொகுதி 13, பக்கம் 479 - 481)

இதிலிருந்து இக்காலக்கட்டத்தில் நபித்துவ வழியில் தோன்றிய கிலாஃபத்தின் மூலம் தரப்படுகின்ற கட்டளைகளுக்கு இருக்கும் மதிப்பை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த மகத்துவம் வாய்ந்த கிலாஃபத்தைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த கிலாஃபத் நபித்துவத்தின் வழியில் தோன்றும் என்று கூறினார்கள். இதன்படி இந்த கிலாஃபத்தின் மகத்துவம் மற்றும் மேன்மையை பொருத்த வரை நபித்துவத்தின் அருள்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த கிலாஃபத்தைக் குறித்து இது அல்லாஹ்வின் இரண்டாவது வல்லமை என்று குறிப்பிடுகின்றார்கள்:

அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும், அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில், அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும் நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்போதும் உங்களுடனிருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் குறிப்பிட்டுள்ளது. மேலும் வாக்குறுதி என்னைப் பற்றி அல்ல. மாறாக, உங்களைப் பற்றியதாகும். நான் உம்மை பின்பற்றும் ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான். (அல்வஸிய்யத், உயில் பக்கம் - 12 -13)

அஹ்மதிய்யா கிலாஃபத் இறைவனின் இரண்டாவது வல்லமையாகும். இதன் அருளால் கிலாஃபத்திற்காக தம் உயிரையும் தியாகம் செய்பவர்களுக்காக கியாமத் வரை நிரந்தர வெற்றிக்கான வாக்குறுதியை இறைவன் வழங்கியுள்ளான். இந்த வெற்றியை அடைவதற்காக காலத்தின் கலீஃபாவின் கட்டளைகளைக் கேட்டு கட்டுப்படுவோம். அதன்படி உளப்பூர்வமாக செயல்படுவோம் என்ற நிபந்தனை நமக்கு விதிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இதுவே வானத்திலிருந்து இறங்கிய பால் ஆகும். இதனை உள்ளத்திலும், மனதிலும் பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் இறங்கியது.

(தத்கிரா, பக்கம் 558)

இதனை விளக்கியவாறு இது ஞானம் மற்றும் நுட்பமான அறிவு எனும் பாலாகும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறினார்கள்:

يا احمد فَاضَتِ الرحمة على شفتيك

كلام أفصحت من لدن ربّ كريم

(தத்கிரா : 558)

அஹ்மதே! உமது உதடுகளிலிருந்து இறைவனின் கருணை வெளிப்படுகின்றது. உமது சொற்கள் இறைவனால் செரிவூட்டப்பட்டுள்ளன.

இதுவே அந்த ஆன்மிகப் பால் மற்றும் கருணையாகும். இது இன்று இறை வல்லமையின் இரண்டாம் தோற்றத்தை வெளிப்படுத்துபவர்கள் மூலம் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

இந்த வானத்தின் பால் நூற்றி இருபத்து ஐந்து வருடங்களாக நம்மவர்கள் மீதும் பொழிந்து கொண்டே இருக்கின்றது. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் வரலாற்றை நாம் ஆய்வு செய்தால் ஒவ்வொரு கிலாஃபத்தின் காலகட்டத்திலும் அந்தந்த காலத்திற்கு தகுந்தார் போல் தேவைக்கு ஏற்ப முழு உலகத்திற்கும் வான் மழையாய் பயனளித்திருக்கின்றது என்பதை நாம் தெளிவாக உணர முடிகிறது.

இந்த மழை சர்வதேச அளவிலும் ஆட்சி செய்வதற்கான ஒழுங்குமுறைகளை அரசுகளுக்கு கற்பித்திருக்கின்றது. இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் அரசுகளுக்கு அதன் கடமைகளை உணர்த்தியிருக்கின்றது.

இன்னொரு பக்கம், உலகின் அனைத்து துறைகளைச் சார்ந்த வல்லுநர்களுக்கும் அவர்கள் பொருளாதார வல்லுநர்களாக இருந்தாலும் சமூக அறிவியலின் வல்லுநர்களாக இருந்தாலும், அறிவியல் வல்லுநர்களாக இருந்தாலும், மருத்துவத் துறையில் வல்லுநர்களாக இருந்தாலும் அல்லது புவியியல் துறை வல்லுநர்களாக இருந்தாலும் அல்லது வரலாற்றுத் துறை வல்லுநர்களாக இருந்தாலும் அல்லது ஆன்மிக அறிஞர்களாக இருந்தாலும் அனைவருக்கும் மிகச் சிறந்த முறையில் வழிகாட்டியுள்ளார்கள். எல்லாருடைய தவறுகளையும், குற்றங்களையும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எழுதிய தஸ்தீக் பராஹீனே அஹ்மதிய்யா மற்றும் தர்ஸுல் குர்ஆன் மற்றும் அன்னாரின் மருத்துவம் தொடர்பான நூல்கள். மேலும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அரசியல் தலைவர்களுக்கு வழங்கிய ஆலோசனைகள், பொருளாதாரம் சம்பந்தமாக அன்னார் வழங்கிய உரைகள், அரசியல் அறிவில் ஆழ்ந்த கருத்துகளைக் கொண்ட தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் எனும் நூல், தஃப்ஸீரே கபீர், இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு, அஹ்மதிய்யத் என்றால் உண்மை இஸ்லாம், தஃவத்துல் அமீர் போன்ற நூல்கள் மற்றும் பேருரைகள் போன்றவை இதற்கு சான்றாகும்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அல்லாஹ்வின் ஆலயம் கட்டப்படுவதன் நோக்கம் குறித்து உலக மக்களுக்கு எடுத்துரைத்த வழிகாட்டல்கள், பொருளாதார வீழ்ச்சிக்கு தீர்வு குறித்து வழங்கிய குத்பாக்கள் மற்றும் பாகிஸ்தானிய அரசியல்வாதிகள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக நிறைவேற்றிய இஸ்லாம் விரோத தீர்மானங்களைக் குறித்து அவர்களுக்கு கொடுத்த வழிகாட்டல்கள், எதிர்காலத்தில் அந்த அரசுக்கு ஏற்படவிருக்கும் அவலநிலைகள் குறித்த எச்சரிக்கைகள். இதனை அந்நாட்டின் அறிஞர்கள் இன்று ஏற்றுக் கொண்டுள்ளனர். மார்க்க அறிவுகள் சார்ந்த தப்ஃலீக் மற்றும் தர்பிய்யத் குத்பாக்கள். மேலும் ஒவ்வொரு கருத்தைக் குறித்தும் அவர்களுக்கு இருந்த ஆழமான பார்வையும், விளக்கங்களும் இவற்றுக்கு சான்றுகளாகும்.

மேலும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப திருக்குர்ஆனுக்கு வழங்கிய விளக்கவுரை இது தொடர்பாக உலகின் முன் மஜ்லிஸே இர்ஃபான் மூலம் பல்வேறு தலைப்புகளில் விரிவாக நிகழ்த்திய கருத்துப் பரிமாற்றங்கள். ஹோமியோபதி சிகிச்சை முறையின் மீது விரிவான ஆய்வுகளும் அதன் மூலம் உலகிற்கு செய்த உன்னத பலன்களும் இதற்கு சான்றாகும்.

மேலும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு இஸ்லாமிய வரலாற்றின் மீது இருக்கும் ஆழமான அறிவு மற்றும் ஈமானை வலுவூட்டும் குத்பாக்கள் மற்றும் அவற்றை எடுத்துரைப்பது உலக நாடுகளின் தலைவர்களுக்கு கடிதங்கள் மூலமும் சொற்பொழிவுகள் மூலமும் உலக அமைதிக்காக இஸ்லாம் கூறும் போதனைகளை எடுத்துரைத்தல், கல்வி, தர்பிய்யத் மற்றும் தப்ஃலீக் மற்றும் நிர்வாகம் ஆகியவை சார்ந்த குத்பாக்களின் மூலம் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தர்பிய்யத் வழங்கி பைஅத்தின் நோக்கத்தை அடைவது. வழிகாட்டல் ஆகிய இவையனைத்தும் அந்த ஆன்மிக பாலாகும். இதனைக் குறித்து தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் இல்ஹாம் அறிவித்தான்.

வானத்திலிருந்து அதிகமாக பால் இறங்கியுள்ளது; பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று இறைவன் கூறினான். இறைவனின் முதல் தோற்றத்தின் வெளிப்பாட்டின் மூலமாக இறைவனின் இந்த கருணை இறங்கியது. அதன் பின் தோன்றிய கலீஃபாக்களிடமிருந்தும் இந்த அருள் இறங்கிய வண்ணம் உள்ளது.

மதிப்பிற்குரியவர்களே! இறை வல்லமையின் முதல் தோற்றமாகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் இறைவனின் இரண்டாவது வல்லமையாகிய கிலஃபத்தின் காலத்திலும் இரவு பகலாக பொழிந்து கொண்டிருக்கும் இறைவனின் தூய ஆவி நமது ஆன்மிக மற்றும் பௌதீக வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாததாக இறைவன் ஆக்கியுள்ளான். மேலும் அல்லாஹ்வும் அவனது தூதரும் உங்களுக்கு உயிர்

கொடுப்பதற்காக அதாவது ஆன்மிக உயிர் கொடுப்பதற்காக அழைத்தால் அதற்கு செவிசாய்க்கவும் அதற்கு பதிலுரைக்கவும் அறிவுரை வழங்கியுள்ளான்.

அவர்களின் கருத்துகளுக்கு உங்கள் உள்ளத்திலும் மூளையிலும் இடமளியுங்கள்.

இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

தங்கள் இறைவன் கூறுவதை ஏற்றுக் கொண்டவர்களுக்கு (நிலையான) நன்மையுண்டு. மேலும் அவன் கூறுவதை ஏற்றுக் கொள்ளாதவர்கள், பூமியிலுள்ளவை அனைத்தும் இன்னும் அவற்றிற்கு சமமானவையும் அவர்களுக்கு இருந்து, அவர்கள் அப்பொருள்களை எல்லாம் தங்களுக்கு ஈடாகக் கொடுத்தாலும், அவர்களுக்குத் தீய (முடிவைக் கொண்ட) கேள்விக் கணக்கு உள்ளது. (13: 19)

இந்தத் தீய முடிவு அவர்களை மட்டும் பின்தொடர்வதில்லை. மாறாக, அவர்களின் சந்ததிகளையும் பின் தொடரும்.

காலத்தின் கலீஃபாவின் கட்டளையைக் கேட்பதும், அதனை கேட்பதற்காக நிம்மதியிழந்தவாறு இருப்பதும் ஒவ்வொரு நம்பிக்கையாளரின் நடைமுறையாகும். இறுதியில் இந்த நடைமுறை நிரந்தர மகிழ்ச்சிக்கும், நிரந்தர மனஅமைதி தரும் வாழ்வுக்கும் வாரிசாக்குகின்றது. இதன் மூலம் நம்பிக்கையாளரின் வருங்கால சந்ததிகளும் பயனடைந்து கொண்டே செல்கின்றனர்.

காலத்தின் கலீஃபாவின் கட்டளைகளை கேட்பது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கூற்றை நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இறைவன் யாரை கிலாஃபத்திற்காக நிறுத்துகின்றானோ அவருக்கு காலத்திற்கு ஏற்ப பல அறிவுகளையும் அவருக்கு தன் பண்புகளையும் வழங்குகின்றான். (அல் ஃபுர்கான் இதழ், மே ஜூன் 1967, குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 1)

கலீஃபாவின் வாயிலிருந்து ஏதாவது சொல் வெளிவந்து விட்டால் அப்போதே மற்றெல்லா திட்டங்களையும் அனைத்து ஆலோசனைகளையும் பரிசீலனைகளையும் தூக்கி வீசிவிட வேண்டும் என்பது தான் கிலாஃபத் என்பதற்கு அர்த்தமே ஆகும். இனி காலத்தின் கலீஃபாக்களிடமிருந்து கட்டளையாக கிடைத்த திட்டமும், தீர்மானமும் தான் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். ஜமாஅத்தில் இந்த ஆன்மா உருவாகாத வரை அனைத்து குத்பாக்களும் வீண். எல்லாத் திட்டங்களும் வீண். எல்லா ஆலோசனைகளும் தோல்வியே.

(குத்பா ஜுமுஆ ஜனவரி 24, 1936)

காலத்தின் கலீஃபாவின் கட்டளைகள் நம்பிக்கையாளர்களின் உயிராகும். அவற்றுக்கு செவிமடுப்பதும் அதன்படி செயல்படுவதுமே அவர்களின் வாழ்க்கையாகும். இதன் மூலமே அவர்களுக்கு நிரந்தர மகிழ்ச்சிகரமான வாழ்வு கிடைக்கின்றது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்தியாவைச் சேர்ந்த நமக்கு நான்கு முக்கிய அம்சங்கள் அடங்கிய திட்டத்தை செயல்படுத்துமாறு கட்டளை வழங்கியுள்ளார்கள். நாம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ குத்பாக்களை நேரடி ஒளிபரப்பு மூலம் கேட்பது மட்டுமின்றி நமது பிள்ளைகளையும் கேட்கச் செய்ய வேண்டும் என்பது அதில் ஓர் அம்சமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாமில் உள்ளதற்கு ஏற்ப ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்கள் அல்லாஹ் வானத்திலிருந்து இறக்கிய பால் ஆகும். அல்ஹம்துலில்லாஹ். இந்த ஆன்மிக பால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நம்பிக்கையாளர்களின் வீடுகளில் இறங்குகின்றது. இது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

தொலை தூரத்தில் இருந்தாலும் கூட MTA-வின் மூலம் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்தின் தொடர்பை இணைத்து வைத்துள்ளது என்பது அல்லாஹ்வின் கருணையாகும். எனவே எனது குத்பாக்களையும் எனது பல்வேறு நிகழ்ச்சிகளையும் கண்டிப்பாக கேளுங்கள். சில பொறுப்பாளர்கள் கூட குத்பாக்களை ஒழுங்காக கேட்பதில்லை என்று நான் ஆய்வு செய்ததில் தெரிய வருகின்றது. இந்த குத்பாக்களை நான் காலத்தின் தேவைக்கு ஏற்ப கொடுக்க முயற்சி செய்கின்றேன். எனவே உங்களை இத்துடன் கண்டிப்பாக இணைத்துக் கொள்ளுங்கள். இதனால் உலகம் முழுவதும் அஹ்மதிய்யத்தின் போதனைகளில் இருக்கும் ஒற்றுமை முழு உலகிற்கும் தெரியட்டும். (குத்பா ஜுமுஆ, செப்டம்பர் 27, 2013)

இந்த குத்பாக்களில் தர்பிய்யத் மற்றும் நல்லொழுக்க அம்சங்கள் உள்ளன. இவற்றில் இறை வணக்கம் செய்யும் வழிமுறைகள் கற்பிக்கப்படுகின்றன. இறை வணக்கத்தில் நிரந்தரத் தன்மை உருவாக்க அறிவுரை வழங்கப்படுகின்றது. பள்ளிவாசல்களின் முக்கியத்துவம், ஆணவத்திலிருந்து தவிர்ந்திருத்தல், மென்மையை கடைபிடித்தல், விருந்து உபசரிப்பின் வழிமுறைகள், பொறுமையை கைகொள்வதன் பயன்கள், இறைவனை நம்பியிருப்பதை சரியாக புரிந்து கொள்ளுதல், அமைதி, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவம் சார்ந்த இஸ்லாமிய போதனைகள், கிலாஃபத்தின் மதிப்பும், அதன் அருட்களும், பைஅத்தின் நோக்கங்கள், கட்டுப்படுதலின் அருட்கள், பொருள் தியாகத்தின் முக்கியத்துவமும் அதன் பலன்களும், அன்பு, நேசம் மற்றும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கான போதனை, இறைப் பண்புகளை குறித்த அறிவுப்பூர்வமான உரைகள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் மீது செய்யப்படும் ஆட்சேபனைகளுக்கு பதில்கள், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கை கோட்பாடுகள், சோதனைகளின்போது அஹ்மதிய்யா ஜமாஅத் காட்டி வரும் சிறந்த செயல்பூர்வமான முன்மாதிரிகள், அல்லாஹ்வின் பால் மக்களை அழைக்கும் வழிமுறைகள், உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உயிர் மற்றும் பொருள் தியாகங்களின் ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள், உலகம் முழுவதும் நடக்கின்ற ஆண்டு மாநாடுகளின் சம்பவங்கள், ஜமாஅத்தின் நிர்வாக அமைப்பை பற்றிய விரிவான குத்பாக்கள், பொறுப்பாளர்களுக்கு அறிவுரைகள், துஆவின் முக்கியத்துவம் மற்றும் அதன் பலன்கள் போன்றவை இதற்கு சான்றுகளாகும்.

ஜுமுஆ குத்பாக்கள் தவிர அவர்களின் பிற சொற்பொழிவுகளின் வடிவிலும் இந்த ஆன்மிக பால் இறங்குகின்றது. இதில் அவர்கள் நம்மவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சரிசமமாக இஸ்லாத்தின் பலன்களை வழங்குகின்றார்கள். இந்த சொற்பொழிவுகளின் வரிசையில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பல்வேறு நாடுகளின் அரசியல் தலைவர்களுக்கும், பிரபலங்களுக்கும் வழங்கிய உரைகளும் அடங்கும். இந்த சொற்பொழிவுகளில் அவர்கள் உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், ஒற்றுமையை உருவாக்குவதற்கான இஸ்லாமிய வழிமுறைகளும் நீதியை நிலைநாட்டுவதற்கான அழகிய இஸ்லாமிய போதனைகள் போன்றவற்றை எடுத்துரைத்துள்ளார்கள். இந்த குத்பாக்கள் பிறருக்கு பலனளிக்கின்றது போன்றே அஹ்மதிகளாகிய நமக்கும் முக்கியமாகும். இவற்றை ஆழமாக படித்து பிறருக்கும் எடுத்துச் சொல்ல முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) கூறுகின்றார்கள்:

இறைவனுக்கு கிலாஃபத்துடன் ஒரு தொடர்பு இருக்கின்றது. அறிவுகளின் ஆன்மாவை இறைவன் கலீஃபாக்களுக்கு வழங்குகின்றான். காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப கலீஃபாக்களுக்கு எச்சரிக்கை செய்கின்றான். கலீஃபாக்கள் முழு உலகத்தின் தேவையையும் பார்க்கின்றார்கள். எந்த அறிவுகளின் விளக்கம் தேவைப்படுகிறதோ இறைவன் அதை கலீஃபாக்களுக்கு வழங்கி விடுகின்றான். இறைவன் தன் கலீஃபாக்களுக்கு ஒளியை வழங்குகின்றான். அதுபோன்ற அறிவை எந்த ஒரு துறையிலும் எவ்வளவுதான் சிறந்த அறிவாளியாக இருந்தாலும் அதுபோன்ற அறிவை வேறு யாருக்கும் ஒருபோதும் கிடைக்கவே கிடைக்காது. இது அல்லாஹ்வின் அருள் கொடையாகும். அல்லாஹ்வுக்கு தன்னுடைய மார்க்கத்தின் தேவை நன்றாகத் தெரியும். ஒரு வேலையை அவன் யாரிடம் ஒப்படைக்கின்றானோ அவருக்கு அதன் தேவைகளையும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றான். (ஜுமுஆ குத்பா, 26, பிப்ரவரி 1988)

காலத்தின் கலீஃபாவுக்கு இறைவன் மார்க்கப் பணிகளைப் பற்றி புரிய வைக்கின்றான். அவற்றை பிறருக்கு எடுத்துரைக்கும் தன்மைகளையும் வழங்குகின்றான். இதில் இருக்கின்ற அளவுக்கு ஆழமான

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 07 - 14 MAY 2026 Issue No.19 & 20

ACT. MANAGER
ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

உண்மை வேறு எதிலும் இருப்பதில்லை. இதில் நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன.

ஒவ்வொரு காலத்தின் கலீஃபாவிடமும் அந்தந்த காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப வழங்கப்படும் அறிவுரை கண்டிப்பாக மற்ற எல்லா அறிவுரைகளையும் விடவும் நிச்சயமாக சிறந்த தாக்கத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கும். இறைவனுக்கு அந்த கலீஃபாவுடன் இருக்கும் தொடர்பின் காரணமாகவும் இறைவன் அந்த கலீஃபாவிடம் சுமத்தியுள்ள பொறுப்புகளின் காரணமாகவும் அவனே அதற்கான ஒளியையும் வழங்குகின்றான். (ஜுமுஆ குத்பா 5, நவம்பர் 1991)

இந்த சந்தர்ப்பத்தில் நான் மற்றொன்றையும் கூறிக் கொள்கிறேன்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ குத்பாக்களும், சொற்பொழிவுகளும் மட்டும் அஹ்மதிகளாகிய நமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. மாறாக, அவர்களின் மஜ்லிஸே இர்ஃபான் மற்றும் அவர்கள் நிகழ்த்துகின்ற பிற உரையாடல்கள் மற்றும் பல்வேறு கேள்விகளுக்கு அவர்கள் வழங்குகின்ற பதில்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவற்றின் மூலம் நாம் நமது தனிநபர் மற்றும் ஜமாஅத்தின் தர்பிய்யத்திற்கான பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பலன் பெற முடிகின்றது. தஃவத்தே இலல்லாஹ் சார்ந்த கருத்துகளை மஜ்லிஸே இர்ஃபானில் கேட்டு அதனை குறிப்பு எடுத்து, சிந்தித்து செயல்பட்டும், உலக மக்களுக்கு முன் எடுத்து வைத்தும் வருவது அஹ்மதிகளாகிய நமக்கு மிகவும் அவசியமாகும்.

இந்த மஜ்லிஸே இர்ஃபான் அவைகளில் தொழுகை, நோன்பு போன்றவற்றின் முக்கியத்துவம், இமாமுக்குக் கட்டுப்படுவதின் முக்கியத்துவம், பொருள் தியாகத்தின் பரக்கத்துகள் இன்னும் மார்க்கத்தின் பிற விவரங்களைப் பற்றிய மிகவும் தெளிவான விளக்கங்கள் நமக்கு கிடைக்கின்றன. காலத்தின் கலீஃபாவின் மூலம் இறையடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுவதன் முழு உலக அளவிலான காட்சிகளும் காணக் கிடைக்கின்றன. பின்தங்கிய அல்லது உலகளவில் கீழ்நிலையில் உள்ள சமுதாயங்களுக்கு ஆறுதல் அளிக்கவும், சமூகநீதியின் எதிர்பார்ப்புகளை கவனத்தில் கொண்டு அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான எச்சரிக்கை மற்றும் அறிவுரைகள் உலகத்தின் செவிகளைத் தட்டுகின்றன.

ஹஸ்ரத் அமீருல் மூமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 6 ஜூன் 2014-ல் கூறினார்கள்:

இறையடியார்களின் உரிமைகளை நிலைநாட்டுவதன் பால் கவனமூட்டுவதும் கிலாஃபத்தின் நோக்கங்களும் ஒன்றாகும். இந்த உரிமைகளை அங்கீகரிக்கச் செய்வதும் அவற்றை நிலைநாட்டுவதும் அனைவரும் ஒற்றுமையாக இருந்து அந்த உரிமைகளை நிறைவேற்ற முயற்சி செய்து வருவதும் கிலாஃபத்தின் நோக்கங்களும் ஒன்றாகும்.

அன்பிற்குரியவர்களே, நம்பிக்கைக்கு வலுவூட்டுகின்ற ஓர் உண்மையை நான் இப்போது எடுத்துரைக்கின்றேன்;

காலத்தின் கலீஃபாவின் குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகள் உலகில் அனைவருக்கும் சமமாக தம் பலன்களை பொழிந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் இந்த காலத்தில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் தூய போதனைகள் தான் உலகம் முழுவதையும் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் ஒரே சரடில் பிணைத்து வைத்திருக்கின்றது.

சற்று சிந்தித்துப் பாருங்கள்! ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உலகம் முழுவதும் அனைத்து நாடுகள் மற்றும் அதில் வசிக்கும் அனைத்து கருப்பர்கள், வெள்ளையர்கள், பணக்காரர்கள், ஏழைகள், வெவ்வேறு மொழிகள் பேசுபவர்கள், வெவ்வேறு கலாச்சாரத்தை கடைபிடிப்பவர்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள் என அனைவரும் சரிசமமாக ஒரே நேரத்தில் அல்லாஹ்வின் கலீஃபாவுடைய குத்பாவை காது கொடுத்துக் கேட்பதற்காக அமர்கின்றார்கள். இவ்வாறு முழு உலக அளவில் ஓர் ஒற்றுமை மற்றும் சமத்துவத்தின் வியக்க வைக்கும் காட்சி உலகத்தில் தென்படுகின்றது. சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறையும் வரை மேலும் இரவு இருட்டும் நேரம் வரை உலகம் முழுவதிலும் குத்பா கேட்கப்படுகின்றது. சற்று சிந்தித்துப் பாருங்கள்! அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாவைத் தவிர வேறு யாருடைய குரலுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற உணர்வுடன் முழு உலகிலும் ஒரே நேரத்தில் கேட்கப்படுகிறது? இது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) மற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் உண்மைத்துவத்திற்கான மகத்துவம் வாய்ந்த சான்றாகும். உலகில் வேறு எங்காவது இப்படியொரு முன்னுதாரணம் யாருக்கும் கிடைத்தால் அதை முன்வைத்தவாறு நாம் அறைகூவல் விடுக்கின்றோம். ஆனால், யாரும் இதற்கு ஓர் உதாரணத்தை கூட காட்ட முடியாது என்பதையும் நாம் அறைகூவலாக கூறிக் கொள்கிறோம்.


இது தவிர, நம்பிக்கையை வலுவூட்டும் மற்றோர் உண்மையும் உண்டு. இன்றைய நாளுக்கு முன் இது வரை உலக வரலாறு கண்டிராத உண்மை. உலகம் முழுவதும் அஹ்மதிய்யா பள்ளிவாசல்களில் ஒவ்வொரு வாரமும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் முந்தைய வார ஜுமுஆ குத்பாவின் சுருக்கமும் வாசிக்கப்படுகின்றது. முழு உலகிலும் உள்ள அஹ்மதிய்யா பள்ளிவாசல்களில் கிழக்கிலும், மேற்கிலும் கருப்பரும், வெள்ளையரும் எல்லா நாடுகளிலும் வசிக்கும் அஹ்மதிகள் தத்தமது பள்ளிவாசல்களிலும் மிஷன் ஹவுஸ்களிலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் முந்தைய ஜுமுஆ குத்பாவை அனைவரும் ஒன்றாக செவிமடுத்து கேட்கின்றனர். இந்த குத்பாக்களைக் கேட்டு அஹ்மதிகள் அதன்படி செயல்பட முற்படுகின்றபோது இந்த உலகளாவிய சக்தியில் காலத்தின் கலீஃபாவுடைய துஆவும் இறைவனின் பேருதவியும் இதற்கு ஆதரவளிக்கின்றன. பலவீனமாக இருந்தும் ஒவ்வொரு மைதானத்திலும் இவ்வுலகம் பரக்கத்துகளையும் வெற்றிகளையும் பார்க்கின்றது. இதற்கு முன்னர் இவ்வுலகம் இப்படி ஓர் உலக ஒற்றுமையின் காட்சிகளைப் பார்த்ததுண்டா? இஸ்லாமிய உலகிற்கும் இஸ்லாம் அல்லாத உலகிற்கும் இப்படி ஓர் உலகளாவிய அழகும் ஒற்றுமையும் காணக் கிடைத்திருக்கின்றதா? கிடைக்கவில்லை என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த பாதுகாப்பு அரணை நோக்கி விரைந்து வாருங்கள்!

உண்மையுடன் என்

இதன் தொடர்ச்சி 19 ம்-பக்கம்....

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
| opp. Karuna Clinic | Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press, Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad